இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 217 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 17 சனிக்கிழமை 01.07.2017

## கொல்லப்பட்டார் ஐ.எஸ். தலைவர்

ஈரானின் மூத்த தலைவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



பக்தாத், ஜூலை 1
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி கொல்லப்பட்டார் என்று ஈரான் தரப்பு » 24

## வித்தியா படுகொலை வழக்கில்

# அரச சாட்சியாக மாற்றினால் சிஐடிக்கு ரூ. 2 கோடி வழங்க சுவிஸ்குமார் பேரம்

தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
"அரச சாட்சியாகத் தன்னை மாற்றினால் குற்றப் புலனாய்வு அதிகாரிக்கு 2 கோடி ரூபா பணம் தருவதாக வித்தியா படுகொலை வழக்கின் 9ஆவது எதிரியான சுவிஸ் குமார் தன்னிடம் பேரம் பேசினார்" என்று ஆறாவது சாட்சியான முஹமட் இப்ரான் தீர்ப்பாயத்திடம் நேற்றுச் சாட்சியமளித்தார்.
புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான » 25

## எஞ்சிய நிலத்தையும் மீட்க மயிலிட்டியில் ஒன்றுகூடல்

மக்களை அணி திரள அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1
மயிலிட்டி மக்களை எஞ்சிய நில மீட்புக்கு ஆதரவு தெரிவித்து, நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு » 23

## சிறப்பு அதிகாரங்களுடன் இரண்டாவது தடவையும் அரச தலைவராக மைத்திரி

சுதந்திரக் கட்சி யோசனை

கொழும்பு, ஜூலை 1
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர், அவருக்கு மீண்டுமொருமுறை அரச » 23

## முஸ்லிம் மக்களுக்கான உதவிகளில் பாரபட்சம்

யாழ். செயலக கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்ப்பாண மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கான உதவிகள் வழங்குவதில் அரச அதிகாரிகள் பாரபட்சத்துடன் நடப்பதாக, ஆதாரங்களுடன் நேற்றைய கூட் » 04

## இடைக்கால அறிக்கை ஜூலை 6 இறுதியாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 1
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 6ஆம் திகதியுடன் இறுதி செய்யப்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின் » 23

# கூட்டணிக்கு தலைமையேற்க முதலமைச்சரே சரியான ஆள்

நேற்றிரவு திடீரென அவரை நேரில் சந்தித்து சங்கரி இடித்துரைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 1
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் » 23

## வடக்கு மாகாண சபையில் பழைய அமைச்சர்களின் ஆசனங்களை அடுத்தே புதியவர்களுக்கு இடம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
பழைய அமைச்சர்களின் இருக்கைகளைத் தொடர்ந்தே புதிய அமைச்சர்கள் இருவருக்கும் ஆசன ஒழுங்கு பேரவைச் செயலகத்தில் மேற்கொள்ளப்படும் என்று தெரிய வரு » 24

## கோப்பாய் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1
கோப்பாய் மயானத்தை அண்மித்து இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சத்தி வடிவேல் பரநிருபராஸ » 04

## 13ஐ எதிர்ப்பதாலேயே என்னை விரட்டச் சதி

வடக்கு முதல்வர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 1
"ஒற்றையாட்சி எம்மை என்றென்றைக்குமே அடிமைகள் ஆக்கிவிடும். 13ஆவது திருத்தச் சட்டத்துடனான தீர்வை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்க வேண்டும். நான் இதை வலியுறுத்துவதால் என்னை ஓரம் கட்டி அரசியலில் இருந்து விரட்டிவிடப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன"
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (விரிவு 2 ம் பக்கம்)

## காணாமற்போனோர் அலுவலகம் அமைக்க அரசு தாமதிப்பது ஏன்?

தென்னிலங்கை ஒன்றியம் அரசிடம் கேள்வி

கொழும்பு, ஜூலை 1
தாமதம் ஏற்படுத்தாது விரைவில் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்குமாறு அரசதலைவரிடம் » 23

## அரசமைப்பு உருவாக்கத்தை தமிழ்க் கட்சிகளே தடுத்தன

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கிளிநொச்சியில் உரை

கிளிநொச்சி, ஜூலை 1
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகளே இணக்கப்பாடின்றிச் செயற்பட்டன. தற்போது அனைத்து கட்சிகளும் இணைந்து அனைவ » 23

## கருப்பைப்புற்றுநோயை தடுக்க ஊசி மருந்து

தரம் 6 மாணவிகளுக்கு வழங்க அரசு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
கருப்பைப்புற்று நோயைத் தடுப்பதற்காக பெபிலோமா வைரஸ் ஊசி மருந்து வழங்க அரசு தீர்மானித்துள்ளது. தரம் 6 இல் கல்வி பயிலும் 10 வயதை நிறைவு செய்த சகல மாணவிகளுக்கும் இந்த மருந்து வழங்கப்படவுள்ளது. (விரிவு 07 ஆம் பக்கம்)

## வடக்கு எம்.பிக்களுடன் மீனவர் நாளை சந்திப்பு

இழுவைமடி சட்டவரைவு குறித்து முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 1
இழுவைமடி தொடர்பான சட்டவரைவு எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளு » 24

## 760 சுகாதாரத் தொண்டருக்கு கல்வித் தகைமை இல்லை

கூட்டமும் இடம்பெறவில்லை கூறுகிறார் சுகாதார அமைச்சர்

வவுனியா, ஜூலை 1
வடக்கிலுள்ள 910 சுகாதாரத் தொண்டர்களில் 150 பேர் மாத்திரமே அரச நியமனம் பெறுவதற்குரிய தகுதியைக் கொண்டுள்ளனர். ஏனையவர்களுக்கு நியமனம் வழங்கலாமா? என்பது பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் அல்லது அரச தலைவர் மாத்திரமே தீர் » 24

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடங்களுக்கு புதிய கட்டடங்கள்



கிளிநொச்சி, ஜூலை 1
கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் திறன் விருத்திக்கான கட்டடத் தொகுதியும், பொறியியல் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு மாடிக்கட்டடமும் நேற்றுத் திறக்கப்பட்டன. துணைவேந்தர் » 24

## வடக்கு அமைச்சு செயலாளர்களின் பொறுப்புகளிலும் மாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1
வடக்கு மாகாண சபைக்குப் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து அமைச்சுச் செயலாளர்களின் பொறுப்புக்களும் மாற்றப்பட்டுள்ளன. » 23

## தமிழர், சிங்களவர்கள் ஏற்கும் அதிகாரப் பகிர்வே அவசியம்

நல்லிணக்கச் செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
புதிய அரசமைப்பு ஒற்றையாட்சியோ அல்லது கூட்டாட்சியோ எனப் பேரில் வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், தமிழர்களும், சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப் பகிர்வாக அது அமைய வேண்டும்.
இவ்வாறு நல்லிணக்கச் » 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். மாநகரப் பகுதியில் திண்மக் கழிவகற்றல்

யாழ்ப்பாண மாநகர சபை யின் எல்லைக்குட்பட்ட ஜே/68,ஜே/69 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் திண்மக் கழிவு அகற்றும்செயற்பாடுகள் யாழ்ப்பாண மாநகர சபையால் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
இந்த இருகிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், யாழ்., நல்லூர் பிரதேச செயலகஊழியர்கள், உத்தியோகத்தர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள், சொண்ட் அமைப்பின் ஊழியர்கள், கரையோர பாதுகாப்பு படையினர், இரு கிராமங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் உயர்தர மாணவமாணவிகள் மற்றும்கிராமஉத்தியோகத்தர்கள் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர்.
இந்த செயற்றிட்டத்துக்காக குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித ஆரோக்கியநாதர் ஆலய வளவில் ஒன்று கூடினர். இவர்கள் குழுக்களாளப்பிரிக்கப்பட்டுகுருநகர் கடற்கரை வீதிக்கு அனுப்பப்பட்டார்கள்.அங்கு தேங்கிக் கிடந்த குப்பைகள்உரியஉரப்பைகளில் சேகரிக்கப்பட்டுயாழ். மாநகரசபையின்உழவுஇயந்திரங்களில்ஏற்றப்பட்டன.
குருநகர் தொடர்மாடி பகுதி கூட்டித் துப்பரவு செய்யப்பட்டது. குருநகர் கடற்கரை வீதியில் அன்னை வேளாங்கன்னிஆலயம், கொலைவிலக்கி மாதா ஆலயத்தின் அருகில் உள்ள கடலில்தேங்கிக்கிடந்தபாசிகள் மற்றும் கழிவுகள் பெக்கோவாகனம்மூலம் அள்ளப்பட்டுநல்லூர்பிரதேச சபையின் உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டுசெல்லப்பட்டது.
குருநகர் அலுப்பாந்திக் கடற்கரையில்அரசமரக் கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் உள்ள வீதியின் அருகாமையில் இனந்தெரியாதோரால் உரப்பைகளில்குவிக்கப்பட்டிருந்த குப்பைகளும் எடுத்துச்செல்லப்பட்டன.
குருநகர் தொடர்மாடி தொடக்கம் மேற்குப்புறமாககுருநகர்அலுப்பாந்தி வரையிலும் கடற்கரையிலும்கரையோரங்களிலும் இருந்த பற்றைகள், பிளாஸ்ரிக் கழிவுகள் ஆகியவை அப்புறப்படுத்தப்பட்டன. (ற-10, 51)

# ஒற்றையாட்சி அடிமை ஆக்கும்

### வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1
ஒற்றையாட்சி எம்மை என்றென்றைக்குமே அடிமைகள் ஆக்கிவிடும். எமது தனித்துவம் பேணப்பட வேண்டும் என்றால் வெறும் 13ஆவது திருத்தச் சட்டத்துடனான தீர்வை நாங்கள்முற்றுமுழுதாகஎதிர்க்கவேண்டும். இதையே அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஐயா ஆகியோர் ராஜீவ் காந்திக்கு வலியுறுத்தினார்கள். அவர்கள் வலியுறுத்தியதை நான் இன்று வலியுறுத்துவதால் என்னை ஓரம் கட்டி அரசியலில் இருந்து விரட்டிவிட பலநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிலர் சவால்களில் ஈடுபடவும் முன்வந்துள்ளார்கள்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணமத்தியகல்லூரியில்ஆறுமுகநாவலர் சிலை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில்முதன்மைவிருந்தினராகக்கலந்து கொண்டுஉரையாற்றும்போதேமுதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது
நாவலர்தமதுகொள்கைகளில்விட்டுக்கொடுக்காதஒருநிலையைப்பின்பற்றிவந்தமையால் அவர் பலரால் விமர்சிக்கப்பட்ட ஒருவராக உள்ளார். அண்மையில் ஒருவர் என்னிடம் கூறினார் "ஏன் நீங்கள் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் நாவலர் இருந்தது போல் விடாப்பிடியாகநிற்கின்றீர்கள்? சம்பந்தர்போல் விட்டுக்கொடுக்கலாமே" என்று. அதற்குநான் "சம்பந்தர் ஐயா விட்டுக் கொடுக்கின்றாரோ இல்லையோநான்அறியேன். ஆனால் அடிப்படை அத்திவாரத்தை நாங்கள் கெட்டியாகக் கட்டாவிட்டால் முழுக் கட்டடமுமே ஒருநாள் தகர்ந்துவிழுந்துவிடும். பிழையான அத்திவாரத்தில் சரியான கட்டடம் காலாகாலத்தில் நிறுவப்படலாம்என்றுஎண்ணுவதுமடமை" என்றேன். கொஞ்சம்கொஞ்சமாகப்பிறகுகட்டலாம் என்பதுகூடதகுந்தஅத்திவாரம்இட்டபின்னர் தான்பொருந்தும். இதனால்தான்சைவசமய அனுட்டானங்களிலும் அவற்றின் நெறிமுறைகளிலும் ஒரு இறுக்கம் நாவலரால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்பு நிலை வேறு அனுபவ நிலை வேறு. அடிப்படைகளை விட்டுக் கொடுக்காது அன்பு நிலையில் வாழலாம் என்பதை எமக்குணர்த்தியவர் நாவலர்.
தேசியம், சுயநிர்ணயம், தாயகம், தன்னாட்சி, வடக்கு கிழக்கு இணைப்பு என்று அடிப்படைகளைக் கூறிவிட்டு ஒற்றையாட்சியின் கீழ் "13ஆவதுதிருத்தச்சட்டம்முழுமையானநடைமுறைப்படுத்தல்" என்பதைஏற்றுக்கொள்வதென்பது எத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தும்என்றுநாங்கள்புரிந்துகொள்ளவேண்டும். ஒற்றையாட்சிஎன்றவுடன்நாம்கோரிய தேசியம், தாயகம், சுயநிர்ணயம், தன்னாட்சி என்பன இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவன.
13ஆவது திருத்தச் சட்ட முழுமையான நடைமுறைப்படுத்தலின் கீழ் வடக்கு - கிழக்கு இணைப்பு கூட இடம்பெறாது. நாங்கள் கேட்பதில் எதையுமே தராது ஒரு தீர்வைப்பெற எத்தனிப்பதே எமது கொழும்புப் பார்வை. எமது இனப்பிரச்சினையைத்தீர்க்ககொழும்பின்பார்வைஒருபோதும்உதவாதுஎன்பதே எனது கருத்து. அரசியல் பிரச்சினையானது எங்களுக்கு ஏற்பட்ட ஒன்று. நாங்கள் தான் பாதிக்கப்பட்டவர்கள். எமது நிலையில் இருந்துதான் பிரச்சினையை அணுகவேண்டுமே தவிர கொழும்பின் பார்வையில் இருந்தல்ல. ஒற்றையாட்சியில் 13ஆவது திருத்தச் சட்டத் தீர்வானது என்றென்றைக்குமே தமிழ் மக்களைத் தமதுஅடையாளம் தெரியாமல் ஆக்கிவிடும் - என்றார். (ற-10)

## கொழும்பில் டெங்கு ஒழிப்பு

கொழும்பு, ஜூலை 1
கொழும்பு மாவட்டத்தில் நேற்று சிறப்புடெங்குஒழிப்புதிட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அரச தலைவர்செயலணி, இராணுவம் மற்றும் சுகாதார அமைச்சு இணைந்துஇதனைஏற்பாடுசெய்தன.
ஹோமாகம, கஹாதுடுவமற்றும் சீதாவக்கைபிரதேசசெயலகப்பகுதிகளில் இந்த டெங்கு ஒழிப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதுடெங்குநோயாளர்களின் எண்ணிக்கை 74 ஆயிரத்தைத்தாண்டியுள்ளநிலையில் இதுவரை டெங்கு நோயால் 213 பேர்உயிரிழந்துள்ளனர். மேல்மாகாணத்திலலேயே அதிகளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ற-10)

## சிங்கள மொழி பயிற்சி வகுப்புக்கள்

கிளிநொச்சி, ஜூலை 1
மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால்கரித்தாஸ்கியூடெக்நிறுவனஅனுசரணையுடன் கிளிநொச்சிமாவட்டத்தைச்சேர்ந்த இளைஞர் யுவதிகளுக் கான சிங்கள மொழி பயிற்சி வகுப்புகள் நேற்று கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகின.
வகுப்புகள்பிரதிசெவ்வாய்மற்றும் வியாழக்கிழமைகளில் பி.ப. 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரைநடத்தப்படும். ஆறுமாதகால பயிற்சியின் போது இரு தடவைகள்பரீட்சைகள்நடத்தப்பட்டுசான்றிதழ்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
30 மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளில்ஓரிருவெற்றிடங்கள் காணப்படுவதால் இணைய விரும்பும் இளைஞர் யுவதிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு முன்னர் வந்து இணைந்து கொள்ள முடியும் என கிளிநொச்சிமாவட்டசமூகசேவைகள்அலுவலகத்தினர்அறிவித்துள்ளனர். (ற-9)

## முன்னாள்போராளிகளுக்கு சரியான முறையில் உதவி

### மறுவாழ்வளிக்கப்பட்டோரின் ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

திருமலை, ஜூலை 1
மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் சரியான விதத்தில் வழங்கப்படும் என்று தெரிவித்தார் என மறுவாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட நபர்களின் வரையறுக்கப்பட்ட ஒன்றியத்தின் தலைவர் கந்தசாமி இன்பராசா.
மறுவாழ்வளிக்கப்பட்ட 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் சார்பாகவும், போரால் பாதிக்கப்பட்ட மக்களது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயம் நேற்றுத்திருகோணமலையில் திறக்கப்பட்டது.
அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எமக்கு மறுவாழ்வளிக்கப்பட்டு 8 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதுவரை பல நிறுவனங்கள் நமக்கு உதவி செய்து வருகின்றன. அது முழுமையாக அனைவரிடமும் சென்றடையவில்லை.
இந்த ஒன்றியத்தை நிறுவி அதைப் பதிவுசெய்து அதனூடாக வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.
மறுவாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களது இன்னல்களை போக்குவதற்கு பலர் பல வகைகளில் நிதிகளை சேகரிக்கின்றனர்.
எம்மூடாக செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே குறித்த காரியாலயத்தை நாம் நிறுவியுள்ளோம் என்றார்.
திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், இலவச சட்ட உதவி மைய பணிப்பாளர் அருட்தந்தை யோகேஸ்வரன் மற்றும் மறுவாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட நபர்களின் வரையறுக்கப்பட்ட ஒன்றியத்தின் தலைவர் ஆகியோர் இணைந்து காரியாலயத்தைத் திறந்தனர். (ற-10)

## சம்பிக்கரணவக்க உடன் பதவி விலக வேண்டும்

### வலியுறுத்துகின்றார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, ஜூலை 1
சைட்டத்தை அரசுடமையாக்குவது தொடர்பிலான அமைச்சரவையின் முடிவுக்கு எதிராக குரல் கொடுக்கும் அமைச்சர்சம்பிக்கரணவக்க உடனடியாகப் பதவிவிட்டு விலகவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
ஒன்றிணைந்தஎதிர்க்கட்சியின்தொழிற்சங்கப் பிரிவுகளில் ஒன்றான தேசிய வளப்பாதுகாப்பு நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பல்கலைக்கழகமாணவர்கள்மீதுஇராணுவப் படையைக் கொண்டு தாக்குதலை நடத்தி ரணில் - மைத்திரி அரசு தனது அரச பயங்கரவாதத்தை மீள ஆரம்பித்துள்ளது. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இனி வரும் காலங்களில் எடுக்கும் அனைத்துப் போராட்டங்களுக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஆதரவு வழங்கும்.
பயங்கரவாதமும், வன்முறைகளும் அரசின் பக்கமே காணப்படுகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் மீது [illegible] மருத்துவர்களை குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று கூறிய நெவில் பெர்னான்டோதான் இதற்கொரு உதாரணமாகும்.
பண்டாரவளையில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது அந்தப் போராட்டத்துக்கு தானும் ஆதரவளிக்கின்றேன் கூறியுள்ள அரச தலைவர், சைட்டம் எதிர்ப்புபோராட்டத்துக்கும்ஆதரவளிக்கின்றேன் என்று நிச்சயமாக கூற வேண்டும். அவர்இதுவரைஅவ்வாறு கூறவில்லை. அரசமருத்துவ அதிகாரிகள்சங்கம்அரசதலைவரைச்சந்தித்து அண்மையில் பேச்சு நடத்தியது. ஆனால் அந்தச் சந்திப்பு திருட்டுத்தனமானது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருப்பது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கேவலப்படுத்தும்அறிவிப்பாகவேகருதமுடிகிறது. சைட்டம்பல்கலைக்கழகத்துக்கு எதிரான மாணவர்கள் மற்றும் பலரது போராட்டங்களை நீதிமன்ற உத்தரவிலோ அல்லது இராணுவப் படையினரைப்பயன்படுத்தியோநிறுத்திவிட முடியாது - என்றார். (ற-10)

## டொப்லர் கருவி இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 1
காலநிலை தொடர்பில் தகவல் வெளியிடும் டொப்லர் எனப்படும் ரேடார் கருவியை இலங்கையில் அமைப்பதற்கு ஜப்பான் நிதியுதவி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதற்கான நிதியானது நேற்றுநிதி அமைச்சில் வைத்து வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
3.422 மில்லியன் ரூபா நிதி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. முழு நாட்டையும், கடற்கரை பிரதேசங்களையும் மையப்படுத்தி டொப்லர் கருவிகளை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
டொப்லர் ரேடார் கருவியின் செயற்பாடுகளுக்குத் தேவையான தொழில்நுட்ப வசதியை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது. (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையூர் ஸ்ரீ வருண குல விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
(ற-40)



## பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது பஸ்

இலங்கைபோக்குவரத்துச் சபை பேருந்து ஒன்று பாதையை விட்டு விலகித் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பதுளையிலிருந்துகந்தகெதரைக்கு சென்று கொண்டிருந்த பதுளை சாலையைச் சேர்ந்த இ.போ.ச. பேருந்தே பாதையை விட்டுவிலகி தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்து நேற்றுப் பகல் 12 மணியளவில் நடந்துள்ளது. விபத்தில் சாரதி உட்பட 12 பேர் காயங்களுடன் கந்தகெதர அரசினர்மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.
சாரதியின் கவனயீனமே, விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. விபத்துதொடர்பாகமேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றனஎன்றுபொலிஸர்தெரிவித்தனர். (ற-10)

## நுவரெலியாபாடசாலையில் பெற்றோர் - ஆசிரியர் மோதல்

### மூவர் மருத்துவமனையில்

நுவரெலியா, ஜூலை 1
நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டகலை கேம்ரீஜ் கல்லூரியில் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அதில் இரு ஆசிரியர்களும், பெற்றோர் ஒருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் காலை கல்லூரியின் காலைக் கூட்டத்தின்போது பாடசாலை சிறுமிகள் 13 பேரை ஆசிரியர் ஒருவர் இரும்பால் தாக்கினார் என்று கூறப்படுகின்றது.
அதையடுத்துப் பெற்றோர் நேற்றுக் காலை குறித்த ஆசிரியரைச் சந்தித்துக் கலந்துரையாட சென்றனர். ஆசிரியர் கல்லூரியின் மாணவர்களைத் தூண்டிவிட்டு பெற்றோர்களை த்தாக்கும்படி மாணவர்களுக்கு கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் இரண்டு ஆசிரியர்களும், பெற்றொர் ஒருவரும் காயமடைந்து டிக்கோயா கிழங்கன் மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர்.
கல்லூரியின் பாதுகாப்புக் கருதியும் மாணவர்களின் பாதுகாப்புக் கருதியும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கபட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

# ஜனநாயக அரசமைப்பே மக்களின் எதிர்பார்ப்பு

## மூத்த சட்டத்தரணி லால் விஜயநாயக்க சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1
நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது உரிமை அடிப்படையிலான, இலங்கையர் என்று சொல்லக் கூடிய சீர்திருத்தத்துடன் கூடிய அரசமைப்பையே.
இவ்வாறு மூத்த சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்தார்.
புதிய அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் மாநாடு நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாம் இந்த அரசமைப்பை மக்களின் நன்மைக்கு ஏற்ப சீர்திருத்தும் கருத்துக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றோம். அவ்வாறு நாம் மக்களை நாடிச் செல்கையில் மக்கள் இந்த அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பல்வேறு அபிப்பிராயங்களை முன்வைத்தனர். அவற்றில் சில சிறுபான்மை இனத்தவர்களுக்கும், பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் நன்மை தரக்கூடிய பொதுவான கருத்துக்கள் காணப்படவில்லை.
மக்கள் எதிர்பார்ப்பது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய, மக்களின் உரிமைகளைப் பேணக்கூடிய ஜனநாயக ரீதியான அரசமைப்புச் சீர்திருத்தமே. அவர்கள் ஒவ்வொரு விடயங்களை தங்கள் சார்பாக முன்வைத்துள்ளனர். அவற்றை நாம் வழிநடத்தல்குழு மற்றும் நிபுணர்களின் ஆலோசனைகளை கலந்துரையாடல் மூலம் பெற்று புதிய அரசியல் அமைப்பு வரைவதில் உள்வாங்கியுள்ளோம்.
நிறைவேற்று அதிகாரம் உள்ள அரச தலைவர் முறைமையை ஒழித்தல், அதிகாரங்களை சமூகத்தின் அடிமட்டம் வரை நிலவச் செய்தல், சமூக கலாசார விழுமியங்களை பேணிப் பாதுகாத்தல், கருத்து தெரிவிக்கும் உரிமை, நடமாடும் உரிமை என்பன விரிவுப்படுத்தப்பட வேண்டும். வடக்கு தெற்கு இடையிலான நல்லிணக்கம் போன்ற விடயங்களை மக்கள் முன்வைத்தார்கள். இந்தக் கருத்துக்கள் யாவும் பெரும்பான்மை, சிறுபான்மை இன மக்களின் கருத்துக்களுக்கு பொதுவானதாக அமைந்திருந்தது.
வடக்கு மக்கள் சமஷ்டி ஆட்சி முறை தமக்கு வேண்டும் என்றார்கள். ஆனால் பெரும்பான்மை சிங்கள மக்கள் தமக்கு ஒற்றை ஆட்சி முறை வேண்டும் என்று தெரிவித்திருந்தார்கள். நான் நினைக்கிறேன் இந்த சமஸ்டி ஆட்சி முறையில் உள்ள நல்ல விடயங்கள் பற்றிய அறிவு அவர்களுக்குப் போதாது என்று. அவர்கள் இந்த முறைமை மாற்றத்துக்குத் தயாராக இல்லை. அவ்வாறு முறைமை மாற்றம் நடந்தால் அது சமூகத்தை குழப்பும் செயல் என நம்புகின்றார்கள்.
வடக்கில் உள்ள மக்கள் தாம் சமமாக மதிக்கப்படவில்லை, எங்கேயும் தாங்கள் புறக்கணிக்கப்பட்ட வண்ணமே உள்ளோம். ஆகவே எங்களுக்கு சமஷ்டி ஆட்சி வேண்டும், குறிப்பாக மொழி ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகிறோம் என்று கூறினார்கள். அடிப்படை உரிமை மீறல்தொடர்பானவழக்குவிசாரணைகளை நாம் கொழும்பு மேன் முறையீட்டு நீதி மன்றில் நடத்துகிறோம். அதற்கு அதிக செலவுகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான வழக்குகளை மாகாணத்தில் உள்ள மேல் நீதிமன்றங் களில் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
1978ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட யாப்பு நெறிமுறை வாய்ந்தவையாக இல்லை. இதனால் அரசியல் நீரோட்டத்துக்கு அப்பாலே மக்கள் இருக்கின்றனர். தமிழ் மக்களுக்கு சார்பாக அமைச்சர்கள் இருந்தாலும் அவர்கள் மக்களுக்காக இல்லை. அதிகாரம் என்பது மத்தியிலும் பகிரப்பட வேண்டும். 13ஆவது திருத்தச்சட்டம் போதுமானதாக இல்லை. அதில் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. இரண்டு சபை அமைக்கப்பட வேண்டும். அதில் 9 மாகாண சபை பிரதி நிதிகளும் உள்ளடக்கப்பட வேண்டும். அடுத்த சபையில் 9 முதலமைச்சர்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அவர்களுடன் உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டு இந்தச் சபையே தீர்மானங்களை எடுக்க வேண்டும். அரச தலைவருடன் துணை அரச தலைவர் நியமிக்கப்பட வேண்டும். ஓர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் அரச தலைவராக நியமிக்கப்பட்டால் மற்றைய இனத்தில் துணை அரச தலைவர் நியமிக்கப்பட வேண்டும்.
இலங்கை என்ற அடையாளம் எமக்கு வேண்டுமேயானால் இப்போது எமக்கு கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசியல்அமைப்புச்சீர்திருத்தத்துடன் கூடிய யாப்பை உருவாக்க ஒன்றுபடுவோம் - என்றார்.
(ற-10,ரி)

## தேக்கமடைந்த தபால்களை விநியோகிக்க சிறப்புத் திட்டம்

கொழும்பு, ஜூலை 1
கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்ற தபால் ஊழியர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக தேக்கமடைந்த கடிதங்கள் மற்றும் பொருள்களை விநியோகிப்பதற்கு சிறப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தபால் பிரதி அமைச்சர் துலிப் விஜேசேகர தெரிவித்தார்.
தபால் ஊழியர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையில், நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று தபால் தொழிற்சங்கம் அறிவித்தது.
அமைச்சரவையின் துணைக்குழுவொன்றுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. தபால் சேவைகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன.
தபால் தொழிற்சங்கம் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான தபால்களும் ஏனைய தபால் பொதிகளும், தபால் மற்றும் உபதபால் காரியாலயங்களில் தேங்கியுள்ளன என்று தபால் தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.
"இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு விமானங்கள் ஊடாகவும் மற்றும் கடல் மார்க்கமான கடிதங்கள் மற்றும் பொதிகள் விநியோகம் செய்வதும் முற்று முழுதாகப் பாதிப்படைந்துள்ளன. தபால் தொடருந்துகளில் எந்த விதமான தபால் பொதிகளும் கடந்த மூன்று நாள்களும் ஏற்றப்படவில்லை.
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 26ஆம் திகதி நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்ட தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்ற போதும், அரசால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.
தபால் திணைக்களத்துக்கு உரித்துடைய வளங்கள் வெளிநாட்டவருக்கு விற்பனை செய்யப்படமாட்டாது என்று அரசு உறுதியளிக்குமாயின், அந்தத் தருணத்திலேயே போராட்டத்தைக் கைவிட்டு, கடமைக்குத் திரும் பியிருக்கலாம்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-10)

## குளவிக் கொட்டி மூன்று பெண்கள் சிகிச்சையில்

கொழும்பு, ஜூலை1
திம்புள்ள பத்தனை ரொப்கில் தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான மூன்று பெண் தொழிலாளர்கள் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
தேயிலைச்செடிகளிடையே இருந்த குளவிக்கூடு கலைந்து குளவிகள் கொட்டின என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மூவரும் கொட்டகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-10)



## பள்ளத்தில் வீழ்ந்து வான் விபத்து

பதுளை, ஜூலை 1
பதுளையைச் சேர்ந்த ரில்பொல 2ஆம் மைல் கல்லருகே பள்ளாகெட்டுவ என்ற இடத்திலிருந்து பாதையை விட்டு விலகிய வான் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
பதுளை வழியாக அநுராதபுரம் செல்லவந்த வான், பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. வானில் பயணித்த 17 பேர் கடும் காயங்களுடன் பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
விபத்தில் சாரதி உட்பட மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று பதுளை மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்து தொடர்பாக பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-10)

## காலோ பொன்சேகாவின் பதவிக்காலம் நிறைவு

கொழும்பு, ஜூலை 1
இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகாவின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்து.
பேராசிரியர் காலோ பொன்சேகா 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பதவியில் உள்ளார். மருத்துவ சபையின் தலைவர் ஒருவரின் பதவிக் காலம் 5 வருடங்களாக உள்ள நிலையில் அவரின் பதவிக் காலம் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. அவரின் பதவிக் காலத்தை 6 மாதங்களால் நீடிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.
நேற்றுடன் மருத்துவ சபையின் தலைவர் பதவிக்காலம் முடிந்தது. இதுபற்றி சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ள தாக மருத்துவ சபையின் பதிவாளர் டெரன்ஸ் டி சில்வா தெரிவித்தார்.
புதிய தலைவர் ஒருவரை நியமிக்கவோ அல்லது காலோ பொன்சேகாவை மீண்டும் பதவியில் நீடிப்பது தொடர்பாகவே சுகாதார அமைச்சு இதுவரை எந்தவித அறிவித்தலையும் விடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் மீறும் எம்.பிக்களுக்கு கடும் தண்டனை

## புதிய நிலையியற் கட்டளைகள் செவ்வாயன்று நிறைவேறும்

நாடாளுமன்றத்துக்குள் ஒழுக்க விழுமியங்களை மீறிச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் வகையில் ஏற்பாடுகள் அமைந்துள்ள புதிய நிலையியற் கட்டளைகள் எதிர்வரும் செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எனத் தெரியவருகின்றது.

ஜூலை மாதத்துக்குரிய முதல்வார நாடாளுமன்றக் கூட்டத் தொடர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் இதை நிறைவேற்றுவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் அந்த வாரத்துக்குள் எப்படியாவது நிறைவேற்றி விடவேண்டும் என்பதில் சபாநாயகர் உறுதியாக இருக்கின்றார் என்றும் அறியமுடிகின்றது.

இலங்கை நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் நவீன யுகத்துக்கேற்ப முழுமையாக மாற்றியமைக்கப்படவுள்ளன. இதற்கான உத்தேச வரைவு அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

உத்தேச சட்ட வரைவு குறித்து திருத்தங் களை முன் வைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 22ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே, இறுதி வரைவு செவ்வாயன்று நிறைவேற்றப்படவுள்ளது.

புதிய நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் சபை அமர்வுகளின்போது ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றாது குழப்பங்களை ஏற்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு வாரங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்குச் சபாநாயகரால் தடைவிதிக்க முடியும்.

அத்துடன், சபை அமர்வைக் குழப்பியடிக்கும் வகையில் செங்கோல் மீது கைவைத்து அதை தூக்கிச் சென்றால் குறித்த உறுப்பினருக்கு எட்டு வாரங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்குத் தடை விதிப்ப தற்குரிய ஏற்பாடும் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, கேள்வி பதில் நேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு விடயதானத் துக்குப் பொறுப்பான அமைச்சர் கட்டாயம் சபையில் இருக்கவேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை உட்பட ஏனைய விடயங்கள் குறித்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (து)

# அரசதலைவரின் செயலாளர் அபேகோன் பதவி விலகல்

கொழும்பு, ஜூலை 1

அரசதலைவரின் செயலாளர் பீ.பி. அபேகோன் தனிப்பட்ட தேவைக்காக பதவியில் இருந்து விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான கடிதத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் கையளித்துள்ளார். பொது நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியான பீ.பி. அபேகோன் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரச தலைவரின் செயலாளராக நியமிக்கப்பட்டார். (வ-5)

# முஸ்லிம் உணவகம் மீது நெல்லியடியில் கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 1

நெல்லியடி நகரில் உள்ள முஸ்லிம் உணவகம் மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக, நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

உணவகம் மூடப்பட்ட பின்னர், இனந்தெரியாதோர் கல் வீச்சுத் தாக்குதலை உணவகத்தின் மீது மேற்கொண்டுள்ளனர். உணவகத்தின் கண்ணாடிகள் இதனால் உடைந்துள்ளன எனப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார். எனினும் அவர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-5,26)

# எல்லாத்தையும் என் தலையில் கட்டிவிட முயற்சி

## மகிந்த விசனம்

கொழும்பு, ஜூலை 1

எடுத்ததெற்கெல்லாம் என்மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச விசனம் தெரிவித்தார். காலியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமகாலத்தில் நாட்டில் ஏற்படும் பிரச்சினைகள் அனைத்துக்கும் பொறுப்புக் கூற வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது. எடுத்ததெற்கெல்லாம் என்மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. குப்பைமேட்டுச் சரிவுக்கு நான் காரணம் என்றார்கள். சைட்டம் பிரச்சினைக்கு நான்தான் காரணம் என்று கூறினார்கள். உமா ஓயா திட்டப் பாதிப்புக்கும் நான்தான் காரணம் என்கிறார்கள். இதனை அவதானிக்கும் போது எல்லாவற்றையும் என்மீது சுமத்துவது தெரிகின்றது.

கூட்டு அரசின் இரு கட்சிகளினதும் பந்தம் வலுவிழந்து விட்டது. இதனால் என்தலையில் எல்லாவற்றையும் கட்டப்பார்க்கின்றார்கள். அரசு நல்லிணக்கத்தைப் பேசிக்கொண்டே இனவாதத்தையும் பரப்பி வருகின்றது. தனது இயலாமையை மறைக்கவே இப்படியெல்லாம் செய்கின்றது - என்றார். (வ-5)



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் வடதிசை (குபேர வாசல்) கோபுரத்துக்கான அடிக்கல் நேற்று காலை நடப்பட்டது. பெருந்திரளான பக்தர்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர். (ற)

# 30 வருடப் போரைவிட இனவாதமே கொடியது

## அமைச்சர் சந்திம வீரக்கொடி எச்சரிக்கை

போரால் இந்த நாடு 30 வருடங்கள் மாத்திரம் தான் துன்பத்தை அனுபவித்தது. ஆனால் இனவாதத்தைத் தூண்டினால் 100 வருடங்கள் துன்பத்தை அனுபவிக்க வேண்டிவரும். பிறக்கப் போகும் குழந்தைக ளைக் கூட இந்த ஆபத்து விட்டு வைக்காது என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

"போர் காரணமாக நாம் உயிர்களை மாத்திரம் இழக்கவில்லை. பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தையும் இழந்தோம். இனங்களிடையே நல்லுறவை இழந்தோம். அந்தப் போரை 30 வருடங்களுக்குப் பின் மிகவும் கஷ்டப்பட்டு நிறுத்தினோம். இனிமேல் அப்படியானதொரு நிலமை இந்த நாட்டுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது.

இப்போது நாட்டில் தேவையற்ற விதத்தில் இனவாதம் தூண்டப்படுகின்றது. பாரதூரத்தை அறியாதவர்கள் தான் இதைச் செய்கின்றனர். இந்த இனவாதம் போரை விடவும் மோசமான விளைவுகளை நாட்டுக்கு ஏற்படுத்திவிடும்.

நாம் மிகவும் கவனமாகச் செயற்படவேண்டும். அனைத்து அரசியல்வாதிகளும் நிதானமாக வார்த்தைகளைப் பாவிக்கவேண்டும். இனவாதத்தை யார் தூண்டினாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இனவாதத்தைக் கட்டுப்படுத்துவதில் அரசு தாமதம் காட்டக்கூடாது. இனவாதத்துக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்" என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி மேலும் தெரிவித்தார். (த-ய-3)



வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் திருமதி பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் மா.சின்னத் தம்பி கலந்துகொண்டார். விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (வ-4,ரி)

# முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## முஸ்லிம்....

டத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இ.ஆர்னோல்ட், அ.அஸ்மின் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர். சுமார் மூன்று மணி நேரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

"முஸ்லிம் மக்கள் 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த அத்தனை பேரும் தற்போது மீள்குடியமர்வுக்கு வரவில்லை. வந்திருப்பவர்களுக்காகவது வசதிகளைச் செய்து கொடுங்கள்" என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரினார். 2 ஆயிரத்து 400 குடும்பங்கள் வரையில் மீள்குடியமரவேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்போது மாவட்டச் செயலர், "ஒழுங்கு முறையான பதிவுகளின் அடிப்படையில் 674 குடும்பங்களே மீள்குடியமர்ந் துள்ளன. அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படும்" என்று தெரிவித்தார்.

இங்குள்ள அரச அதிகாரிகள் பாரபட்சத்துடன் நடப்பதாக முஸ்லிம் மக்கள் குற்றம் சுமத்தினர். யாழ்ப்பாண நகரில், 14 குழிக் காணியைத் தமிழ் குடும்பமும், முஸ்லிம் குடும்பமும் சரிசமாகப் பங்கிட்டுள்ளனர். தமிழ்க் குடும்பத்துக்குக் கடந்த ஆண்டு வீடு வழங்கப்பட்டது. முஸ்லிம் குடும்பத்துக்கு வீடு கோரிய போது, மாநகர சபை எல்லைக்குள் 7 குழிக்கு உட்பட்ட காணிக்கு வீடு வழங்க முடியாது என்று அதிகாரிகள் மறுத்துள்ளனர். தமிழ்க் குடும்பத்துக்கு ஒருவாறும், முஸ்லிம் குடும்பத்துக்கு ஒருவாறும் அதிகாரிகள் நடந்து கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அதிகாரிகள் பாரபட்சம் காட்டாது செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினார். சட்டம் எல்லோருக்கும் பொதுவானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வீடுகள் கிடைக்கப்பெற்று இன்னமும் மீளக்குடியமராத முஸ்லிம்களின் வீடுகளை மீளப்பெறுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைச் சுட்டிக்காட்டிய முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற வீடுகளில் அவர்கள் குடியமராத இடங்களை ஒளிப்படங்கள் எடுத்து அதனைக் கூட்டத்தில் காண்பித்தனர். இதன்போது யாழ்ப்பாணப் பிரதேச செயலர், "ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முஸ்லிம் ஒருவரே, இங்கு தங்கியுள்ள எமக்கு வீடுகள் தரவில்லை. ஆனால் வேறு இடங்களில் இருந்து இங்கு வந்து செல்லும் முஸ்லிம்களுக்கு வீடுகளைக் கொடுத்துள்ளீர்கள் என்று கூறினார். அதன் பின்னரே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது" என்று சுட்டிக்காட்டினார். அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதனை மாற்றியமைக்கப்படும் என்று கூறப்பட்டது.

இதேவேளை, மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களைத் தெரியப்படுத்தி மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தலை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இதன்போது வழங்கினார். (த-5)

## கோப்பாய்...

(வயது - 29) என்பவரே உயிரிழந்தார்.

கைதடி - மானிப்பாய் வீதியில் உள்ள குறித்த மயானத்தை அண்மித்து நேற்றுமுன்தினம் மாலை விபத்து இடம்பெற்றது. அவர் கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாயுடன் மோதுண்டே விபத்து இடம் பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெய்ப்பூர் நிறுவன ஆண்டுவிழா இன்று

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர்புனர்வாழ்வு நிறுவனத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நிறுவன முன்றிலிலும் யாழ்ப்பாண பரியோவான் கல்லூரி மைதானத்திலும் இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜெய்ப்பூர் நிறுவன தலைவர் மருத்துவர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலர் பொ.தயானந்தனும், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக சீமாட்டி புடைவையக உரிமையாளர் ரி.சற்குணராசாவும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-12)

## 9 பேரிடம் ரூ. 3000 தண்டம் அறவீடு

அனுமதிப்பத்திரமின்றி வீடுகளில் அளவுக்கு அதிகமாக கள் வைத்திருந்த 7 பேருக்கும், குடியிருப்புகளில்டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்பின் சுற்றாடலை வைத்திருந்த இருவருக்கும் சாவகச்சேரி நீதிவான் மன்றில் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர், மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் சாவச்சேரி நீதிவான் மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கே கடந்த புதன்கிழமை இவ்வாறு தண்டம் அறவிடப்பட்டது. வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (21-9)

## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

காரைநகர், ஜூலை1

காரைநகர் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு வைத்திய சாலை மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட உள்ளதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற உள்ளதால் வைத்தியசாலை அபிவிருத்தியில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் நா.பாலகிருஸ்ணன் கேட்டுள்ளார். (21-250)

### பல வருடங்களாக இழுபறிநிலையில் இருந்த

# விளாவெளி மயானம் மானிப்பாய்க்குரியது

### வலி.தென்மேற்கு பிரதேச செயலர் யசோதா உதயகுமார் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை1

எல்லை நிர்ணய அறிக்கையில் உள்ள வரைபடத்தின் பிரகாரம் ஜெ146 கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட பண்டத்தரிப்பு, பிரான்பற்று விளாவெளி மயானம் வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரிவுக்கு உட்பட்ட மானிப்பாய் பிரதேச சபைக்கே உரித்தானது, என வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் ஆதார பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர், வலி.மேற்குசங்கானைபிரதேச செயலாளர், மற்றும்வலி.மேற்குபிரதேசசபை அலுவலர்களிடையே பிரான்பற்று விளாவெளி மயானம்தொடர்பானஎல்லை நிர்ணய இறுதி கட்ட தீர்மானத்துக்கான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டுகருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பண்டத்தரிப்பு, பிரான்பற்று பகுதியில் உள்ள விளாவெளி இந்து மயானம் வலி.தென் மேற்கு பிரதேச சபைக்கு உரித்தானதா? அல்லது வலி.மேற்கு பிரதேச சபைக்கு உரித்தானதா? என்பது தொடர்பாக பல வருடங்களாக ஆராயப் பட்டது. இதன் பிரகாரம் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினாலும், மக்களின் அபிப்பிராயத்தினூடாகவும், விளாவெளி இந்து மயானத்தின் எல்லை நிர்ணயம் மற்றும் வரைபடம் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்கு சட்டபூர்வமானதாக அங்கீகரிக்கப்பட்டது. விளாவெளி மயானத்துக்குச் செல்லும் எல்லை வீதியானது வலி.தென்மேற்குபிரதேச சபையின் கீழ் உள்ளது என வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரமும் வலி.தென்மேற்கு பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் பிரதேச சபைக்கே உரித்தானது என்பது உறுதியாகவுள்ளது. என்றார். இதனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்தவர்களுக்கு சட்டபூர்வமாக வரைபடரீதியான விளக்கத்தையும்பிரதேச செயலாளர் திருமதி ய.உதயகுமார் விளக்கினார். தொடர்ந்து இனிவரும் காலங்களில் வலி.மேற்கு ஆதன பதிவில் உள்ள குடும்பங்கள் அனைத்தும் வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு உப அலுவலக ஆசனத்துடன் சேர்த்துக் கொள்ளப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சி.சி.மகேந்திரன், பிரதேச சபை முன்னாள்உறுப்பினர்களான அ.குமணன், ஜிப்ரிக்கோ மற்றும் சங்கானை பட்டின அபிவிருத்தி சபை உறுப்பினர்களான சிவ தட்ணாமூர்த்தி, குணசிறி, வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் கு.சற்குணராஜா, வலி.மேற்கு பிரதேச சபை முன்மை முகாமைத்துவ உதவியாளர் எஸ்.சந்திரமௌலி, மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (21-50)



## சித்த வைத்திய ஏடு வாசித்தல் யாழ்.பல்கலையில் இடம்பெற்றது

### தமிழ்நாட்டு வல்லுநர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஏடுகள் வாசிப்பதற்கான பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகில் அண்மையில் நடைபெற்றது.

சுதேசமருத்துவதிணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலுடன் நடைபெற்ற இரண்டுவார கால பயிற்சிப்பட்டறையில் சித்தமருத்துவ துறை மாணவர்கள், சுதேச மருத்துவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். சித்த மருத்துவர்களிடையே அருகிவரும் ஏடு வாசிக்கும் பழக்கத்தை முன்னேற்றும் வகையில் இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து ஏடு வாசிப்பதில் சிறப்புத் தேர்ச்சியுடைய பயிற்றுனர்கள் வரவழைக்கப்பட்டு இந்த பயிற்சிப்பட்டறை வழங்கப்பட்டது.

இறுதிநாள் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கலந்துகொண்டு பயிற்றுனர்களுக்கு கௌரவிப்பை வழங்கினார். இந்த நிகழ்வில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் மற்றும் மாகாண சுதேச மருத்துத்திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி ஆர்.துரைரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (4)

## ஆசிரியர்களுக்கு இன்று செயலமர்வு

தென்மராட்சி, ஜூலை 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான 'கலங்கரை விளக்காகி கரை சேர்ப்போம்' எனும் தொனிப் பொருளிலான செயலமர்வு இன்று சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்தார். வேள்ட் விஷன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்ட பிரிவின் அனுசரணையுடன் வலய வழிகாட்டலும் ஆலோசனை அலகினால் தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள் நடத்தப்படுகிறது. கடந்த வாரம் கல்வி வலய 1ஏபி1சி தர பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு செயலமர்வு நடத்தப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-9)

## றோட்டரக்ட் கழகத்தால் குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை1

யாழ்ப்பாண றோட்டரக்ட் கழகமும், யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து மாபெரும் குருதிக் கொடை முகாமொன்றை நேற்று முன்தினம் நடத்தினர்.

இந்தச் செயற்திட்டமானது யாழ்ப்பாணப்போதனாவைத்தியசாலை குருதி வங்கியின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாண உயர்தொழில் நுட்பக்கல்லூரியில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது. இதில் யாழ்ப்பாண றோட்டரக்ட் கழக அங்கத்தவர்கள், யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப மாணவர்கள் மற்றும் ஆர்வம் மிக்க குருதிக் கொடையாளர்கள் எனப் பலரும் பங்கு கொண்டனர். (21)






மீசாலை தொடருந்து நிலையத்துக்கு அருகில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்தின் தளபாடங்கள் இனந்தெரியாதோரால் அடித்து நொறுக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்வி நிலைய தளபாடங்கள் அடித்து நொறுக்கப்பட்ட மைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை யெனவும் தெரிவிக்கப் பட்டது. (4-9)

## கடற்றொழில் பரிசோதகர் காரைநகருக்குவேண்டும்

### தொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை

காரைநகருக்குத் தனியான கடற்றொழில் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று காரைநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

காரைநகர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

காரைநகரில் ஆயிரத்து 300 கடற்றொழில் குடும்பங்கள் உள்ளன. காரைநகர் பிரதேசத்துக்கான பதில் கடற்றொழில் பரிசோதகரைச் சந்திப்பதற்காக வடலியடைப்புக்குச் செல்லவேண்டியுள்ளது. அதனால் இங்குள்ள கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே காரைநகருக்கான தனியான கடற்தொழில் பரிசோதகர் ஒருவரைநியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்து 40 குடும்பங்களே மீனவர் காப்புறுதித் திட்டத்தில் இணைந்துள்ளனர். ஏனைய கடற்தொழில் குடும்பங்களும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டதோடு, அதனால் கடற்றொழிலாளர் குடும்பங் களுக்கு ஏற்படும் நன்மைகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (4-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# போரால் துவண்டு தவித்தபோது வந்துதித்தது ஜெய்ப்பூர் நிறுவனம்

## அமைச்சர் சத்தியலிங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1

"காலத்தின் தேவை கருதி போரால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 30 வருடங்களாக அளப்பரிய சேவைகளை வழங்கிவரும் ஜெய்ப்பூர் நிறுவனத்தைப் பாராட்டுகின்றேன். எறிகணை வீச்சுக ளாலும், நிலக்கண்ணி வெடிகளிலும் சிக்கி பலர் தங்கள் அவயவங்களை இழக்க, அவர்களுக்குச் செயற்கை அவயவம் பொருத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது இந்த நிறுவனமே"

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் முப்பது ஆண்டுகள் சேவை நிறைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போரால் காயமடைந்து அங்கங்களை இழந்தவர்கள் தொடர்பில் நாம் கூடிய கவனமெடுத்து செயற்படுவது அவசியம். 1987ஆம் ஆண்டில் வடக்கில் போர் சூழ்நிலை நிலவியபோது அங்கவீனமானவர்களுக்கு செயற்கை அவயவம் பொருத்தும் சேவையை வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் ஜெய்பூர் நிறுவனம் தனது 30 வருட சேவையை நிறைவு செய்கின்றது. காலத்தின் தேவை கருதிப் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 30 வருடங்களாக அளப்பரிய சேவைகளை வழங்கிவரும் இந்த நிறுவனத்தை மனதாரப் பாராட்டுகின்றேன். தொடர்ச்சியான எறிகணை வீச்சுக ளாலும், நிலக்கண்ணி வெடிகளிலும் சிக்கி பலர் தங்கள் அவயவங்களை இழந்துள்ளனர். குறிப்பாக 80 களில் இவ்வாறாக அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவம் பொருத்தும் வசதிகள் இலங்கையில் காணப்படவில்லை. இந்தியாவுக்கு சென்றே பலர் இவ்வாறான சேவைகளை பெற்றுக்கொண்டனர். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் 1987ஆம் ஆண்டு இதே மாதம் முதலாம் திகதி ஜெய்ப்பூர் செயற்கை அவயவம் பொருத்தும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து அந்த நிறுவனம் தனது சேவையை சிறப்புடன் வழங்கிவருகின்றது. அவ்வப்போது பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள் நிதியுதவிகளை வழங்கி வந்திருந்தாலும் நிதிதட்டுப் பாடு நிலவிய காலங்களிலும் தனது சேவையை தொடர்ச்சியாக இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது. இதன்மூலம் பலர் பலனைப் பெற்றுள்ளனர்.

தற்போது எமது அமைச்சும் பல சிறப்புச்செயற்திட்டங்களை சிறப்புத் தேவையுடையவர்களுக்காக செய்து வருகின்றது. குறிப்பாக எமது அமைச்சு போரால் காயமடைந்து முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக வைகறை எனும் மருத்துவ மறுவாழ்வு நிலையத்தை வவுனியாவில் ஆரம்பித்து சேவைகளை வழங்கி வருகின்றது.

இதேபோன்று படுக்கையில் இருக்கும் நோயாளிகளின் நன்மைகருதி நடமாடும் மருத்துவ சேவையொன்றை வடக்கின் 3 மாவட்டங்களில் ஆரம்பித்துள்ளோம். இதற்கான நிதியுதவியை வெளிநாடுகளில் வாழுகின்ற எமது புலம்பெயர் உறவுகள் வழங்கிவருகின்றனர். ஏனைய மாவட்டங்களிலும் இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றோம். சுகாதார அமைச்சால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாதாந்த உதவுதொகையாக ஆயிரத்து 500 ரூபாவும் கழுத்துக்குக் கீழ்இயங்காத வர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றது. அதேபோன்று சிறப்புத் தேவையுடையோருக்காக வடிவமைக்கப்பட்ட 700 மலசலகூடங்களை இதுவரையில் கட்டிக்கொடுத்துள்ளோம். எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் கூடிய சிறப்புத் தேவைக்குட்பட்டவர்களுக்கான வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு நெதர்லாந்து அரசு ரூபா இரண்டாயிரம் மில்லியன் வழங்கவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 45ஆயிரம் சிறப்புத் தேவையுடையவர்கள் இருப்பதாக சொல்லப்படுகின்றது. எனினும் இவர்களின் சரியான எண்ணிக்கை, சிறப் புத் தேவையின் தன்மைகள் தொடர்பில் எமது அமைச்சால் கணக்கெடுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புக்களுக்குச் சென்று விவரங்களை திரட்டும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இவை அனைத்தும் நவீன தரவுசேமிப்பு முறையில் சேகரிக்கப்பட்டு அதனடிப்படையில் மாகாணத்துக்கான சிறப்புத்தேவையுடைய வர்கள் தொடர்பான திட்ட மொன்றை வகுப்பதற்கு திட்ட மிட்டுள்ளோம் - என்றுள்ளது. (4)

## வெள்ளிவிழா இன்று

ஜனசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவும், கூட்டுறவாளர் தினமும், இன்று சனிக்கிழமைபி.ப.2 மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது.

நிலையத்தின் தலைவர் சி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட சி.க.வ.கூ.ச.சமாச தலைவர் செ.இலகுநாதன் சுன்னாக ப.நோ.கூ.சங்க தலைவர் சி.குமாரவேல், சமூக ஆர்வலர் ஆ.சொர்ணலிங்கம், உடுவில் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பா.பாலரவி ஆகியோர் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (21)

## பாடத்திட்டத் தெரிவுக்கான கலந்துரையாடல் இன்று

கலைமாணிப் பட்டப் படிப்பு (வெளிவாரி) அரையாண்டு அடிப்படை 2013/2014 கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பாடத்திட்டத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல் இன்றும் நளையும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாளை மற்றும் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்து 10 தொடக்கம் 14ஆம் திகதிவரை பதிவு நடவடிக்கைகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலும், அறிமுக நிகழ்வு எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளன.

மேலும் தெரிவு செய்யப்பட்டோரின் விவரங்களை மற்றும் மேலதிக விவரங்களும் (www.codl.jfn.ac.lk) என்ற இணையத்தளத்திலும், (www.facebook.com/uoj.codl) என்ற முகப்புத்தகப் பக்கத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. என யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் தெரிவித்தார். (21)

## பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

காரைநகர் ஜூலை 1

காரைநகர் களபூமி பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

காரைநகர் களபூமி கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் காரைநகர் களபூமி பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் களபூமி கலையகத்தின் செயற்பாடுகள் நோக்கங்கள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளதால் கூட்டத்துக்கு கொழும்பு வாழ் காரைநகர் களபூமி மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(21-250)

## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

மக்கள் வங்கியின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை காலை 8 மணி தொடக்கம் பி.ப.2 மணி வரை ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கியில் குருதிக் கொடை முகாம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (23)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 80 | 50 | 80 | 60 |
| கத்தரி | 120 | 160 | 100 | 160 | 180 |
| கரட் | 280 | 300 | 260 | 180 | 300 |
| மரவள்ளி | 60 | 80 | 50 | 60 | 80 |
| பயிற்றை | 120 | 140 | 100 | 120 | 140 |
| பாகல் | 120 | 150 | 140 | 160 | 170 |
| கருணைக்கிழங்கு | 120 | 140 | | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 80 | 100 | 85 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 300 | 320 | 280 | 260 | 360 |
| பூசணி | 80 | 110 | 80 | 100 | 80 |
| தக்காளி | 120 | 160 | 120 | 160 | 130 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 60 | 60 |
| கீரை | 40 | 30 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 35 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 200 | 300 | 260 |
| புடோல் | 100 | 80 | 70 | 100 | 80 |
| கோவா | 130 | 200 | 140 | 160 | 160 |
| வெண்டி | 100 | 60 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 140 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 60 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 80 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 160 | 300 | 240 | 180 | 300 |
| இராசவள்ளி | 250 | - | 350 | 300 | 260 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 180 | 200 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 800 |
| நண்டு | 400 | 300 | 400 |
| கணவாய் | 700 | 800 | 800 |
| பாரை | 600 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 800 |
| சீலா | 500 | 500 | 500 |
| விளை | 450 | 500 | 500 |
| முரல் | 450 | 400 | 450 |
| கும்பிளா | 400 | 300 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 |
| ஓரா | 400 | 400 | 450 |
| திரளி | 250 | 200 | 200 |
| நகரை | 300 | 200 | 400 |
| ஊடை | 150 | 150 | 200 |
| ஒட்டி | 250 | 300 | 250 |
| திருக்கை | 350 | 250 | 400 |
| மதனம் | 200 | 150 | 300 |
| கொய் | 160 | 80 | 80 |
| பாலை | 250 | 250 | 400 |
| வாளை | 150 | 200 | 400 |

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவம் மற்றும் கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இரண்டு நாள் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணி வரை மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பைப் புற்றுநோயை தடுக்க தரம் 6 மாணவிகளுக்கு ஊசி

யாழ்ப்பாணம், ஜூலை 1

கருப்பைப் புற்றுநோயைத் தடுப்பதற்காக பெபிலோமா வைரஸ் ஊசி ஏற்றும் வேலைத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இந்த மாதம் இந்தப் பணி ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவிக்கின்றது. இது தொடர்பில் குறித்த பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்த ஊசி ஏற்றும் வேலைத்திட்டம் தரம் 6 இல் கல்வி பயிலும் 10 வயதை முழுமையாகப் பூர்த்தி செய்த சகல பெண் பிள்ளைகளுக்குமானது.

இலங்கை முழுவதும் வருடத்துக்குச் சுமார் ஆயிரம் கருப்பைப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர். உலகம் முழுவதும் கருப்பைப் புற்றுநோயைத் தடுக்கும் வகையில் இரு வகையிலான முக்கிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கருப்பைப் புற்று நோய் முக்கியமாக ஏற்படுவதற்கான காரணத்தைப் பரிசோதனை செய்தல் மற்றும் கருப்பைப் புற்றுநோய் ஏற்படுவதற்காக முக்கிய காரணியாக அமையும் பெபிலோமா வைரஸ் நோயைத் தடுப்பதற்கு எச். பி. வி. ஊசி ஏற்றுதல் என இரு முறையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. அதில் கருப்பைப் புற்று நோயைத் தடுப்பதற்கான பரிசோதனை 1996 ஆம் ஆண்டு தொடக்கம் சிகிச்சையின் மூலமாக 35 வயதுடைய பெண்களுக்காக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கருப்பைப் புற்று நோயைத் தடுப்பதற்காக ஊசி ஏற்றுதல், எச். பி. வி வேலைத் திட்டம் இந்த மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளது- என்றுள்ளது. (4)

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கு நிலுவையாக பல லட்சம் ரூபா

## அதிகாரிகளுக்கோ நிலுவை ஏதுமில்லை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கு மாகாண கல்வி அமைச்சிலும், கல்வித் திணைக்களத்திலும் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு எதுவித நிலுவைகளும் இல்லை. ஆனால் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மட்டுமே நிலுவைகள் வழங்க நிதி இல்லை என்று அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கின்றனர். இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கல்வித் திணைக்களத்தில் இடருதவிக்கடன் பெற்றவர்களிடம் இருந்து வட்டியுடன் கடன் அறவிடப்படுகின்றது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு உரிய காலங்களில் வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைகளை வடக்கு மாகாணம் இதுவரை வழங்கவில்லை. அதிபர்கள், ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் லட்சம் ரூபா நிலுவைகள் வழங்கப்படவேண்டியுள்ளன. இதனை உடனடியாக வழங்காதுவிட்டால் கற்பித்தல் பணிகளைப் புறக்கணிக்க வேண்டிவரும்.

சம்பளநிலுவைகள் இன்னும் வழங்கப்படாதமை தொடர்பில் பல தடவைகள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றிடம் எடுத்துக் கூறியும் இன்னமும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் எவரும் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. மாறாக ஞாயிற்றுக் கிழமைகளிலும், பொது விடுமுறை நாள்களிலும் அதிபர்களையும், ஆசிரியர்களையும் பாடசாலைகளை நடத்துங்துங்க[illegible] என்று திணைக்களத் தலை[illegible] வர்கள் பணிப்பது வேதனை[illegible] தரும் விடயமாக உள்ளது. தொழில் செய்வோருக்கு ஊ[illegible]யம் வழங்காவிட்டால் மா[illegible]றத்தைக் காண முடியாது[illegible] எனவே அதிபர்கள் ஆசிரிய[illegible]களுக்கு வழங்கவேண்டி[illegible] நிலுவைகளை உடனடியா[illegible] வழங்குங்கள். வழங்காவி[illegible]டால் கற்பித்தல் பணிகளை[illegible] புறக்கணிப்பதைத்தவி[illegible] வேறு வழியில்லை - என்[illegible]றுள்ளது. (4

# 164 பேருக்கு நலன்புரிக் கொடுப்பனவு மாகாணத் திணைக்களம் வழங்கியது

கிளிநொச்சி, ஜூலை 1

மாகாணச் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் 164 பேருக்கு சமூக நலன்புரிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுய தொழிலுக்காக 27 பேருக்கும், தற்செயல் நிவாரணம் 84 பேருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் 53 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன. கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவு 8 பேருக்கும் தற்செயல் நிவாரணம் 30 பேருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் 20 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவு 3 பேருக்கும் தற்செயல் நிவாரணம் 23 பேருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் 19 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவு 13 பேருக்கும் தற்செயல் நிவாரணம் 31 பேருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் 5 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன. பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவு 3 பேருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் 9 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன என்றுமாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் தற்செயல் நிவாரணம் என்பது வீடு எரிதல் மற்றும் யானையின் தாக்கம் போன்றவற்றுக்கு வழங்கப்படும் உதவி. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வாறன இடர் இல்லாத காரணத்தால் தற்செயல் நிவாரணம் வழங்கப்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-6)

# ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதைத் தடுக்கவும்

## விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்குக் கிளிநொச்சியில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், சங்கானைப் 'பிரதேச செயலர் பிரிவில் உள்ள பகுதிகளில் ஆழ் துளைக் கிணறுகளுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று குறித்த பிரதேச விவசாயிகள் கோரினர்.


கோப்புப் படம்

"சங்கானைப் பிரதேசத்தில் அதிகளாவான விவசாய நிலங்கள் காணப்படுகின்றன.

ஆழ்துளைக்கிணறுகளால் எமது பிரதேச நீர் வளம் பாதிப்படைகிறது. நன்னீர் அற்றுப்போய் உவர்நீர் உருவாகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. எனவே இவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஆழ்துளைக் கிணறுகளைப் புதிதாக அமைப்பதை கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தனர்.

"எமது மாவட்ட நீர் வளத்தை பாதுகாக்கும் வகையில் மாவட்டச் செயலரினால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க வேண்டுமானால் முன் அனுமதி பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே பொருத்தமான இடங்களில் மட்டும் புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க அனுமதி வழங்கப்படுவதுடன் ஏனையவை நிராகரிக்கப்படும்" என்று சங்கானைப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து சங்கானை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-8)

# சின்ன வெங்காயம் கிலோ 400 ரூபா

தென்மராட்சி, ஜூலை 1

வடக்கில் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ள நிலையில் தென்மராட்சிப் பிரதேச சந்தைகள் உட்பட பல சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ சுமார் 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. சந்தைகளில் பெரிய வெங்காயம் கிலோ 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த வருடம் மழைவீழ்ச்சி குறைவாக இருந்தமையால் கிணறுகளில் தண்ணீரின் அளவு வற்றியுள்ளது. வெங்காயச் செய்கையில் விவசாயி கள் ஈடுபடவில்லையென்றும், இதனையடுத்து சின்ன வெங்காயத்தின் விலை அந்தர் 20 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதெனவும் வியாபாரிகள் தெரிவித்தனர். (4-9)

# அச்சுவேலி சந்தைக் கட்டடம் ரூ.80 மில்லியனில் உருவாக்கம்

அச்சுவேலி பொதுச்சந்தை வளாகத்தில் 80 மில்லியன் ரூபா செலவில் சந்தைக்கான கட்டடம் அமைக்கப்பட வுள்ளது. மாடிக் கட்டடத் தொகுதியின் கீழ்த்தளத்துக் கான கட்டுமான வேலைகள் இந்த வருடம் ஆரம்பமாகும். மேல் மாடிக் கட்டுமானம் 2 ஆம் கட்டமாக நடைபெறவுள்ளது. சந்தைக் கட்டுமானத்துக்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் யு. ஜெலீபன் தெரிவித்தார். "வலி.கிழக்குப்பிரதேச சபைக்கான சந்தையின் வருடவருமானம் உட்பட சபைக்குக் கிடைக்கின்ற வருமானத்தில் 75 வீதத்துக்குக் குறையாத வருமானம் வலி.கிழக்குப் பிரதேசசபையின் அச்சுவேலி [illegible] கின்றது. 2017 ஆம் ஆண்டுக்கான சந்தைக் குத்தகை மட்டும் ஒருகோடியே 14 லட்சம் ரூபாவுக்கு வழங்கப்பட்டது. இந்த நிலையில் அச்சுவேலி பொதுச் சந்தைப்பகுதி குறிப்பிடத்தக்க அபிவிருத்தி இன்றிக் காணப்படுகின்றது" என்று [illegible] கவலை தெரி[illegible]கின்றனர். "அச்சுவேலி சந்தைக் கட்டடத்துக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு தளங்களைக்கொண்ட கட்டடத்தொகுதியில் முதலாம் கட்டவேலைகள் இந்த வருடம் ஆரம்பமாக உள்ளன. தற்பொழுது மரக்கறிச் சந்தை நடைபெறும் பகுதியை உள்ளடக்கிய நிலையில் கட்டுமானம் நடைபெறவுள்ளது. சந்தையின் வழமையான செயற்பாடுகளுக்[illegible] இடையூறு இல்லாத வ[illegible]யில் புதிய கட்டடத்துக்கா[illegible] கட்டுமான வேலைகள் நடை[illegible]றவுள்ளன. முதலாம் கட்[illegible] வேலையாக மாடிக் கட்ட[illegible]தின் கீழ் தள வேலைக[illegible] நடைபெறும்" -என்றார் பி[illegible]தேச சபைச செயலர். (4-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளை
# ற்றச்சாட்டில்
# தான மூவர்
# மறியலில்

நாச்சி, ஜூலை 1
ப்பாணம் கிளிநொச்சி
ட்டங்களில் அண்மை
இடம்பெற்ற கொள்
ளுடன் தொடர்பு
குற்றச்சாட்டில்
ான 3 பேரையும் 14
ள் விளக்கமறியலில்
குமாறு கிளிநொச்சி
ன்று உத்தரவிட்டது.
ங்கேணி, உடுத்
. பூநகரி, கல்லாறு
களில் அண்மைய
களில் பணம்,
கள் கொள்ளையிடப்
டன் வீட்டு உரிமை
ர்களும் தாக்கப்பட்டி
னர். இந்தக்
ச்சாட்டில் இரண்டு
ங்களுக்கு முன்னர்
ரம் பொலிஸார் 5
ரக் கைது செய்தது
ஒரு தொகைப் பணம்
ம் நகைகள் மட்டு
, வாள்கள், மோட்
சைக்கிள்கள் என்பன
றயும் கைப்பற்றிய
தெரிவித்தனர்.
கள் விளக்கமறி
வைக்கப்பட்டிருக்
லையில், பூநகரி
லிஸ் நிலையப்
ப்பதிகாரி தலைமை
ன குழுவினரும்
நாச்சி, முல்லைத்தீவு
ட்ட பிரதி பொலிஸ்மா
ரின் சிறப்புப் பிரிவின
இணைந்து நேற்று
தினம் 3 சந்தேக
ளைக் கைது
னர்.
களிடமிருந்தும் ஒரு
தி நகைகள்
பட்டன.
களை எதிர்வரும் 13
திகதி வரை விளக்கம
ல் வைக்க நீதிமன்று
ரவிட்டது. இந்தக்
ளைகளுடன்
புடைய
சாட்டில் இன்னும்
கைது செய்யப்பட
னர் என்று பொலி
மேலும் தெரிவித்த
(4-6)

# புலம்பெயர்ந்தோரின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றன

## வவுனியாவிலேயே இந்த நிலமை

வவுனியா, ஜூலை 1
புலம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகளை அபரித்து அதில் சட்டவிரோதமாகக் குடியிருப்பவர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது.

அவ்வாறு அபகரிக்கப்பட்ட ஒருவரின் காணி, உரிமையாளரிடம் ஒப்படைக்கப் பட்டது. எனவே புலம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகளில் சட்டவிரோதமாகத் தங்கியிருப்போர் அந்தக் காணிகளிலிருந்து உடன் வெளியேற வேண்டும்.

இவ்வாறு வவுனியா பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியா பால மோட்டை கிழவி குளம் பகுதியைச் சேர்ந்த புலம்பெயர்ந்து சென்ற ஒருவருடைய காணியை அந்தப் பகுதியைச் சேர்ந்த வேறொருவர் சட்டவிரோதமாக அபகரித்து அதில் தங்கியுள்ளார். அந்தக் காணியை அவர் மீள ஒப்படைப்பதற்கு இணங்கவில்லை என்று தெரிவித்து குறித்த காணியின் உரிமையாளர் வவுனியா பிரதேச செயலகத்தில் முறையிட்டிருந்தார். இதனை அடுத்தே பிரதேச செயலகத்தால் மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் அண்டு போர் காரணமாக வவுனியா பால மோட்டைப் பகுதியிலிருந்து தனது குடும்பத்தினருடன் இந்தியாவுக்கு அகதியாகச் சென்ற ஒருவர் தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான சூழ்நிலையினையடுத்து கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் திரும்பியிருந்தார். அவர் தனது காணியென அடையாளப்படுத்திய பாலமோட்டை கிளவி குளம் பகுதியிலுள்ள ஒரு காணியைச் சென்று பார்த்தார். காணியை அந்தப் பகுதியிலுள்ள வேறொரு நபர் அபகரித்து அதில் தங்கியுள்ளமையை அவதானித்தார்.

இதையடுத்து காணியின் உரிமையாளர் தனது காணியை மீட்டுத்தருமாறு வவுனியா பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்தார். வவுனியா பிரதேச செயலகத்தினர் அதன் ஆவணங்களை ஆராய்ந்த போது, புலம் பெயர்ந்து சென்று நாடு திரும்பிக் காணியை உரிமைகோரும் பெ.ஆறுமுகம் என்பவரது பெயரிலேயே காணி அனுமதிப்பத்திரம் உள்ளமை தெரிய வந்தது.

இதையடுத்துச் சட்டவிரோதமாகக் காணியில் தங்கியுள்ளவரை உடனடியாக காணியிலிருந்து வெளியேறுமாறு வவுனியா பிரதேச செயலகத்தினர் அறிவுறுத்தினர். வவுனியாவில் புலம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் அதிகமாக இடம் பெற்று வருகின்றன. அதனால் புலம் பெயர்ந்து சென்றவர்களின் காயிணில் தங்கியுள்ளவர்கள் அவர்களது காணியிலிருந்து வெளியேறுமாறு வவுனியா பிரதேச செயலகம் கோரியுள்ளது. (4-21)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 5 பேருக்கு ஒரு லட்சம் தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 1
உழவியந்திரங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 5 பேருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் தண்டம் விதிக்கப்பட்டது.

அனுமதிப்பத்திரம் இன்றி உழவியந்திரத்தில் மணல் ஏற்றிய 4 சாரதிகளுக்கு முறையே 30 ஆயிரம், 25 ஆயிரம், 15 ஆயிரம், 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சிறிய ரக உழவியந்திரத்தில் (லான் மாஸ்டர்) மணல் ஏற்றிய சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4-6)

# சாரதிப் பத்திரமின்றி வாகனம் ஓட்டியவர் செலுத்தினார் தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 1
சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வீதியில் வாகனம் செலுத்தியவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிமன்று.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபரைக் கைது செய்த பளை பொலிஸார் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தினார். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா தண்டம் வதிக்கப்பட்டது. (4-6)

# வடக்கில் மருத்துவ தேவைகளை
# ீர்ப்படுத்துமாறு ராஜித பணிப்பு



ழ்ப்பாணம், ஜூலை 1
டக்கில் மருத்துவத்துறையில்
ணப்படும் முக்கிய பிரச்சினைகளுக்
த்தீர்வுகாண உடன்நடவடிக்கை எடுக்
மாறும் சுகாதார அமைச்சின் உயர்
திகாரிகளுக்கு அமைச்சர் ராஜித
னாரத்ன பணித்துள்ளார். வடக்கு
ட்டுமன்றி கிழக்கு மற்றும் வடமேல்
காணங்களில் அமைந்துள்ள
தன்மை வைத்தியசாலைகளின்
ளணி வளத்தை யும் நிவர்த்தி செய்
மாறு ராஜித பணித்துள்ளார்.
ாதார அமைச்சின் தலைமையகத்
அகில இலங்கை மக்கள் காங்கிர
ின் பிரமுகர்கள் அமைச்சர் ராஜித
னாரத்னவுடன் சந்தித்துக் கலந்து
ரயாடினர்.

இதன்போது மன்னார் சிலாவத்துறை, புத்தளம், சம்பாந்துறை, குருநாகல், கிண்ணியா தோப்பூர் ஆகிய வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பிலும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்தும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் எடுத்துரைத்தார்.

இடர்களின் பின்னர் இந்தப் பிரதேசத்தில் நோயாளர்கள் படுகின்ற அவஸ்தைகள் மற்றும் ஒழுங்கான மருத்துவ வசதிகள் கிடைக்காமல் பிரதேசத்தில் அடிக்கடி நிகழும் இறப்புக்கள் தொடர்பிலும் அமைச்சர் ராஜிதவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அவற்றைப் பரிசீலித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, வைத்தியசாலைகளின் குறைபாடுகளைத் தீர்ப்பது குறித்த முன்னமொழிவுகளுக்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

இதன்போது, சுனாமிக்குப் பின்னர் தற்காலிகக் கட்டடத்தில் இயங்கிவரும் கிண்ணியா வைத்தியசாலையை ஆறு மாடிக் கட்டடத்தில் நிரந்தரமாக அதே இடத்தில் அமைப்பதற்கான 22 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான முன்மொழிவுகளை நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் சுகாதார அமைச்சரிடம் கையளித்தார். (4)

# நோயற்று நீண்ட ஆயுள் பெற்றிட



★ஆரோக்கிய வாழ்வுக்கான உணவுத் தட்டுமாதிரி உணவுத்தட்டின் அரைப்பங்குக்கு மாச்சத்தான உணவுகளான சோறு, உருளைக்கிழங்கு, மரவள்ளி, பலாக்காய், அரிசிமா தயாரிப்புக்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்வோம்.

★அதன் 2/3 பங்குக்கு மரக்கறிவகைகள், பச்சை இலைவகைகளை எடுத்துக் கொள்வோம்.



★அதன் 1/3 பங்குக்கு தாவர, விலங்கு புரதங்களான, இறைச்சி, மீன், கருவாடு, முட்டை, நெத்தலி, பயறு, பருப்பு, சோயா போன்ற வற்றில் சிலதை சேர்த்துக் கொள்வோம்.

*தகவல்*
*சு.வை.அ.பணிமனை,*
*யாழ்.மாநகரசபை*

# பன்னாட்டுக் கூட்டுறவு தினம் அடுத்த வருடம் வடக்கில்

## பிளாஸ்ரிக் அரிசி ஒரு மாயை என கூறுகிறார் அமைச்சர் ரிசாத்



கொழும்பு, ஜூலை 1
பன்னாட்டுக் கூட்டுறவு தினத்தை வடக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் நடத்துவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அவரது அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணக் கூட்டுறவு அமைச்சர்கள், பிராந்திய கூட்டுறவு ஆணையாளர்கள் கைத்தொழில் வர்த்தக அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோரின் நீண்ட கால முயற்சி, பங்களிப்பு மற்றும் பகீரத பிரயத்தங்களினால் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டுறவுக் கொள்கை கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தையும் வலுவூட்டலையும் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது.

பாரம்பரியமாகாவும், மக்களுடன் பின்னிப் பிணைந்ததாகவும் கூட்டுறவுத்துறை உள்ளது.

கடந்த காலங்களில் இந்தத் துறையில் ஏற்பட்டிருந்த சீரழிவு காரணமாக அதைக் கட்டியெழுப்பும் வகையிலேயே புதிய திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

நாடெங்கிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தீர்வையற்ற வாகனம் அல்லது லொறி ஒன்றை வழங்க வேண்டும் என்று கடந்த வருடப் பன்னாட்டுக் தின விழாவில் கூட்டுறவு ஊழியர்கள் அரசதலைவரிடம் கோரியிருந்தனர்.

இதற்கென அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பிலான முன்னேற்றகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சதொச நிறுவனத்தின் மூலமாக 8 ஆயிரம் பிரத்தியேக தனியார் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்த வருடம் அவ்வாறு ஆயிரம் நிலையங்களை அமைக்கப்படவுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம். இது நடைமுறைக்கு வந்தால் கிராமப்புறம், நகரப்புறம் என்ற பேறுபாடின்றி ஒரே விலையில் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்தகாலங்களில் நட்டத்தில் இயங்கி வந்த சதொசவை இலாபகரமான தாக்கி வினைத்திறன்கொண்ட மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய நிறுவனமாக மாற்றி இருக்கின்றோம்.

சதொசாவின் வளர்ச்சியைப் பொறுக்க முடியாத, மக்கள் நலனுக்குக் குந்தகமாகச் செயற்படும் தீயசக்திகள் அந்த நிறுவனத்தின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தி அதனை விழ்த்தும் முயற்சியில் செயற்படுகின்றன.

பிளாஸ்ரிக் அரிசி என்ற ஒரு மாயையை சதொச நிறுவனத்துடன் இணைத்துப் பரப்பிய பரைப்புரைகள் இந்தச் சதியின் பின்னணியே. சில ஊடகங்கள் இதனை பெரிது படுத்தின - என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பேருந்துக் கட்டணம் இன்று முதல் நடைமுறைக்கு

இலங்கைப் போக்குவரத்துத் துறையில் புதிய பேருந்துக் கட்டணம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவ்ரத்துசபை தலைமை அதிகாரி பி.எச்.ஆர்.ரி.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

புதிய பேருந்துக் கட்டண மறுசீரமைப்பு தொடர்பாகப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பேருந்துகளில் புதிய கட்டணங்கள் காட்சிப்படுத்தப்படவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கும் அதேவேளை, பேருந்துக் கட்டணம் உரியவகையில் செயல்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கு நாடு தழுவிய ரீதியில் பரிசோதனைகள் இடம்பெறும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகளை 0115 559 595 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும்.

(த)

# மின் கட்டண உயர்வை மூடி மறைக்கவேண்டாம்

## மின்சாரசபைத் தொழிற் சங்கங்கள் அமைச்சரிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை01

மின்கட்டணத்தை உயர்த்தும் நோக்கம் அரசுக்கு இருந்தால் அதை மூடி மறைக்காமல் பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென இலங்கை மின்சார சபை தொழிற்சங்கச் சம்மேளனம் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டியவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை மின்சார சபையின் தொழிற்சங்கச் சம்மேளனம் நடத்திய கூட்டத்தில் உரையாற்றிய சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் இவ்வாறுதெரிவித்தார்.

> ❝ மின்சார சபையில் ஏற்படும் வீண்விரயங்கள் காரணமாகவே சபைக்குத் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வருகின்றது. இந்த வீண்விரயங்களைக் குறைத்தால் மக்கள் மீது மேலதிக சுமைகளைச் சுமத்தவேண்டிய நிலைஏற்படாது எனவும் அவர் கூறினார்.

மின்சார சபையில் ஏற்படும் வீண்விரயங்கள் காரணமாகவே சபைக்குத் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வருகின்றது. இந்த வீ ண்விரயங்களைக் குறைத்தால் மக்கள் மீது மேலதிகச் சுமைகளைச்சுமத்தவேண்டிய நிலை ஏற்படாது எனவும் அவர் கூறினார். (த-ய)

## சுகாதார அமைச்சில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை குறித்து விசாரணை

கொழும்பு, ஜூலை 01

சுகாதார அமைச்சுக்குள் பல்கலைக்கழக மாணவர்கள் அத்துமீறிப் புகுந்து கலவரம் செய்தபோது அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டம்,ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்னாயக்க பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அடையாள அட்டையை அணிந்தவாறே கமராவுடன் நின்றிருந்த ஊடகவியலாளரைத் தாக்கியமை குற்றமெனத் தெரிவித்த அமைச்சர் சாகல ரத்னாயக்க, ஊடகவியலாளர்களுடன் பொலிஸார் சுமுகமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, இவ்வாறான இக்கட்டான சந்தர்ப்பங்களில்பொலிஸாரின்பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் நடந்துகொள்ளவேண்டிய பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கும் உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-ய)

## உள்நாட்டு பால் உற்பத்தி குறித்து கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 1

தாங்கள் முகம் கொடுத்துவரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்கள் அரச தலைவரின் இணைப்பதிகாரிகளுடன் நேற்று முன்தினம் அரச தலைவர் செயலகத்தில் கலந்துரையாடியுள்ளனர்.

ஐக்கிய இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளரும், மாகாண சபை உறுப்பினருமான நாமல் கருணாரத்னவின் தலைமையிலான குழு அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவரின் ஆலோசகர் சாந்த பண்டாரவையும் ஏனைய அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியது.

தரக் கட்டுப்பாடு என்ற பெயரில் நாளாந்தம் 12 இலட்சம் லீற்றருக்கும் அதிகமான பால் வீசியெறியப்படும்அவலம்,மில்கோ நிறுவனத்தின் சீரற்ற நிர்வாகம், அம்பேவலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பால்மா உற்பத்திப்பிரிவு மூடப்படும் அபாயம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டன.

இது தொடர்பில் அரச தலைவருடன் விரைவில் கலந்தாலோசித்து பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய தீர்வொன்றைப் பெற்றுத்தருவதாகஆலோசகர் சாந்த பண்டார உறுதியளித்தார் என நாமல் கருணாரத்ன தெரிவித்தார். (த)

**பெயர்மாற்றம்**

சாவகச்சேரி வடக்கு, மீசாலையில் வசிக்கும் **சிவசம்பு பிரதீபானந்தன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **சிவா பிரதீப்** என மாற்றம் செய்வதோடு இது தொடர்பான சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- **சிவா பிரதீப்** -

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள SUPERCUP 50 மோட்டார் சைக்கிள் (யப்பான்) விற்பனைக்குண்டு.
077 151 0306/021 224 2966

**பெயர்மாற்றம்**

வண்ணாங்கேணி பளையைச் சேர்ந்த யோகேந்திரன் உதயலதா ஆகிய நான் **துளசி** எனும் பெயரை கொண்ட எனது பிள்ளையின் பெயரை இன்றிலிருந்து **அபி** என பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
யோ. உதயலதா

**வீடு வாடகைக்கு**

இந்து குடும்பத்துக்கேற்ற W.A.Silwa Mw, வெள்ளவத்தையிலுள்ள சமையலறையும் 3 அறையும் கொண்ட 1500Sqft வீடு வாடகைக்கு உண்டு.
076 389 8991

**விற்பனைக்குண்டு**

ஆடியபாதம் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் அரைக்கும் ஆலை இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.
077 197 2732/ 075 076 5328

**தேவை**

இணுவிலில் பிரபல்யமான புடைவைக் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
(CS.1507) (14)
021 300 1155/ 077 470 5401

**காணி விற்பனை**

கோண்டாவில் கிழக்கில் சகல வசதிகளையும் கொண்ட 5 பரப்புடன் வீடு வளவு விற்பனைக்குண்டு. தோட்டம் செய்யக்கூடிய உகந்த நிலம் பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் விரும்பப்படமாட்டாது.
076 930 1805

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

நல்லின அல்சேசன் ஜேர்மன் சப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- இ. தயாநிதி
பிடாரி அம்மன் கோயிலுக்கு அருகில்.

**வேலையாள்கள் தேவை**

(சுரேஸ் மோட்டோர்ஸ் அன் இன்ஜினியறிங்)
☑ **எழுதுநர் 3** (பெண்கள் - மோட்டார் உதிரிப்பாக அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
☑ **மெக்கானிக்** (முழுமையான அறிவு விரும்பத்தக்கது)
☑ **பெயின்ரர்**
☑ **மெக்கானிக் பழக விரும்புபவர்கள்** (தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
077 706 4110 நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

**வேல் முருகன் ஜோதிட நிலையம்**
உலக பிரசித்தி பெற்ற ஜோதிடர்
**சாய் கிருஷ்ணதாஸ் குருக்கள்**



இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஷ்டி செய்வினை கோளாறு (Black Magic) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.
077 819 3119, 077 821 4052
இல.40, தல் அரன, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.



ஸ்ரீ காளியம்மன் துணை
**பண்டித் - குமார் சாஸ்த்திரி**
**ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்**
தொடர்புகளுக்கு
077 251 8305 / 077 467 0325

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஷ்டி செய்வினை கோளாறு (Black Magic) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.
நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலின்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)

**ஐரோப்பிய STUDENT விசா**

*Medicine *Engineering *Business Management
* Language Studies * Hospitality & Tourism
*IT & many more...
- NO Need IELTS
- NO Age Limit
- NO Need Sponsor
- No Need Bank Balance

2017 September Intake now on

Contact : EURO UNI
No. 44, Vajira Road, Colombo - 04
email : eurounilk@gmail.com
Phone - 077 4796 483

TIES STUDY IN CANADA
"Study in Canada... Step up in Life"
PROGRAMS OFFERED
INFORMATION TECHNOLOGY
BUSINESS ADMINISTRATION
HOTEL MANAGEMENT
ST.CLAIR COLLEGE, Canada
ESL OPTIONS
Scholarship Available
Work Permit after Graduation
PR options Available
ST.CLAIR COLLEGE, WINDSOR, ONTARIO



Spot Interview on 1st, 2nd & 3rd July 2017
PATHWAY PROGRAM AVAILABLE
SCHOLARSHIP OPPORTUNITY AVAILABLE
AUTHORIZED COUNSELLOR NOT AGENT
Students of ICGE currently studying in Canada commenced in ... 2017
TIES, 273, Main Street, Northern Province, Jaffna, Srilanka
JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!
admission@THIGUVI.com | www.thiguvi.com | (+94) 021 454 8464 021 221 7400

**ஆங்கிலப்பயிற்சிக்கு NO.1 பயிற்சி மையம்**

IELTS Life Skills -A1, B1
திருமணம் செய்து நிரந்தர விசாவில் U.K செல்பவர்களுக்கானது
# UK ... online listening ... DMI ...
# Visa ...
Hotline 0777 17 35 17
Fee 9500/
... www.itdmi.com/ls ... www.itdmi.com/lifeskill-english

Spoken English ... IELTS Life Skills ... IELTS Life Skills ... 9500/- ...
DMI, British Council ... IELTS ...

IELTS
ACADEMIC MODULE , GENERAL MODULE
We offer:
A practice workbook
A 30 hour online IELTS preparation course
A reference library membership to access IELTS material
Access to the IELTS Top Tips seminar
#Latest course Material #unique Test Tips
#40 hrs with free 4 mock exams
DMI COMPUTER EDUCATION

SPOKEN ENGLISH
ஆங்கிலப்பேச்சுக்கு உத்தரவாதம்
www.itdmi.com/english

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி | M.M.V. வீதி | No. 174 கண்டி வீதி, HNB | No. 130 K. K. S வீதி, NSB | A9 வீதி |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 | Tel.:021-228 5655 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இயேசுதாசன் அருளானந்தம்**

"ஓராண்டு போனாலும் எம் உள்ளங்களில் - உங்கள் நினைவு ஒரு நொடிகூட போகவில்லையே அப்பா...."

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

மண்ணில் 05.03.1942
விண்ணில் 01.07.2016

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முருகேசு ஐயாத்துரை**

மலர்வு 30.01.1936
உதிர்வு 15.07.2013

நான்காண்டுகள் ஆனதுவோ - உங்களது
பூமுகம் காணாமல்!!!
ஒற்றுமையே பலம் என்று - எமக்கெல்லாம்
வழிகாட்டி வளர்த்தீரே - இன்று
தாமே எம்மை விட்டு பிரிந்ததேன்?
என்றும் தங்கள் நினைவுகளுடனேயே வாழ்கிறோம்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

ஜனனம் 20 . 03 . 1938



மரணம் 01 . 06 . 2017

கடந்த 01.06.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் சிதம்பரப்பிள்ளை நடராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.07.2017) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

25/1, தாமரை வீதி,
ஆறுகால் மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவுத்துளிகள்

மலர்வு 19 . 04 . 1973



உதிர்வு 25 . 06 . 2015

**திரு. வல்லிபுரநாதன் தீபறாஜ்**

( கணக்காளர் - லண்டன் (புளியங்கூடல்) )

திதி : பூர்வபக்க அஷ்டமி (வளர்பிறை) 01.07.2017

எம்குடும்பத்தின் தீபஒளியே !
ஆண்டுகள் இரண்டானதே நீயும்
ஆண்டவன் அடியில் இணைந்தே!
நம்பமுடியவில்லை எம்மால் ...
தினமும் உன்னை நினைத்தே
திசைகள் தோறும் பார்த்தே
கனவில் கண்டு விழித்தே
காலம் செல்கிறதே ராஜீ,
காணவில்லை உன்னை இன்னும் ...
கண்கள் மலரச் சிரிப்பாயே!
காந்தமுடன் கதைப்பாயே!
கண்மணியே உனை மறவோம்!
காலம் உள்ளமட்டும் நாங்கள் ! உன்
ஆத்மா சாந்தியடைய எம்
கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்!
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

வி. வல்லிபுரநாதன் (தந்தை) - தெகிவளை
உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தமிழினி உமாசந்திரன்**



அன்னை மடியில்
26.10.1977

ஆண்டவன் அடியில்
13.07.2016

**என்னுயிர் அம்மா !**
ஆசையாய் பெற்றெடுத்து தொட்டிலிட்டு அழகாய் பாட்டிசைத்து
என்னை வளர்த்த என்னுயிர் தாயே !
உன்பொன்னுடல் என்னை ஏந்தித் தாங்கி அன்புடன் பாலமுதமூட்டி
வளர்த்த கைகளைத் தேடுகின்றேன் என் அம்மா !
என்னையே நினைத்து எனக்காகவே நீதாண்டா
என் உலகம் என்று எனக்காகவே வாழ்ந்த என் செல்ல அம்மா !
என்னுயிர் உள்ளவரை நீதானம்மா என் இதயதெய்வம் மறுபிறப்பு ஒன்றிருந்தால்
நான் உங்கள் மகனாக உங்கள் மடியில் தவழ ஆண்டவனை வேண்டி நிற்கிறேன் தாயே !
கட்டழகில் பெட்டகமாய் கண்மணியாய் ஆசை அண்ணாவிற்கு அன்பு தங்கையாக
அன்புத் தம்பிமாருக்கு ஆசைஅக்காவாகவும் செல்லத்தங்கையின்
உயிர் அக்காவாகவும் இருந்த எங்கள் ஆசைச் செல்வமே
தமிழா ! மின்னி முழங்க முன் எங்களனைவரையும் விட்டுப்பிரிந்து
இன்றுடன் ஒருவருடமாகிறது தமிழா !
மீண்டும் நம் குடும்பத்தில் ஒருத்தியாய் வந்து பிறப்பாய் என்ற நம்பிக்கையுடன்
வாழ்கின்றோம் கண்மணியே !

*உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**உ. ஜனனன் (மகன்)**
**ஆனந்தி (அப்பா)**
**அம்மா, அண்ணா, தம்பிமார், தங்கை**

அன்னாரின் இல்லத்தில் நாளை (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எங்கள் செல்வத்தின் முதலாமாண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
ஆலடி, வல்வெட்டித்துறை.
குடும்பத்தினர்.


# மாணவரைத் தூண்டிவிட்டு அரசைக் கவிழ்க்க முடியாது

## சுகாதார அமைச்சர் ராஜித திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 1
பல்கலைக்கழக மாணவர்களைத் தூண்டிவிட்டுக் கலவரம் செய்வதன் மூலம் அரசைக் கவிழ்க்க முடியாது எனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
சூழ்ச்சியொன்றின் மூலமாக அரசொன்றைக் கவிழ்க்க முயன்று தோற்றுப்போன பல சம்பவங்கள் இந்நாட்டில் ஏற்கனவே நடந்துள்ளன. ஆயுதப் பலத்தையும், சதிகளையும் முன்வைத்து நடத்தப்பட்ட பல போராட்டங்கள் தோல்வியடைந்துள்ளன.

மக்களின் ஆணைப்படிதேர்ந்தெடுக்கப்பட்ட அரசொன்றை அவர்களது ஆணைப்படியே வீழ்த்தமுடியுமே தவிர, சதிகளாலும் புரட்சிகளாலும் கலவரங்களாலும் அதைச் செய்யமுடியாது என்பதை இலங்கையின் வரலாறு பலமுறை தெட்டத்தெளிவாகக் காட்டியிருக்கிறது. சுயநல அரசியல்வாதிகள் சிலர் இந்த அரசுடன் நேருக்குநேர் மோதமுடியாமல் பல்வேறு கலகங்களை உருவாக்கிக் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கப் பார்க்கிறார்கள். இன, மத, மொழி பேதங்களை முன்வைத்து அவர்கள் செய்துவரும் மறைமுக சதிகளை மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். இந்த நாடு சகல இனத்தினருக்கும் சொந்தம். இங்கு எந்த இனத்துக்கும் பாரபட்சமோ பாகுபாடோ கிடையாது. அரசைக் கவிழ்ப்பதனால் தேர்தலொன்றின் மூலமே அதைச் செய்யமுடியும் என்பதை சுயநலவாதிகளும் விசமிகளும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (கு-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வியகங்களின் தரத்தை நிர்வகிப்பதற்கு அதிகார சபை

கொழும்பு, ஜூலை 1
அரச மற்றும் தனியாரினால் நடத்தப்படும் உயர் கல்வியகங்களின் தரத்தை நிர்வகிப்பதற்கான அதிகாரச பையொன்றை அமைக்க அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.
இதற்கான சுருக்கப் பிரேரணையொன்று இப்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அது நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவுடன் அதிகார சபை நியமிக்கப்படுமெனவும் மின்சக்தி பிரதிய மைச்சர் அஜித்.பீ.பெரேரா தெரிவித்தார்.
அரச மற்றும் தனியார் உயர்கல்வி நிலையங்களினதும் தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களினதும் கல்வித் தரம் பற்றிப் பல்வேறு தரப்புகளிலிருந்தும் சந்தேகங்களும், விமர்சனங்களும் எழுந்துள்ளதால் அவ்வாறான உயர்கல்வி நிலையங்களின் தரத்தை நிர்ணயிப்பதற்காகவே இந்த அதிகாரசபை அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

# பௌத்த ஆலய விடயங்களில் தலையிட உரிமை கிடையாது

## அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
இலங்கையிலுள்ள பௌத்த ஆலயங்களின் முற்றுமுழுதான நிர்வாகம் அந்த ஆலயங்களின் தலைமைத் தேரர்களிடமே உள்ளது எனவும், அந்த விவகாரங்களில் தலையிட அரசுக்கோ அல்லது அரச நிறுவனத்துக்கோ எந்தவிதமான உரிமையோ அதிகாரமோ கிடையாது எனவும் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். மஹியங்கனை ரஜமகா விகாரையில் நடந்த வைபவமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பௌத்த ஆலய விவகாரங்களில் தலையிட எந்தவொரு அரச நிறுவனத்துக்கும் அதிகாரம் கிடையாது. சில ஊடகங்களில் எமது பௌத்த விகாரைகள் பற்றி வெளிவரும் செய்திகள் மனவேதனையை உண்டுபண்ணுகின்றன.
ராங்கிரி தம்புள்ள ரஜமகா விகாரையில் பணமோசடி நடந்திருப்பதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இத்தகைய செய்திகள் ஆதாரமற்றவை, உண்மைக்குப் புறம்பானவை. இவ்வாறான செய்திகளை வெளியிடுவதன் மூலம் ஊடகங்கள் பௌத்த மதத்தின் புனித்துக்குக் களங்கம் விளைவிக்கின்றன. உண்மையான பௌத்தர்களின் மனங்களை வேதனைப்படுத்துகின்றன - என்றார். (த)

## மத்திய வங்கியின் யாழ். பணியகச் செயற்பாடுகள் கிளிநொச்சிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய உதவிப் பணியகத்தின் செயற்பாடுகள், கிளிநொச்சி அறிவியல் நகரில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய பணியகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
கடந்த ஜூன் 15ஆம் திகதி தொடக்கம், யாழ்ப்பாணத்தில் இருந்த, மத்திய வங்கியின் பிராந்திய உதவிப் பணியகத்தின் செயற்பாடுகள் அனைத்தும், கிளிநொச்சியில் உள்ள அறிவியல் நகரில் செயற்படும், மத்திய வங்கியின் பிராந்தியப் பணியகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ். பிராந்திய உதவிப் பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட, ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள், மத்திய வங்கி வெளியீடுகளை விற்பனை செய்யும் பிரிவு, நிதி மற்றும் அபிவிருத்தி முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும், கிளிநொச்சி பிராந்தியப் பணியகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சைட்டம் குறித்து தெளிவுபடுத்த 5 இலட்சம் துண்டுப் பிரசுரங்கள்

கொழும்பு, ஜூலை 1
இலங்கை மருத்துவத்துறையில் பூதாகரமாகியுள்ள மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) பற்றிப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக ஐந்து இலட்சம் துண்டுப் பிரசுரங்களை நாடெங்கும் விநியோகிப்பதற்கான முயற்சியில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் ஈடுபட்டுள்ளன.
சைட்டம் காரணமாக மருத்துவக் கல்விக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மாணவர்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் இழைக்கப்படும் அநீதிகள் போன்றவற்றைப் பொதுமக்கள் புரிந்து கொள்வதற்காகவே இந்தத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட வுள்ளதாகப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பதில் ஏற்பாட்டாளர் மங்கள மத்துமகே தெரிவித்தார்.
பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்கள், பிக்கு மாணவர் சங்கங்கள், மருத்துவபீட மாணவர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இன்னும் ஓரிரு தினங்களில் இந்தத் துண்டுப் பிரசுரங்களை நாடெங்கும் விநியோகிக்கவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (த)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கேஸ்வரி சர்வானந்தம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கேஸ்வரி சர்வானந்தம் 28.06.2017 புதன்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற பூபாலுபத்தர் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சர்வானந்தத்தின் அன்பு மனைவியும் சிவானந்தன்(கனடா), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரவதனி, மலர்விழி ஆகியோரின் அன்பு மாமியாரும் அபி, அரோன், அக்ஷா, டினோஜன், நிம்ரோத் ஜொய்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனை 04.07.2017 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

70, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
தகவல்: சிவகுமார் - மகன்
0789133411
சிவானந்தன் - 0016479675286

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26 . 09 . 1948
இறப்பு 05 . 07 . 2014

### இராசையா நவரத்தினராசா

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கிறோம் அப்பா!

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினேஸ்வரி நவரெத்தினம் (கனேஸ்)



பிறப்பு 08.08.1942 இறப்பு 29.06.2017

புங்குடுதீவு, இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி நவரெத்தினம் 29.06.2017 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அப்பையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், நவரெத்தினம் (கனேஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லீலாவதியின் அன்புச் சகோதரியும், இராசேஸ்வரி, காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை, மகேஸ்வரி, வடிவேலு, நாகேசு ஆகியோரின் மைத்துனியும், பன்னீர்ச்செல்வத்தின் (லண்டன்) பாசமிகு தாயாரும், லலிதாவின் அன்பு மாமியாரும், ஸோபினி, கனிஷா, சிந்துஜன், சஞ்சிகா, துஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி, கொக்குவில்.
தகவல் குடும்பத்தினர்
0770303801

## மரண அறிவித்தல்

### Rev. பொன்னையா மில்றோய் தேவசேனன்



பிறப்பு 12.05.1969 இறப்பு 29.06.2017

இருபாலையைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மெதடிஸ்த திருச்சபையின் போதகர் Rev.பொன்னையா மில்றோய் தேவசேனன் 29.06.2017 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தேவராஜா பொன்னையா மற்றும் மிரியம் பொன்னையா தம்பதிகளின் அன்பு மகனும், ஜெபரட்ணம் றிச்செட்ஸ் - வனஜா தம்பதிகளின் மருமகனும், தர்ஷினியின் (ஆசிரியை - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், ஆனின் பாசமிகு தந்தையும், ஜீவி, மகிந்தன், மித்திரன், நிதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இல.33, அராலி வீதி, ஓட்டுமடத்திலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (01.07.2017) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடக்க ஆராதனை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.33, அராலி வீதி, ஓட்டுமடம்.
தகவல்:- தர்ஷினி (மனைவி)
ஆன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்துக்கு சமூக ஊடகங்களே தடையாக உள்ளன

## அரச தலைவர் மைத்திரி விசனம்



கொழும்பு, ஜூலை01
நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு முகநூல் மற்றும் சமூக ஊடகங்கள் முட்டுக்கட்டையாக உள்ளன என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.
நுவரெலியாவில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி நாட்டில் அமைதியற்ற நிலையைத் தோற்றுவிக்க அடிப்படைவாதக் குழுக்கள் முயற்சிக்கின்றன. இந்த நிலைமையை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார்.
இன,மத உணர்வுகளைத் தூண்டும் வகையிலும், வெறுப்புணர்வைத் தூண்டும் வகையிலும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ்துறை அண்மையில் எச்சரித்திருந்த நிலையில் அரச தலைவரும் இவ்வாறு கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

# பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படாது

### நீதியமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 01
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தளர்த்துமாறு கோரிய சில பலம் பொருந்திய நாடுகளும் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பலப்படுத்திவருகின்றன. எனவே இந்த விடயம் தொடர்பாக இலங்கையும் மீளச் சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் தளர்த்துவது குறித்து இலங்கையும் பன்னாட்டுச் சமூகமும் பேச்சு நடத்தியிருந்தன.
நீதிமன்றம், பாதுகாப்பு, சட்டம்ஒழுங்கு, அயலுறவு ஆகிய அமைச்சுக்களும், பொலிஸ் திணைக்களம், சட்டமாஅதிபர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களும் பேச்சு நடத்தி உத்தேச சட்டவரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்து புதிதாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இன்னும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை- என்றார். (த-ய)

# 2017ஆம் ஆண்டில் இதுவரை 3,818 போலிப் பணம் சிக்கியது

கொழும்பு, ஜூலை 1
2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 31ஆம்திகதி வரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் 3,818 போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
இவ்வாறு கைப்பற்றப்பட்ட போலி நாணயத்தாள்களின் பெறுமதி 38லட்சத்து 94ஆயிரத்து 600 ரூபாயாகும் எனப் பொலிஸ் தலைமையகம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.
அதில் 174 ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களும், 46 இரண்டாயிரம் ரூபா நாணயத்தாள்களும், 2272 ஐநூறு ரூபா நாணயத்தாள்களும், 1,320 நூறுரூபா நாணயத் தாள்களும் அடங்குகின்றன.
சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, போலி நாணயத் தாள்கள் தொடர்பில் தகவல் கிடைக்குமாயின் பொதுமக்கள் 0112326670 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு அறிவிக்குமாறும் அதில் கோரப்பட்டுள்ளது. (த-ய)

# கொழும்பிலுள்ள ஓட்டோக்களில் ஏறவேண்டாம்

## தனது நாட்டுப் பெண்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை01
இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொள்ளும் அமெரிக்கப் பெண்கள் கொழும்பு நகரில் முச்சக்கரவண்டியில் பயணிக்கவேண்டாம் என அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
முச்சக்கரவண்டிச் சாரதிகள் அமெரிக்கப் பெண் பயணிகளிடம் தகாதவாறு நடந்து கொள்ள முயற்சித்தமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற பின்னரே குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# 9 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

## 14,680 குடும்பங்கள் ஆபத்தில்



கொழும்பு, ஜூலை 1
இலங்கையில் 09 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் நிறைந்த பகுதியில் 14,680 குடும்பங்கள் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடும் மழை பெய்யும் காலங்களில் இந்தக் குடும்பங்கள் இடர்களில் சிக்கும் பாதிப்பு இருப்பதனால் இவர்களைப் பொருத்தமான இடங்களில் குடியமர்த்துவதற்கான தேவை இருப்பதாக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
இதற்கமைவாகக் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான இடங்களில் காணி ஒன்றையும் வீடொன்றையும் கொள்வனவு செய்வதற்காக அரசு நிதியுதவி வழங்கவுள்ளது.
இதன்போது வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களின் மூலம் வீடுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும், குறித்த குடும்பங்களை மீளவும் இடரற்ற வலயங்களுக்கு அப்பால் மீள குடியமர்த்துவது தொடர்பிலும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குமாக இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பா சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த-ய)

# ஒன்பது லட்சம் கிலோ போதைப் பொருள்கள் கடந்த ஆண்டு சிக்கின

கொழும்பு, ஜூலை 01
கடந்த வருடம் நாடு முழுவதிலும் கிட்டத்தட்ட ஒன்பது லட்சம் கிலோ எடை கொண்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகத் தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.
இதில் 2லட்சத்து06 ஆயிரத்து 693 கிலோ ஹெரோயின், 41ஆயிரத்து 24.5கிலோ கஞ்சா, 6 லட்சத்து 69ஆயிரத்து 138 கிலோ ஹசிஷ், பாபுல், மதன லேகியம், ஹான்ஸ், பான்பராக், புகையிலைத் தூள் மற்றும் அபின் போன்ற போதைப் பொருள்கள் உள்ளடங்குவதாகவும் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதிகூடியதொகையான ஒரு லட்சத்து 76ஆயிரத்து 121 கிலோ ஹெரோயினும், 1243 கிலோ கஞ்சாவும், 1,047 கிலோ ஏனைய போதைப்பொருள்களும் மேல்மாகாணத்திலேயே பிடிபட்டுள்ளன. 80 வீதமான குற்றவாளிகளும் இந்த மாகாணத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.
போதைப்பொருள்களுக்கு அடிமையான 2,355 பேர் அரச வைத்தியசாலைகளிலும், அரசசார்பற்ற நிறுவனங்களிலும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ய)

> “ அதிகூடியதொகையான ஒரு லட்சத்து 76ஆயிரத்து 121 கிலோ ஹெரோயினும், 1243 கிலோ கஞ்சாவும், 1,047 கிலோ ஏனைய போதைப்பொருள்களும் மேல்மாகாணத்திலேயே பிடிபட்டுள்ளன. 80 வீதமான குற்றவாளிகளும் இந்த மாகாணத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் தொழில்நுட்ப சேவைசார் பயிற்சி

கொழும்பு, ஜூலை 1
ஜப்பான் தொழில்நுட்பச் சேவைசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை தொழில்நுட்பச் சேவைசார் பயிலுநர்களுக்கும் வாய்ப்பளிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள குறித்த யோசனையை முன்வைத்துள்ளார்.
இலங்கை தொழில்நுட்ப சேவைசார் பயிலுநர்களுக்கு ஜப்பானில் தொழில்நுட்பச் சேவைசார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் வாய்ப்பளிப்பதற்காக ஜப்பானில் புகழ்பெற்ற மனித வள அபிவிருத்தி நிறுவனத்துடன் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. (த-ய)

# ரஷ்யப் போர்க் கப்பல்களை வாங்கவுள்ளது இலங்கை

கொழும்பு, ஜூலை01
ஜிபார்ட் வகை போர்க்கப்பல்களை விற்பனை செய்வது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாக ரஷ்யாவின் இராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டுச் சேவையை மேற்கோள்காட்டி ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
ஜிபார்ட் வகையைச் சேர்ந்த போர்க்கப்பல்களை அரசுகளுக்கு இடையிலான உடன்பாட்டின் கீழ் ஏற்றுமதிக் கடன் [illegible] கைக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் இராணுவ - தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டுச் சேவையின் பெண் பேச்சாளர் மரியா வொரொப்யேவா தெரிவித்துள்ளார்.
ரஷ்ய நிதியமைச்சு உள்ளிட்ட அரசே இந்த விவகாரத்தைக் கையாளும் என்றும் அவர் கூறியுள்ளார்.
ஏற்கனவே இலங்கைக் கடற்படைக்கு ரஷ்யாவிடம் ஜிபார்ட் வகைப் போர்க் கப்பல் கொள்வனவு செய்யப்பட [illegible] யாகியிருந்தன. அப்போது அரசு அதனை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
ஜிபார்ட் வகைப் போர்க் கப்பல்கள் எதிரி விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகளைத் தடுத்துத் தாக்கும் வல்லமை பெற்றவையாகும். (த-ய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சார்பற்ற நிறுவனங்களை நெறிப்படுத்த புதிய சட்டங்கள்

## அவசியம் என்கிறார் நீதியமைச்சர்

'கொழும்பு, ஜூலை 1
நாட்டில் இயங்கிவரும் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் தேசிய நோக்கங்களுக்கு அச்சுறுத்தலான வகையில் இயங்கி வருவதாகக்குற்றம் சுமத்தியுள்ள நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுளைக் கட்டுப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.
இந்த விடயம் குறித்து அமைச்சர் மனோ கணேசனிடம் சில யோசனைத் திட்டங்களை முன்வைக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.
கடந்த அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் மூலம் அரசசார்பற்ற நிறுவனங்களை நெறிப்படுத்தச் சில திட்டங்களை முன்வைத்திருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (த-ய)



## சிலாபம் பொலிஸ் அதிகாரிக்கு ஏழு வருடங்கள் கடூழியச் சிறை

கொழும்பு, ஜூன்30
லஞ்சம்உட்பட 4 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பொலிஸ் உபபரிசோதகருக்குக் கொழும்பு உயர்நீதிமன்றத்தினால் கடுமையான வேலையுடன் கூடிய 7 வருடச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
சிலாபம் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்ட ஹேரத் முதியன்சலாகே உதய ஹேரத் என்பவருக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது
அவர் காணாமற்போன நபர் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்காக உறவினரிடம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் லஞ்சமாகப் பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
அவருக்கு எதிராக லஞ்சஊழல் ஆணைக்குழுவில் 8 குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 4 குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார். (த-ய)

## வெள்ள இடர், வறட்சியால் மின்சார சபைக்கு பேரிழப்பு

கொழும்பு, ஜூலை 1
கடந்த பல மாதங்களாக நீடித்துவரும் கடுமையான வறட்சியாலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளாலும் இலங்கை மின்சார சபைக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது என மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த மே மாதம் வரை வறட்சியின் காரணமாக மின்சாரத் தயாரிப்புக்கு எரிபொருளைப் பாவித்ததால் சுமார் 33 பில்லியன் ரூபா மேலதிக செலவும் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகள் காரணமாக 30 கோடி ரூபா நட்டமும் ஏற்பட்டுள்ளது.
கடந்த வருடம் இதே காலப்பகுதியில் நீர்மின்சா ரத்துக்கான நீர்த்தேக்கங்களில் 70 வீத நீர் மட்டம் காணப்பட்டது. இவ்வருடம் அது 47 வீதமாகக் குறைவடைந்துள்ளது. நாட்டின் பல பகுதிகளில் அடைமழை பெய்து பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நீர்த்தேக்கப் பகுதிகளில் போதியளவு மழைவீழ்ச்சி காணப்படாதது துர்ப்பாக்கியமே. நாட்டின் ஒருபகுதி கடுமையான வறட்சிக்கு முகம் கொடுத்து வரும்போது மற்றொரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இந்தநிலைமைக்கு முகம் கொடுக்க மக்கள் இயன்றவரை மின்சா ரத்தைச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டும் - என்றார். (த-ய)

## வர்த்தமானி வரும்வரை அரசின் முடிவை ஏற்கோம்

### சைட்டம் தலைவர் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 1
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விவகாரத்தில் அரசு எடுத்துள்ள தீர்மானம் நிபந்தனைகளுடனான வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படும்வரை தங்களது வழமையான புதிய மாணவர் அனுமதிகளும் பட்டமளிப்பும் தொடர்ந்து நடைபெறுமென அந்தக் கல்லூரியின் தலைவர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் தெடர்பாக அரச தலைவரின் செயலாளர் பீ.பீ. அபேகோனுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பட்டமளிப்பொன்றை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மாத்திரம் தடுத்துநிறுத்த முடியாது. அதற்கு வேறு பல வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். எனது கல்லூரியின் புதிய மாணவர் அனுமதியையும் பட்டமளிப்பையும் நிறுத்துமாறு அமைச்சரவைப் பத்திரமொன்று வழங்கப்பட்டதாகக் கூறப்படுவது எனக்குத் தெரியாது. அதுபற்றி எனக்கு இதுவரை எந்தவித அறிவிப்பும் தரப்படவில்லை - என்றார். (த-ய)

## உதயங்கவைச் சந்தித்ததை ஒப்புக்கொண்டார் அருந்திக

கொழும்பு, ஜூலை 1
ரஸ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரான உதயங்க வீரதுங்கவைத் தான் ஜப்பானில் சந்தித்து உரையாடியதைச் சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ விவகார பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் முன்னிலையில் ஒப்புக்கொண்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அருந்திக பெர்னாண்டோ பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகிய போது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஜப்பானியப் பயணத்தின்போது உதயங்க வீரதுங்கவை எதேச்சையாகச் சந்திக்கவேண்டி வந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அவருடன் சிறிதுநேரம் பேசவேண்டி வந்ததாகவும் கூறியுள்ளார்.
உதயங்க வீரதுங்கவுடன் தான் இருக்கும் புகைப் படங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்ததை தான் அறிந்திருப்பதாகக் கூறிய அருந்திக, இந்தப் படங்கள் ஜப்பானிய பயணத்தின்போது எடுக்கப்பட்டவையே என்பதையும் ஒப்புக்கொண்டார்.
உதயங்க வீரதுங்கவை நீதிமன்றத்தில் பிரசன்னமாகுமாறு கொழும்பு கோட்டை நீதிமன்றம் விடுத்த உத்தரவை அவர் மீறியதால் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

## அரச மருத்துவர் சங்கம் பிளவுபடும் சாத்தியம்

கொழும்பு, ஜூலை 1
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு எதிராக புதிய சங்கம் ஒன்றை உருவாக்க ஒரு தொகுதி மருத்துவர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.
இதன் மூலம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இரண்டாக பிளவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தற்போது கடுமையான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமையால் அந்த அரசியல் தலையீடுகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டுப் புதிய தொழிற்சங்கம் ஒன்று உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள் சிலர் தற்போது பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளுக்கு நாள் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகி வருகின்றது எனவும், இதனால் புதிய மருத்துவ அதிகாரிகள் சங்கமொன்றின் அவசியம் எழுந்துள்ளதாகவும் ஒரு தொகுதி மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (த-ய)

## எய்ட்ஸ் ஒழிப்புக் தனியாக கட்டடம்

கொழும்பு, ஜூலை 1
பாலுறுப்பு நோய்கள் மற்றும் எய்ட்ஸ் ஒழி[ப்பு] தேசிய வேலைத்திட்ட[த்து]க்கான கட்டடம் ஒன்[றை] அமைக்க அரசு தீர்மானித்துள்ளது.
இந்தத் தீர்மானம் கட[ந்த] செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்[சர]வைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு[ள்ளது].
இது தொடர்பாகச் சுக[ாதார] அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்[கீகா]ரம் வழங்கியுள்ளது.
நோயாளர்களின் சிரமத்தையும் நிர்வகிப்பதில் உள்ள சிக்கல்களையும் கவனத்தில் கொண்[டு] பாலுறுப்பு நோய்கள் மற்றும் எய்ட்ஸ் ஒழி[ப்பு] தேசிய வேலைத்திட்டத்தின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் 4 மாடிகளைக் கொண்ட கட்[டடம்] ஒன்றை புதிதாக அமைக்கத் தீர்மானி[க்கப்]பட்டுள்ளது.

## 31 ஆம் நாள் நீங்கா நினைவலைக[ள்]



அன்னை மடியில்
23 . 08 . 1941

ஆண்டவ[ன்] அரவணைப்[பில்]
30 . 05 . 2017

அமரர்
### அரியஜோதி முருகேசபிள்ளை
(ஓய்வு பெற்ற பிரதேச மருந்தாளர்)

*அன்பு மழை பொழிந்து அவனியிலே பவனி வந்து
எழுபத்தைந்தாண்டுகள் தாண்டிச் சென்றீர் - என்று நாம்
அகமகிழ்ந்து இருக்கையிலே - காலன்
முடித்துவிட்டான் நின் வாழ்வதனை !*

*மருந்தாளர் எனும் மகத்தான சேவைதனை - எம் மக்களுக்காய் ஆற்றி
நின்றும் பிரதேச மருந்தாளர் எனும்
பிரதான பதவிதனைப் பெருமையுடன் நிறைவேற்றி
ஓய்வு பெற்ற பின்பும் ஓய்வில்லா உம் சேவையினால் மாண்டீரே மண்மீது !!*

*' அன்றி ' என்று அழைத்தவுடன் அருகில் நின்றுடுவீர்
புன்னகை முகத்துடனே புத்திமதிகள் கூறிடுவீர்
சோகமுகத்துடனே யாரும் சோர்ந்து நின்றிட்டால் - அன்புடன்
அள்ளி வழங்கிடுவீர் ஆறுதல் வார்த்தைகளை*

*அன்பான கணவன் அருகில் நின்று
அரும்பாடுபட்டு - நின் இன்னுயிரை காக்கவென - எடுத்த
பிரயத்தனங்கள் யாவும் வீணாகிப் போனதேனோ ?
அன்புத் துணைவனும் ஆருயிர் மக்களும்
உற்றார் உறவினர்களும் எப்படித்தான் தாங்கிடுவர் - உம் பிரிவை ?*

என்றென்றும் ஆறாத்துயரில் தவிக்கும் குடும்ப உறவுகள்

வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் சிறப்பிதழ் - 01.07.2017

## ஆலயத்தின் வரலாற்று

எமது ஆலய வரலாற்றை பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னரே எமக்கு முழுமையான தகவல்களைத் தரமுடியும். அதற்கு முன்னதான வரலாற்றுக் குறிப்புக்களை எம்மால் சேகரிக்கப்பட்ட தரவுகளை வைத்து தருகின்றோம்.

நரசிங்கர் கோயில் என்ற பெயருடன் 200 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் வழிபாடு செய்யப்பட்டு வந்த இவ்வாலயம் வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினரால் பூசை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. அந்த குடும்பத்தின் தொடர் வழியில் வந்தவர்களாலேயே பூசைகள் செய்யப்பட்டு வந்தன. அப்பொழுது வாழைப்பழமடை போடுவதே பூசை என்பதாகும். வருடத்திற்கொருமுறை அவர்களால் வேள்வி என்ற பெயரால் ஆடுகள். கோழிகள் பலியிடப்பட்டு வந்ததாகவும் எம்மால் அறியமுடிகின்றது. அந்தக் காலகட்டத்தில் பெண்கள் அந்த கோயிலுக்கு செல்வதில்லை.

இப்படியான பூசைகளையும், செயற்பாடுகளையும் விரும்பாத பூந்தோட்டவாசிகளாகிய திருகனகரட்ணம். திரு.செல்லப்பா. அமரர் பத்மநாதன். அமரர் நடராசா ஆகியோர் 1980 ஆம் ஆண்டளவில் வேறோர் தினத்தில் பொங்கல் பூசையை. பூந்தோட்டம் மக்களின் உதவியுடன் முடித்து சிறப்பாக நடத்தினார்கள். பின்னர் பூந்தோட்டம் இளைஞர்கள் சிலர் நரசிங்கப்பெருமானின் அருளால் ஈர்க்கப்பட்டு அவர்களுடன் இணைந்து பொங்கலை மிகச்சிறப்பாக செய்யவேண்டும். என்ற ஆசையுடன் 1984 ஆம் ஆண்டு ஆலயத்தின் முதலாவது நிர்வாகசபையை உருவாக்கினார்கள். அதில் தலைவராக திரு. இ. கனகரட்ணம் அவர்களும் . செயலாளர் திரு. எஸ். சிவலிங்கம். பொருளாளர் அமரர் பேட்டி புவிராசா இவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்) ஆகியோரும். ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு.எம்.குருசாமி. திரு.கோ.சிறீ.மோகன். திரு.தா.சிவஞானம். திரு.பீ. செல்லப்பா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வந்தது.

இவ்வாலயம் வவுனியா குளத்தின் கீழ் உள்ள வயல்வெளியில் சூரியகுளம் என்னும் பெயரைக்கொண்ட தனிப்பட்ட ஒருவரின் சொந்த காணியின் நடுவே இத்தி மரத்தின் கீழ் வைரவர் சூலத்துடன் வணங்கப்பட்டு வந்துள்ளது.

இவ்விடத்திற்கு காட்டுப்பாதையாகவும் வயல் வரம்பு வழியாகவே கோயில் மரத்தடியை சென்றடையக்கூடியதாகவும் இருந்துள்ளது. இங்கு மடைபோடச் செல்பவர்கள் கடகப்பெட்டிக்குள் வாழைக்குலையை சீப்பாக வெட்டிவைத்துக்கொண்டு சென்றே படைப்பார்கள். வயல் விதைத்து அருவி வெட்டியதும் அனைவரும் நரநிங்கப் பெருமானுக்கு மடை போடுவதும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் பூசை செய்தவர்களை பூசாரி என்றே அழைத்தார்கள்.

1984 ஆம் ஆண்டு முதலாவது நிர்வாகசபை ஆரம்பிக்கப்பட்ட பின். 1985. 1986. 1987... இப்படியாக ஒவ்வொரு வருடமும் புதிதாக நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டு ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது இக்காலத்தில் ஆனி மாதத்தில் வரும் புதூர் பொங்கல் முடிவடைந்த பின் வரும் சனிக்கிழமையை எமது ஆலயத்தின் பொங்கல் தினமாகக் கொண்டு பொங்கல் விழா செய்யப்பட்டு வந்தது.

இந்த பொங்கல் தினத்தன்று பெரும் பொங்கல் நடைபெறுவதோடு இரவு கலைநிகழ்வுகளும் நடைபெறுவது வழக்கம். அத்துடன் சில அடியார்கள் நேர்த்திக்காகத் தனிப்பட்ட பொங்கல் வைப்பதுடன் நேர்த்திக்காக பெருமளவிலான ஆடுகள். கோழிகள் என்பனவும் ஆலயத்தில் விடப்படுகின்றன. இவைகள் ஏலம் விடப்பட்டு பணம் ஆலய அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

சித்திரைமாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று சித்திரைக்கஞ்சி காய்ச்சுவது இவ்வாலயத்தில் நடைபெறும் முக்கியமான ஒரு பூசை என்பதும் குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 1990. 1991. 1992 ஆம் ஆண்டுகளில் பொங்கல் விழா பெரியளவில் நடைபெறாமல் பூசைகளுடன் நிறைவு செய்யப்பட்டது. 1993 ஆம் ஆண்டு வருடாந்த பொங்கல் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பெருமளவிலான பக்தர்களின் வருகையால் எமது ஆலயத்தின் பெயர் மாவட்ட ரீதியாகவும். நாடளாவிய ரீதியிலும் பிரசித்தியானது. எம்பெருமானின் அருளால் நம்பிக்கை கொண்ட பக்தர்களின் வருகை வருடாவருடம் அதிகரித்த வண்ணமேயிருந்தது. மாவட்டத்தின் சகல இடங்களில் இருந்தும் பொங்கல் விழாவுக்கு பக்தர்கள் அதிகளவில் வரத்தொடங்கினர். இவ்வேளையிலேயே மரத்தின் கீழ் இருக்கும் எம்பெருமானை ஒரு ஆலயம் அமைத்து அங்கே வைக்க வேண்டுமென 1995 ஆம் ஆண்டு இயங்கிய நிர்வாகசபை முடிவுசெய்ததோடு ஊரிலுள்ள பெரியவர்களையும் அழைத்து ஆலோசிக்கப்பட்ட பொழுது வேகமாக செயற்படக்கூடிய பலம் வாய்ந்த சபை தேவை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அதற்கமைய திரு.த.கணேசலிங்கம் அவர்களின் தலைமையில் அடுத்த நிர்வாகசபைத் தெரிவு செய்யப்பட்டது. அதில் தொடர்ச்சியாகப் பலகாலம் நிர்வாகசபைகளில் அங்கம் வகித்த பலர் இடம்பெற்றிருந்தனர்.

1996 ஆம் ஆண்டு சிவஸ்ரீ முத்து. ஜெயந்தி நாதக்குருக்களின் ஆலோசனையுடன் அவரின் தலைமையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புதிய ஆலயத்திற்கான அத்திவாரம் போடப்பட்டது. திரு.தில்லையம்பலம் அவர்களால் ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டப்பெற்றது. 1999ஆம் ஆண்டு ஆவணிமாதம் திருவோண நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக சிவஸ்ரீ முத்து ஜெயந்தி நாதக்குருக்கள் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அதன்பின்னர் ஆலயம் மேலும் வளர்ச்சி கண்டது. பின்னர் படிப்படியாக வசந்தமண்டபம். ஆலயமண்டபம், சுற்றுமதில் என்பன அமைக்கப்பட்டன. எம்பெருமான் வீதியுலா வருவதற்கான வாகனங்கள். சகடை மற்றும் சூரன் என்பன அடியார்களின் அன்பளிப்பாகவும் கிடைக்கப்பெற்றன. ஆலயத்தின் அலங்கார உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எமது ஆலயத்துக்கே உரித்தான "நரகாசுரன் போர்" தீபாவளித் தினத்தன்று மிகவும் விமர்சையாக நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்று வவுனியா மக்கள் அனைவருக்கும் ஓர் வரப்பிரசாதமாகவும். ஆலயத்தின் மிகப்பெரும் சொத்தாகவும் "ஸ்ரீ லக்ஷ்மி நரசிங்கர் கலாசார மண்டபம்" நிர்மாணிக்கப்பெற்றதானது எல்லாம் வல்ல ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கப் பெருமானின் அருளாலேயாகும்.

\- பரிபாலனசபை -



### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

வன்னி மாநகரில் வவுனியா மாவட்டத்திலே பூந்தோட்டம் பதியிலே கோயில் கொண்டு இத்தி மர நிழலிலே அமர்ந்து இருந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் தனது இடது கரத்திலே மஹாலட்சுமி வலது பக்கத்திலே பக்தரான பிரகலாதனையும் கொண்டு கம்பீரமாக வீற்றிருக்கும் நரசிங்கப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் ஆனிமாதம் 17 ஆம் நாள் 01.07.2017 சனிக்கிழமை வருடாந்த பொங்கல்விழா பல நூற்றாண்டு காலமாக நடைபெறுவதுடன் பொங்கல் விழாவில் காவடிகள் பால்காவடிகள் கரகாட்டங்கள் சிலம்பாட்டங்கள் என்று பாரம்பரிய விளையாட்டுக்கள் பெரிதும் நடைபெற நரசிங்கப் பெருமானது துணைகொண்டு ஆசிவழங்குகின்றேன்.

கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா, கோவிந்தா
ஆலய பிரதம குரு விஷ்ணு பூஜா துரந்தரர்
சிவஸ்ரீ இராவீந்திர உமாசுதக்குருக்கள்.



### உப தலைவரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத்தீவில் வன்னிவள பெருநிலப்பரப்பிலே வவுனியா நகருக்கு அண்மையாக பூந்தோட்டம் பதிலே பல நூற்றாண்டு காலமாக அடியார்களுக்கு அருள் பாலித்து கொண்டிருக்கும் எம்பெருமானிற்கு வருடாந்தப் பொங்கல் விழா 01.07.2017 அன்று வெகு சிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் பொங்கல் விழா சிறப்புற நடைபெறுவதற்கு அயராது உழைக்கும் க. நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆலய தொண்டர்கள் எல்லா வகையான உதவிகளையும் செய்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்விழா சிறப்புற எம்பெருமானின் திருவருள் வேண்டி நிற்பதோடு எம்பெருமான் அடியார்களுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் இறைபணிச் சேவையில்
நரசிங்கர் தொண்டன். **மனோகரன் நீலாகரன்**
உப தலைவர் ஸ்ரீலக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலயம்
பூந்தோட்டம், வவுனியா


## பொங்கல் விழா சிறப்புற வாழ்த்துவோர்:

இல.45, வெளிவட்ட வீதி,
(சிந்தாமணி
பிள்ளையார் கோவிலடி)
வவுனியா.
077 087 9830

வன்னி பட்டறை
Vanni Paddarai

இல.45, வெளிவட்ட வீதி,
(சிந்தாமணி
பிள்ளையார் கோவிலடி)
வவுனியா.
077 087 9830

UMA Stores
உமா ஸ்ரோர்ஸ்
No.114, Kandy Road,
Vavuniya.
0777 585929

தலை நிமிரும் ஓராண்டில்
கல்வியுலகின் வெற்றிப் பரிமாணம்
EDI
Educational Development Institute
தரம் 01 முதல் O/L, A/L வரை
077 8787574

SUNBEAM
CREATIONS
M.S.Puvirajh
077-7166601
All Printing Solution
with Banner Printing
T.P: 077 2633402 / 024 2228226
Fax: 024 2228227
e-mail:sunbeamvavuniya@gmail.com
#52, Bus Stand Complex, Vavuniya.



கிருபா லேணர்ஸ்
226. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சுன்னாகம் 021 224 2022
யாழ் கச்சேரி அருகாமை 076 722 5292
கிளிநொச்சி 021 228 5505
சாவகச்சேரி 021 227 0700
வவுனியா 024 222 7777. 077 710 0444
விசுவமடு 021 320 1515
முழங்காவில் 021 300 6544
நெல்லியடி 021 300 6550
பருத்தித்துறை 021 492 3201
பூநகரி :021 320 1818
மன்னார்: 023 225 1656

IAPS
International Academy of Professional Studies
அனுமதிகளுக்கு முந்துங்கள் இச் சலுகை 01/07/2017 முதல் 14/07/2017 வரை
பிரான்ஸ் FRENCH
நெதர்லேண்ட் DUTCH
ஜேர்மன் & சுவிஸ் DEUTSCH
IELTS LIFE SKILLS A1 B1
Advanced Beauty Culture
Offer Fee : 22,000
HAIR DRESSING
CAKE MAKING Offer Fee : 10,000
STITCHING Offer Fee : 10,000
05, 10th Lane, Vairavarkovil Road,
Thandapuliyankulam, Vavuniya.
WEB : www.iapsedu.com FB : www.facebook.com/iapsedu
077 22 77 833 024 72 00 128



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசுத்தலைவர் வேட்பாளர்கள் சென்னைக்கு இன்று செல்கின்றனர்

சென்னை, ஜூலை 1

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் ராம்நாத் கோவிந்தும், மீராகுமாரும் தங்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காகச் சென்னைக்கு இன்று செல்லவுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

இந்தியாவின் 14ஆவது குடியரசுத் தலைவர் தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி நடக்கின்றது. இந்த தேர்தலில் பா.ஜ.க. கூட் டணி வேட்பாளராகப் பீகார் மாநில முதல்வராக இருந்த ராம்நாத் கோவிந்த்



ராம்நாத் கோவிந்த்



மீராகுமார்

நிறுத்தப்பட்டுள்ளார்.

தனக்கு ஆதரவு அளித்த கட்சித் தலைவர்களையும், அந்தந்தக் கட்சிகளின் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து ஆதரவு திரட்டுவதற்காக அவர் நாடு முழுவதும் சுற்றுப்பயணத்தை தொடங்கி உள்ளார். இந்த நிலையில் தமிழகத்தில் ஆதரவு திரட்டுவதற்காக இன்று அவர் சென்னை செல்கிறார். தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை தனித்தனியாகச் சந்தித்துப் பேசி ஆதரவு கேட்கிறார். காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் மீராகுமாரும் இன்று சென்னை வருகிறார். தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழக காங்கிரஸ் தலைவர் சு.திருநாவுக்கரசர் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்களையும், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர் ஆதரவு திரட்டவுள்ளார். (ம)



# பாக். லொறி விபத்தில் சாவு 175 ஆக உயர்வு

இஸ்லாமபாத், ஜூலை 1

பாகிஸ்தானில் எரிபொருளைச் சுமந்து சென்ற லொறி ஒன்று தீக்கிரை ஆனதில் உயிரிழப்பு 175ஆக உயர்ந்தது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து லாகூர் நோக்கி கடந்த 25ஆம் திகதி சென்ற லொறி பஞ்சாப் மாகாணத்தின் பஹவல்பூர் நகர் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதனால், லொறியிலிருந்த பெட்ரோல் சாலையில் சிந்தியது. இதையறிந்த கிராம மக்கள் பெற்றோலை அள்ளுவதற்காக முண்டியடித்தனர். லொறி திடீரென தீப்பற்றியது. சுற்றிநின்ற வர்களும் தீக்கிரையாகினர்;. முதல் கட்டமாக 100 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் உயிரிழப்பு 168 என்று சொல்லப்பட்டது. நேற்று வெளியான மூன்றாம் கட்டத்தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 175ஆக அதிகரித்தது. (ம)

# குளோப் மாஸ்டர் போர் விமானத்தை இந்தியாவுக்கு விற்க அமெ. முடிவு

வொஷிங்டன், ஜூலை 1

இராணுவத்தின் கனரக போக்குவரத்துக்கு பயன்படும் சி17 குளோப் மாஸ்டர் விமானத்தை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இதன்மூலம் அவசர காலத்தில் போர்க்களத்துக்கோ அல்லது அமைதிகாப்பு பணிக்கோ சிப்பாய்கள், தளவாடங்கள், இதர முக்கிய பொருள்களை உரிய நேரத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் இந்திய ராணுவத்தின் திறன் மேம்படும் என்று அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்தது.

அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தால் விற்கப்பட உள்ள இந்த விமானத்தின் விலை இந்திய மதிப்பில் 2 ஆயிரத்து 380 கோடி. இதில் ஏவுகணை எச்சரிக்கை வசதி, எதிர்வரும் விமானங்கள், படைகள் அல்லது கப்பல்கள், நட்பு நாட்டுடையதா அல்லது எதிரியைச் சேர்ந்ததா என்பதைக் கண்டறியும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல நவீன வசதிகள் இடம்பெற்றிருக்கும். மட்டுமல்லாமல் இந்த விமானம் ஒட்டுமொத்தமாக 77 ஆயிரத்து 520 கிலோ வரையிலான பாரத்தைச் சுமக்கும் திறன் கொண்டது.

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு நோக்கங்களைக் கருத்தில் கொண்டு சி17 குளோப் மாஸ்டர் விமானத்தை இந்தியாவுக்கு விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

ட்ரம்பின் முக்கிய திட்டமான

# முஸ்லிம் நாடுகள் மீதான தடைகள் நடைமுறைக்கு

வொஷிங்டன், ஜூலை 1

சிரியா, லிபியா, உள்ளிட்ட 6 முக்கிய முஸ்லிம் நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் நுழைய விதிக்கப்பட்ட 90 நாள்களுக்கான தற்காலிகத் தடை நேற்றுக் காலையில் இருந்து நடைமுறைக்கு வந்தது.

ஈரான், லிபியா, சிரியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன் ஆகிய 6 முஸ்லிம் நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய அதிபர் ட்ரம்ப் கடந்த ஜனவரி 27ஆம் திகதி தடை விதித்தார். இதற்கு அமெரிக்கா முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பல மாகாண நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டு தடைக்கு தடை விதிக்கப்பட்டது. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளில், ட்ரம்பின் நடவடிக்கைக்கு அமெரிக்க உயர்நீதிமன்றம் அனுமதி அளித்து உத்தரவிட்டது.

இதனையடுத்து, தடை செய்யப்பட்ட 6 நாடுகளை சேர்ந்தவர்கள் நுழைவிசைவு பெறுவதற்கு ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு புதிய நிபந்தனைகளையும், வழிகாட்டுதல் முறையையும் விதித்தது. அதன்படி தடை செய்யப்பட்ட 6 நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்கா வரும்போது அங்கு தங்கியிருக்கும் தங்களது பெற்றோர், கணவன், மனைவி, குழந்தை, மகன், மகள், மருமகள், மருமகன் உறவு முறைகளை கட்டாயம் நிரூபிக்க வேண்டும். அதே நேரத்தில் பாட்டி, தாத்தா, பேரக்குழந்தைகள், அத்தை, மாமா, அண்டை வீட்டினர், மைத்துனர், மைத்துனி போன்றோர் நெருங்கிய உறவினர்களாகக் கருத முடியாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)



> 6 நாடுகளை சேர்ந்தவர்கள் நுழைவிசைவு பெறுவதற்கு ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு புதிய நிபந்தனைகளையும், வழிகாட்டுதல் முறையையும் விதித்தது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்காக போரிட்ட இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 1

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆ... குழுவில் இணை... அந்த அமைப்புக்க... போரிட்ட தாஜுடீன் எ... இலங்கையர் சிரியாவ... அமெரிக்க படையின... நடத்திய வான் தாக்குத... களில் கொல்லப்பட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சிரியாவின் ரக்கா நகரில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு சுற்றுலா விடுதி ஒன்றில் பணியாற்றிய இவர், துருக்கியின் ஊடாக சிரியாவிற்குள் பிரவேசித்துள்ளார். இதற்கு முன்னதாக கேகாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுதக் குழுவுக்காகப் போராடி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)






பிலிப்பைன்ஸின் மராவி தீவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் கடும் முனைப்புடன் நடைபெற்று வருகிறது. தீவின் பெரும் பகுதி மீட்கப்பட்டுவிட்டது. அங்குள்ள கட்டடங்கள், குடியிருப்புத் தொகுதிகள், வீடுகள் என்பன இராணுவத் தரப்பால் சோதனையிடப்படுகின்றன. (ம)

# கருதினால் ஜோர்ஜ் மீது பாலியல் குற்றச்சாட்டு

உரோம், ஜூலை 1

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸின் ஆலோசகர்களில் ஒவரும் வத்திக்கானின் பொருளாளருமான கருதினால் ஜோர்ஜ் பெல் மீது பாலியல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணையை எதிர்கொள்வதற்காக ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நீதிமன்றத்துக்கு அவர் நேரில் செல்லவுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் மற்றும் சிட்னி மறைமாவட்டங்களில் பணியாற்றிய போது சிறுவர்களை பாலியல் வதைக்கு உட்படுத்தினார் என்று கருதினால் ஜோர்ஜ் பெல் மீது சில குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நேரில் வர வேண்டியிருக்கும் என்று மெல்பேர்ண் நீதிமன்றம் தெரிவித்திருந்த நிலையில் விசாரணையை எதிர்கொள்ள ஜோர்ஜ் மெல்பேர்ண் செல்லவுள்ளார் என்று உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எனினும் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஜோர்ஜ் மறுத்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புதிய அமைச்சர்கள் முன்னுள்ள சவால்!

வடக்குமாகாணசபையின்புதியஅமைச்சர்களாகஅனந்தி சசிதரனும்க.சர்வேஸ்வரனும்பதவியேற்றிருக்கிறார்கள். சர்ச்சைக்குரிய அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் இந்தஇடத்திற்குவந்திருப்பவர்கள்அவர்கள்.அதனாலேயே அவர்களின்செயற்பாடுகள்மீது கண்காணிப்பும்தேடலும் அதிகம் இருக்கும். அவர்களின் பணி இலகுவானதாக இருக்கப் போவதில்லை.

மூன்று மாதங்களுக்கு மட்டுமேஅவர்கள்தற்காலிகஅமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

இந்தமூன்று மாதங்களுக்குள்அவர்களால்தமது அமைச்சுக்களைப்புரட்டிப்போட்டுப்புதுயுகம்படைக்கமுடியாதுதான். என்றாலும்,தாம்அமைச்சர்களாகஇருந்தால்எத்தகையவளர்ச்சியை,மேம்பாட்டைஏற்படுத்துவார்கள்என்பதற்கானமாதிரியை (சாம்பிள்) அவர்களால் காட்ட முடியும். அமைச்சர்களாக இருப்பதற்கான அவர்களது தகுதியைச் சோதிக்கும் தகுதிகாண் காலமாகவே இது இருக்கப்போகிறது.

சர்வேஸ்வரனுக்கு கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சும் , அனந்தி சசிதரனுக்கு கூட்டுறவு, உணவு வழங்கலும் விநி யோகமும், தொழில்துறை, தொழில்முனைவோர், சமூகசேவை, மகளிர் விவகாரம் மற்றும் மறுவாழ்வு அமைச்சும் வழங்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சைச் சர்வேஸ்வரனுக்கு வழங்கும்படி அவரது மூத்த சகோதரனும், ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆரம்பத்திலேயே கேட்டிருந்தார். அப்போது அது அவருக்கு வழங்கப்படவில்லை. இருந்தாலும், அந்த அமைச்சைப் பொறுப்பேற்பதற்கான தயார்ப்படுத்தல் அவரிடம் இருந்திருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

அவர்கலாநிதிப்பட்டம்பெற்றஅறிஞரும்கூட என்பதால், கல்விஅமைச்சைஎப்படிநிர்வகிப்பது,வடக்கின்கல்வியை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கவேண்டியதிட்டங்கள் என்ன,வடக்கின்கல்விச்சமூகம்எதிர்கொண்டுவரும்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் என்ன, கல்வி வளத்தைப்பங்கிடுவதில்காணப்படக்கூடியபாரபட்சத்தை நீக்கும் முறைகள் என்ன என்று ஏற்கனவே சிந்தித்து வைத்திருப்பார்.

இவற்றையெல்லாம் உடனடியாக, இந்த மூன்று மாதங்களுக்குள் செயற்படுத்த முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஏதாவது அதிசயங்கள் நடந்தால் ஒழிய, அப்படிப்பட்டசாதனைநிகழ்த்தப்பட முடியாததுதான். ஆனால், கல்வித் துறையில் எரியும் பிரச்சினை ஒன்றையாவது தன் கையில் எடுத்து இந்த மூன்று மாதங்களுக்குள் அதனை நல்ல முறையில் தீர்த்து வைப்பதற்குரிய வழியை அமைச்சர்ஏற்படுத்தி விடுவாரானால்தனது பதவிக்குரியதகுதியை அவர் நிச்சயம் நிரூபித்துவிடுவார்.

அதேபோன்றே வடக்கு மாகாண சபையில் உள்ள ஒரே யொரு பெண் பிரதிநிதி அனந்தி சசிதரன். பெண்கள் விவகாரத்திற்குப் பொறுப்பான உறுப்பினராகத் தன்னை முதலமைச்சர்நியமித்தாலும், அதற்கூடாக எதனையும் செய்ய முடியவில்லை என்று அவர் கடந்த காலங்களில் வருத்தப் பட்டிருக்கிறார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் முன்னாள்போராளிகளின் மறுவாழ்வுக்கு வடக்கு மாகாணசபை உதவாமல் போனமை குறித்தும் அவர் கடந்த காலங்களில் பல தடவைகளில் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே இந்த விடயங்களிலாவது அடுத்து வரும் மூன்று மாதங்களில் அவர் காத்திரமான முன்னேற்றத்தைக் காட்டுவார் என்று எதிர் பார்க்கலாம். அதற்கான திட்டங்கள் அவரிடம் முன்னரே இருந்திருக்கும்.

அவருக்கு ஒதுக்கப்பட்ட ஏனைய துறைகளில் இல்லாவிட்டாலும்கூட இந்தத் துறைகளிலாவது காத்திரமான மாற்றத்தை அல்லது மாற்றத்துக்கான வழியை, அவர் ஏற்படுத்தவேண்டும். புதிய அமைச்சர்களிடம் இருந்து செயலைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். செயற்பட முடியாமைக்கான காரணங் களை அல்ல.

# மனச்சாட்சியோடு அரசியல் செய்தால் மக்கள் கணிப்பில் உயர்ந்திட இயலும்



செ. அன்புராசா அடிகள்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கிலிருந்து தன் தந்தையின் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் ஒரு சிறுமி அனுப்பி வைத்த கடிதம் ஒன்றை என்னுடைய மின்னஞ்சலுக்கு எவரோ ஒரு நல்ல மனிதர் சில நாள்களுக்கு முன்னர் அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதம், பலரையும் அதிர வைத்திருக்கிறது – புதிதாக அதனை வாசிப்போரைத் தொடர்ந்தும் அதிர வைக்கும் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை.

அதேவேளை, அந்தச் சிறுமி, இன்றைய எமது நாட்டுத் தலைவர்களுக்கு, குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு சொல்ல விளையும் செய்தியில் பெறுமதியான பொருள் பொதிந்து இருப்பதாகவே தோன்றுகிறது. அந்தச் சிறுமியின் ஏக்கம் இதுதான்.

'ஜனாதிபதி அங்கிள்! நீங்கள் ரொம்ப நல்லவர் என்று சுமந்திரன் மாமா கூறுகின்றார். நீங்கள் ரொம்ப எளிமையானவர் என்று சம்பந்தர் தாத்தா கூறுகின்றார். உங்களைக் கொல்ல வந்தவரையே நீங்கள் மன்னித்து விடுதலை செய்தீர்கள் எனப் பத்திரிகை மாமாக்கள் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி நீங்கள் உங்கள் வீட்டு சாப்பாட்டை உங்கள் கையாலே சாப்பிடுகின்றீர்களாம். உங்கள் கைகால்களை உங்கள் கையால் கழுவுவதைக் கூடப் பெருமையாகச் சொல்லுவார்கள்போல் இருக்கு.

இந்த அளவுக்கு நல்லவரான, எளிமையானவரான, அன்பு உள்ளம் கொண்ட நீங்கள் ஏன் என்னுடைய அப்பாவை மட்டும் எனக்கு காட்ட மறுக்கின்றீர்கள்? நான் பிறந்தது முதல் என் அப்பாவின் முகத்தைப் பார்த்ததே இல்லை. நான் அம்மாவின் வயிற்றில் இருந்த போது, அப்பாவை ராணுவம் பிடித்துச் சென்றதாக அம்மா கூறுகின்றார்.

ஏனைய பெற்றோர்களது பிள்ளைகள் போல், நானும் என் அப்பாவுடன் சேர்ந்து இருக்க விரும்புகிறேன்.

நானும் என் அப்பாவின் கை பிடித்து பாடசாலை செல்ல விரும்புகிறேன். நானும் அப்பாவின் முதுகில் எறி உப்பு மூட்டை விளையாட்டு விளையாட விரும்புகிறேன். என் விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா மாமா? நான் என்ன தவறு செய்தேன். எனக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை? தமிழ் இனத்தில் பிறந்தது எனது குற்றமா? என்ற கேள்வியுடன் அந்தக் கடிதம் முற்றுப் பெறுகிறது.

மேற்சொன்னசிறுமியின் ஏக்கப் பெருமூச்சுக்கு மைத்திரி மாமா மட்டுமல்ல, சம்பந்தன் தாத்தா தொடக்கம் சாந்தி மாமி வரை பதில் சொல்லியே ஆகவேண்டும். ஏனெனில் மைத்திரி மாமா என்றால் என்ன, வடக்கு கிழக்கு மாமாக்கள் என்றால்என்ன, இவர்கள்எல்லோரும்எங்களதுவாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை காலக்கிரமத்தில் கண்டுபிடித்துத் தருவது, இராணுவ வசமுள்ள பொது மக்களுக்குரிய வாழ்விடங்களை விடுவித்துக் கொடுப்பது, அரசியல் கைதிகளை விடுவிப்பது போன்ற பல வாக்குறுதிகளைஅளித்திருந்தார்கள். தேர்தல் காலங்களில் தாங்கள் மேடைகளில் பேசியதை இப்போது கேட்டால் தாங்கள்தான் அப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று இவர்களே நம்பமாட்டார்கள்.

அந்த அளவுக்கு பேச்சுக்களாக அவை ஆக்ரோசமானவையாக இருந்துள்ளன. அதேசமயம்அவர்களால் பல வாக்குறுதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இன்று, மேற்கூறப்பட்ட மிகவும் நாள்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டி பாதிக்கப்பட்டவர்கள் கவனவீர்ப்புப் போராட்டங்களை பகலிரவுபாராது வாரங்களைக் கடந்து மாதக்கணக்கில் முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், அவ்வப் போது நேரத்திற்கு ஏற்றால்போல் அறிக்கைகளைவிடுவதோடும்,பேட்டிகளைவழங்குவதோடும், பேச்சுக்களை நடத்துவதோடும்தங்களதுகடமை முடிந்து விடுவதுபோல எமது மாமாக்கள் இப்போதுநடந்துகொள்கிறார்கள்.

மக்களது வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலென்ன, மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்களாக இருந்தாலென்ன, அவர்கள் மக்களின் நியாயமான ஏக்கங்களுக்கும், எதிர் பார்ப்புகளுக்கும்பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள். எனவேதான், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகளின் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உள்ள மக்களின் வாழ்விடங்கள் விடுவிப்புப் போன்ற மிகவும் அவசரமான பிரச்சினைகளுக்காவது இவர்கள் ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் வகுத்து அவற்றுக்குத் தீர்வு காண்பது அவசியமாகும்.

இவ்விடத்தில் கடைக்காரர் ஒருவருக்கு ஏற்பட்ட விசித்திரமான அனுபவமொன்றை எமது மக்கள் பிரதிநிதிகள் ஞாபகத்தில் வைத்திருப்பது நல்லது.

**உலகநியதி!**

எமது பகுதி கிராமம் ஒன்றில் ராமசாமி என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் தனது வீட்டுத் தோட்டத்தில் உள்ள முருங்கை ம்ரங்களில் வாரம் ஒரு முறை முருங்கைக்காய்களைப் பறித்து, எடுத்துக்கொண்டு போய் ஒரு பெரிய கடைக்காரரிடம் விற்றுவிட்டுத் தனது. குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு வருவான். ராமசாமியின் தோட்டத்து முருங்கைக் காய்கள் தரம்மிக்கவை. இதனால் அவற்றுக்கு அப்பகுதிமக்களிடம்நல்லவரவேற்புண்டு. இதனைப் பயன்படுத்தி ராமசாமி கொண்டுபோய்க்கொடுக்கும் முருங்கைக் காய்களோடு தரம் குறைந்த வேறு முருங்கைக்காய்களையும் கலந்து கடைக்காரரும் நல்லலாபம் ஈட்டி வந்தார். பல ஆண்டுகளாக முருங்கைக்காய்களை ராமசாமி அந்தக் கடைக்காரருக்கு மட்டுமே கொடுத்து வந்ததால் கடைக்காரர் அதனை நிறுத்துப் பார்ப்பதில்லை. ராமசாமி சொல்கிற நிறையைஅப்படியேநம்பி அதற்கான பணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமசாமிக்கு வழங்கி வந்தார். ராமசாமியின் நேர்மையையும் நாணயத்தையும் கடைக்காரர் மட்டுமல்ல எல்லாரும் அறிந்திருந்தனர்.
ஒருநாள்ராமசாமிபத்துக்கிலோமுருங்கைக் காய்களை கொடுத்துவிட்டு கிடைத்த பணத்தில் அதேகடையில் பொருள்களை வாங்கிக்கொண்டு வீடு சென்றுவிட்டான். சிறிது நேரத்தில், பத்து கிலோ முருங்கைக்காய்கள் மொத்தமாய்வேண்டும்என்று கேட்டுஒருவன் வந்தான். ராமசாமிபத்துக்கிலோஎனக் கொண்டுவந்தமுருங்கைக்காய்களை கட்டுடன் நிறுத்தபோது அதில் ஒன்பது கிலோ மட்டுமே இருந்தன! அதிர்ந்து போனான் கடைக்காரன். இத்தனை ஆண்டுகளாக இப்படி முட்டாள்த்தனமாக நிறை குறைவான முருங்கைக் காய்களை வாங்கி ஏமாந்து போய்விட்டேனே' என மனம் நொந்து கொண்டான் அவன்.
சில நாள்கள் கழித்து ராமசாமி நிறைய முருங்கைக்காய்களுடன் குறித்த கடைக்குச்சென்றான். அவனதுஏமாற்று வேலையைக் கையும் மெய்யுமாகப் பிடிக்கவேண்டும்' என்ற எண்ணத்தில், "எத்தனை கிலோ?" என்று கடைக்காரன் கேட்க, 'பத்துக் கிலோ' என்றான் ராமசாமி.
உடனே கடைக்காரர், ராமசாமி முன்னாலேயே நிறையைப் பார்க்க அந்த முருங்கைக்காய்கட்டில்ஒன்பதுகிலோ தான் இருந்தது. வந்த கோபத்தில் கடைக்காரர் ராமசாமியைப் பார்த்து "இப்பிடி ஏமாத்திப் போட்டியே! சீச்சீ... நீ எல்லாம் ஒரு மனிசனா!" என தாறுமாறாகத் திட்டினார். தலைகுனிந்து, நிலை குலைந்து நின்றான் ராமசாமி.
"ஐயா... என்ன மன்னிச்சிடுங்க, நான் ரொம்ப ஏழை! தராசு வாங்குகிற அளவுக்கு என்னிடம் பணம் இல்லை. ஒவ்வொருமுறையும்நீங்க கொடுக்கிற ஒரு கிலோ பருப்பை ஒரு தட்டுலயும், இன்னொரு தட்டுல முருங்கைக் காயையும் வச்சுத்தான் நிறுத்துக் கொண்டுவருவேன். இதை தவிர வேற எதுவும் எனக்குத் தெரியாதைய்யா!" என்று கண்ணீர்விட்டு அழுதான் ராமசாமி.
கடைக்காரருக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது! தான் செய்த துரோகம் தனக்கே ஆபத்தானதை உணர்ந்து கொண்டார். இத்தனை ஆண்டுகளாக ராமசாமியை ஏமாற்ற நினைத்த கடைக்காரன், தனக்குத் தெரியாமல்தானே ஏமாந்து கொண்டுதான் இருந்திருக்கிறார் என்பது தெளிவானது! இதுதான் உலக நியதி என்பதை உணர்ந்தவனாக பேச்சற்றவனாக வாயடைத்து நின்றார் அந்தக் கடைக்காரர்.

**தூய்மை அரசியல்!**

நேர்மையும் செயற்றிறனும் கொண்ட தூய்மையான அரசியலையே இந்த நாட்டின் இளைஞர் தலைமுறை உள்ளிட்ட அனைத்து மக்களும் எதிர்பார்க்கின்றனர்.
ஊழல் மோசடிகளை மேற்கொண்டு அரச வளங்களையும் பொதுமக்களின் சொத்துக்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்த, எவரையும் அனுமதிக்கமாட்டேன் என அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன இளையோர் ஒன்றுகூடல்நிகழ்வொன்றில்தெரிவித்திருந்தார்.
ஆனால் தூய்மையான அரசியல் நடத்தவேண்டும் என்று சொல்பவர்கள் தான், சாக்கடை அரசியலையும்நடத்துகிறார்கள் அல்லது நடத்தத் துணைபோகிறார்கள் என்பது கசப்பான ஒன்றாயினும், அதுவே யதார்த்த உண்மை. காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை, மக்களின் காணி விடுவிப்பு விடயங்களில் நல்லாட்சிச் செயற்பாடுகள் எதுவும் கிடையாது என்ற கணக்கில்தான் இப்போது ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

> **நேர்மையும் செயற்றிறனும் கொண்ட தூய்மையான அரசியலையே இந்த நாட்டின் இளைஞர் தலைமுறை உள்ளிட்ட அனைத்து மக்களும் எதிர்பார்க்கின்ற னர். ஊழல் மோசடிகளை மேற்கொண்டு, அரச வளங்களையும் பொதுமக்களின் சொத்துக்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்த எவரையும் அனுமதிக்கமாட்டேன் என அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன இளையோர் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் தூய்மையான அரசியல் நடத்தவேண்டும் என்று சொல்பவர்கள்தான் சாக்கடை அரசியலையும் நடத்துகிறார்கள் அல்லது நடத்தத் துணைபோகிறார்கள்.**

கூறமுடியும்.

**உரிய தீர்வு கிடைக்க உழைக்க வேண்டும்**

வடக்கில்இடம்பெறும்தொடர்ப்போராட்டங்களுக்கு உரிய தீர்வைத் தரவேண்டும்எனக்கோரிஅரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் கடந்த மாதத் தொடக்கத்தில் கடிதம் ஒன்றைஅனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிதல், இராணுவ வசமுள்ள காணிகளை விடுவித்தல், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்க நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்களைப்பற்றி எழுதியதோடு சாத்தியப்பாடான தீர்வுகளையும் முன்மொழிந்திருந்தார்.

**தீர்வுகளை முன்வைக்க யாழ். ஆயர் அழைப்பு**

யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் பாதுகாவலன் பத்திரிகையில், 2017ஆம் ஆண்டுக்கான இயேசுவின் உயிர்ப்பு விழா செய்திக் குறிப்பில் சொல்லப்பட்ட விடயங்களை நாட்டின் அரச தலைவர் உட்பட வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வது இத்தருணத்தில் மிகமிக அவசியமாகும். இவை தொடர்பாக சுமூக நடவடிக்கைகள் நடைபெறாமையால் இன்று பல இடங்களிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இப்போராட்டங்கள் நீண்ட நாள்கள் எடுத்துமக்களை இன்னும்வேதனைப் படுத்தாமலும், மக்கள் விரக்தியுற்று வேறு முடிவுகளுக்குப் போகாமலும் இருக்கத்தக்க விதமாக அரசு வேகமாகச் செயற்பட்டு முடிவுகளைக் காண வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்...' என்று ஆயர் மிக அழுத்தமாக குறிப்பிட்டுள்ளார்.
'...அரசியல்யாப்புஒன்றைஉருவாக்குவதற்கு முன்னர் உடனடியாக இயல்பு வாழ்க்கையை முழுமையாக ஏற்படுத்துங்கள். மக்கள் குடியிருப்புக் களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள். அவர்களுக்கு(இராணுவத்திற்கு) அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது.
காணாமல்போனோர் [illegible] திற்கு முழுமை[illegible]. உண்மையை வெளிக்கொணர்ந்து மக்கள் ஏற்கும் விதமாக அறியப்படுத்துங்

முடியாது.
அதேவேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவு காணுங்கள்...' எனவும் ஆயர்கூறியிருப்பது கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வைக் காண உதவும் ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டும். கேள்வி என்னவென்றால் சம்பந்தப்பட்டோர் இது குறித்து அக்கறை காட்டிச் செயற்படுவார்களா? என்பதுதான்.

**வெந்த புண்ணில் வேல் பாய்ச்சக்கூடாது**

போரினால் ஏற்பட்ட வடுக்களை இன்னுமின்னும் வலிகளாக மாற்றாமல், கொதிநிலை ஆக்காமல் அவற்றை ஆற்றுப்படுத்துகிற பணியைச் செய்ய எமது அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் என்றதொரு கருத்தை நிகழ்வொன்றில் வைத்து உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் குறிப்பிட்டமை எமது ஆழ்ந்த கவனத்திற்குரியது.
இழப்புக்களைச் சந்தித்து பல்வேறு வகையில் துன்புறும் மக்களின் துன்பங்களைப் போக்க ஆவன செய்வதை விட்டுவிட்டு அவர்களின் வேதனைகளை அரசியலாக்கி இன்னுமின்னும் அதிகமாக்கக் கூடாது என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் ஆட்சியாளர்களுக்கு உணர்த்தவும் வேண்டும்.

**முழு ஆற்றலையும் சக்தியையும் பயன்படுத்துகிறார்களா?**

அரசியல்வாதிகள் குறிப்பாக வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் மக்களின் இன்றைய அடிப்படைப் பிரச்சினைகளான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதியைக் கண்டறிதல், இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் மக்களின் வாழ்விடங்களை பெற்றுக் கொடுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க தமது முழு ஆற்றலையும், சக்தியையும், தந்திரோபாயங்களையும் பயன்படுத்தி தீர்வுகளை உடன்பெற்றுக்கொடுக்க முயலவேண்டும்.
மற்றொருபுறம், அவர்கள் மக்கள் நலன் நாடிய பணியை மேற்கொள்ளவில்லை எனக்கூறிவிட இயலாது. ஆனால், தேர்தல் காலங்களில் தாம் வெற்றி பெறுவதற்கு தங்கள் முழுமையான ஆற்றலையும் சக்தியையும் பயன்படுத்தியதைப்போன்று மேலே சுட்டிக்காட்டிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயல்கிறார்களா என்பதுதான் இங்கு கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியது! எமது அரசியல்வாதிகள் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட [illegible] மனிதாபிமான [illegible] நினைவில் கொண்டு செயற்பட்டால், அதுவே போதும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### பத்திரிகைகள் சரியான தடத்தில் பயணித்தல் அவசியம்

ஒரு சமுதாயத்தின் உயிரோட்டம் பத்திரிகைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. பத்திரிகைகள் இல்லாத சமூகம் இருளுக்குத்தான் கிடக்கும். அவ்வாறான பத்திரிகைகள், அவசியமான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செய்திகளை வெளியிட வேண்டும். பணத்தையும் அரசியல் செல்வாக்கையும் ஈட்டும் நோக்கில் முன்பு செய்திகளை வெளியிட்ட பல செய்திப் பத்திரிகைகள் பின்னர் சென்ற இடம் தெரியாது மறைந்து விட்டன.
ஒன்றுடன் ஒன்று போட்டி போடும் ஊடகங்களுக்கு மத்தியில் உதயன் தனது பணியைச் சிறப்பாகவே செய்து வருகிறது. இருந்தாலும் உதயன் என்றும் உலக நடப்புக்களை உன்னிப்பாகக் கண்காணித்து சமூகத்தையும் தமிழ் இனத்தையும் பாதையில் வழிநடத்திச் செல்வது அவசியமாகும். அப்போது தான் உதயன் என்றும் சமுதாயத்தின் வெளிச்சமாக இருக்கும்.

*சி. ஜெயகணேஷன்*
*சாவகச்சேரி.*

### ஆத்தியடி ஒழுங்கையின் பள்ளம் சீர் செய்யப்படுமா?

புலோலி, ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் குடிநீர் சந்நியான் கிணற்றுச் சந்தியில், ஆத்தியடி ஒழுங்கையும் வெள்ள வாய்க்காலும் சந்திக்கின்றன. மேல் வெள்ளம் ஓட, ஒழுங்கையின் கீழ்மட்டம் தாழ்வாக உள்ளது. வழிந்தோடும் நீர் பாய சிமெந்துக் கொங்கிறீட் தட்டுகள் போடப்பட்டுள்ளன. எனினும் மாதக் கணக்கில் இரு தட்டுகள் அவ்விடத்தில் இல்லை. பருத்தித்துறை நகர சந்தை, வர்த்தக நிலையங்களுக்கு அவசியமான அலுவல்கள் நிமித்தம் மக்கள் இரவு பகலாக பயணிக்க நேர்வதும் இந்தப் பிரதான ஒழுங்கை யூடாகவே. வாய்க்காலும் ஒழுங்கையும் செப்பனிடப்பட்டு நீண்ட நாள்கள் ஆகிய நிலையில் இந்தத் தட்டுப் பள்ளம் சீர் செய்யப்படவில்லை. அவசரப் பயணத்தின்போது எதிர்பாராத விதத்தில் விபத்துகள் ஏற்படலாம். உரிய நகர நிர்வாகம் இதனைக் கவனத்தில் எடுத்து சிரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*திருமதி சி. விமலாதேவி*
*புலோலி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மில்கோ நிறுவனத்தின் நாளாந்த உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவிப்பு

“ஆஸ்திரேலிய அரசுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக உயர்தரத்திலான 2 ஆயிரத்து 500 கறவைப் பசுக்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு கொண்டு வரவுள்ளோம்.”

மில்கோ நிறுவனத்தின் நாளாந்தப் பாலுற்பத்தியை 10 லட்சம் லீற்றர்களாக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.


கிராமிய பொருளாதாரத்துறை அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் பேதே அமைச்சர் இந்த விடயங்களை சுட்டிகாட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், “ஆஸ்திரேலிய அரசுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக உயர்தரத்திலான 2 ஆயிரத்து 500 கறவைப் பசுக்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு கொண்டுவரவுள்ளோம். கால்நடை உற்பத்தியாளர்களுக்கு பாலை விற்பனை செய்வதில் இதுவரையும் எந்தவித பிரச்சினைகளும் ஏற்படவில்லை. மில்கோ நிறுவனத்துக்கு மேலதிகமாக நெஸ்லே, பெல்வத்த நிறுவனங்கள் பாலைக் கொள்வனவு செய்கின்றன. சிறிய வர்த்தகர்களும் இதில் பங்குகொள்கின்றனர். படல்கம பிரதேசத்திலும் புதிய பாலுற்பத்தித் தொழிற்சாலையொன்றினை ஆரம்பிக்கவுள்ளோம்” - என்றார்.

| COLOMBO STOCK EXCHANGE | கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455 | |
|---|---|---|
| | 30/6/2017 | |
| | www.cse.lk | |

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 44.54 | 6,747.07 | 6,702.53 |
| S&P SL20 | 30.28 | 3,933.51 | 3,903.23 |
| வியாபாரப்புரள்வு | | 1,209,720,700 | 539,307,710 |
| உள்நாடு:- கொள்வனவு | | 426,708,032 | 278,201,856 |
| விற்பனை | | 859,686,910 | 300,267,776 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 783,012,740 | 261,105,872 |
| விற்பனை | | 350,033,824 | 239,039,952 |





| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 178.80 | 1,950,437 | 349,115,597 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 153.90 | 1,767,790 | 271,191,518 |
| இலங்கை கொமரஷல் வங்கி - | COMB.N | 139.50 | 520,659 | 72,583,443 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 242.00 | 285,478 | 68,712,386 |
| டயலொக் | DIAL.N | 12.00 | 3,297,508 | 39,306,815 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 76.00 | 427,097 | 32,140,631 |
| டோக்கியோ சிமேன் | TKYO.X | 69.60 | 411,905 | 28,390,777 |
| றிச்சட் பீரிஸ் அன் கம்பனி | RICH.N | 10.40 | 2,622,234 | 26,813,103 |
| அக்கின் ஸ்பொன்ஸ் | SPEN.N | 68.00 | 374,036 | 25,416,801 |
| கெல்சி டேவலப்மென் | KDL.N | 59.00 | 395,899 | 23,358,041 |

- பங்குலாபம் -

நவலோகா கொஸ்பிற்றல் - ரூபா 0:10
பிம்புத்து பைனான்ஸ் - ரூபா. 1:00
டோக்கியோ சிமேன் - ரூபா. 1:87

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 245 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |



# திருகோணமலையில் சூரிய சக்தி நிலையத்தை ஆரம்பிக்கத் தீர்மானம்

## இந்தியாவுடன் பேசவுள்ளோம் என எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் சுலட்சண ஜயவர்தன கருத்துரைப்பு

திருகோணமலையில் சூரிய சக்தி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை அரசு இந்தியாவுடன் பேச்சு மேற்கொள்ளவுள்ள தகவலை எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் சுலட்சண ஜயவர்தன வெளிப்படுத்தியுள்ளார்.

பேச்சுகளைத் தொடர்ந்து திருகோண மலையில் குறித்த சூரிய சக்தி நிலையத்தை அமைப்பது சாத்தியமானதா என்பது குறித்து ஆய்வொன்று இடம்பெறவுள்ளதாகவும். ஆய்வின் முடிவுகளை தொடர்ந்து அடித்தளம் அமைப்பது குறித்து சிந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த ஏப்ரல் மாதம் இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட்டிருந்ததுடன் குறித்த ஒப்பந்தத்தில் கொழும்பு துறைமுகத்தில் ஒரு திரவ இயற்கை எரிவாயு ஆலை அமைப்பது பற்றியும், திருகோணமலையில் சூரிய சக்தி ஆலை அமைப்பது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.

உ
வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்

யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை

அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய கனடா வாழ் ஆலய தர்மகர்த்தாக்களினதும் அடியவர்களினதும்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை



சூலம்கொண்டு சூரம் காட்டி ஞாலம் காப்பவள் நம் ஈழம் தன்னில் எழுந்தருளும் ஏக நாயகியாம் அன்னை வீரமாகாளி தாயின் எழில் மிகு சுந்தர சுவர்ண இராஜ கோபுரத்தை இலங்கை திருநாட்டில் யாழ் மண்ணிலே முதன்முதலாக தனிப்பட்ட திருப்பணியாக ஏற்று நிறைவேற்றி கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்ற தெய்வவாக்கை மெய்ப்பித்த பெருந்தகைகளாம் ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா அவர்களின் கணவரும் சத்தியேந்திரன் (நியூசிலாந்து). நிர்மலேந்திரன். இந்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையுமான காரைநகரைப் பிறப்பிடமாக கொண்ட

அமரர் வேலுப்பிள்ளை அரசறட்ணம்

அவர்கள் நியூசிலாந்தில் இயற்கை எய்திய செய்தி கேட்டு பெரும் மனத்துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயர்கொண்டிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கூறிநிற்கின்றோம். வீரமாகாளி தாயின் உற்சவ காலத்திலே இயற்கை எய்திக் கொண்ட அன்னாரின் ஜீவாத்மா அன்னை வீரமாகாளியின் பாதார விந்தங்களை சரண்கொண்டு அன்னையின் பாதக்கமலங்களில் இளைப்பாற குல தேவியாம் அன்னை வீரமாகாளி தாயாரை பிரார்த்தனை செய்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவஸ்ரீ சிவ.ஸ்ரீபிரகாஷ் ஐயா (சுரேஸ் ஐயா),
சிவஸ்ரீ சிவ.அருள்பிரகாஸ் ஐயா (ரமேஸ் ஐயா),
சிவஸ்ரீ சிவ.கல்யாணசுந்தர் ஐயா (குணேஷ் ஐயா)
(மேற்படி ஆலய கனடாவாழ் ஆதீன பரம்பரை தர்மகர்த்தாக்கள்)
கனடாவாழ் அன்னையின் அடியவர்கள்
தொடர்பு: சிவஸ்ரீ தேசமான்ய சிவஸ்ரீ சிவ. கமல்ராஜ் குருக்கள்
(மேற்படி தேவஸ்தான பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுணர்வாகும் கூட்டுறவு

## இன்று உலக கூட்டுறவுதினம்

நடராஜன் ஹரன்


கூட்டுறவு என்பது ஜனநாயக அடிப்படையில் கட்டுப்படுத்தப்படும் தன்னார்வமான தொழில்முயற்சியை முதன்மைப்படுத்தும் ஒழுங்கமைப்பாகும். தன்னிச்சையாக ஒன்று கூடும் தனியாள்களின் பொதுவான பொருளாதார, சமூக, கலாசார தேவைகளை அடைந்துகொள்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

பன்னாட்டுக் கூட்டுறவுதினம் ஒவ்வோர் ஆண்டின் ஜூலை மாதத்திலும் வருகின்ற முதலாவது சனிக்கிழமைகளில் கொண்டாடப்படுவதுடன் 1923 ஆம் ஆண்டுமுதல் பன்னாட்டு கூட்டுறவு ஒன்றியத்தால் கடைப்பிடிக்கப்பட்டும் வருகிறது. கூட்டுறவுத்துறை நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை ஆற்றிவருகின்ற போதிலும் முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியோடு கூட்டுறவானது பலதுறைகளிலும் தனது முக்கியத்துவத்தை படிப்படியாக இழந்தே வந்துள்ளது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டங்களில் கூட்டுறவுத்துறையில் ஏற்பட்ட எழுச்சியுடன் ஒப்பிட்டு நோக்கும்போது தற்போதைய நிலையில் மேற்குறிப்பிட்ட கருத்து நிலைகளை அவதானத்துடன் நோக்க வேண்டியுள்ளது. நவீனத்துவங்களின் போக்கு முன்னகர்ந்துள்ள காலத்தின் வழியே 'உலகமயமாதல்' சிந்தனையின் அதீதங்களால் மேலும் இதன் வளர்ச்சிப்போக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

### கூட்டுறவுத் தத்துவத்தின் பொது இயல்புகள்

மனிதன் ஒரு சமூகப்பிராணி. சமூகத்தோடு எந்தவித உறவுமின்றி அவனால் பிரபஞ்சத்துடன் ஐக்கியத்தை பேண முடியாது. 'நான்' எனும் அகம்பாவத்தை அகற்றிவிட இயலாது. சமுதாயச் சார்பு நிலைகள் அவனுடைய நம்பிக்கையை சோதனை செய்து கொள்வதற்கும், உண்மையின் தன்மை வெளி கொண்டு தன்னையே அளந்து கொள்வதற்கும் உதவுகிறது. இந்த அடிப்படையில் கூட்டுறவுத் தத்துவத்தின் பொது இயல்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சேர்ந்து செயலாற்றுதல் (Associated Action)
2. சகலருக்கும் பொதுவானதான தன்மை (Universality)
3. தனிநபர் சுதந்திர விருப்பு (Free Will of the individual)
4. சமத்துவம் (Equality)
5. ஜனநாயகம் (Democracy)
6. சேவை நோக்கு (Service)
7. தனிநபர் சுதந்திரம் (Individual Freedom)
8. நடுநிலையும் சமூக நீதியும் (Equity and Social Justice)
9. கூட்டுணர்வு (Spirit of Solidarity)
10. புதிய சமூக ஒழுங்கு (New Social Order)
11. மனிதரின் அந்தஸ்தினை மதித்தல் (Rocognition of dignity of men)
12. உயர் ஒழுக்க நிலை (High moral standard)



### கூட்டுறவுக் கொள்கைகள்

1966ஆம்ஆண்டுஅனைத்துலக கூட்டுறவு மாநாட்டில் ஐந்து அம்சங்களை உள்ளடக்கியதான கூட்டுறவுக் கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. அவை வருமாறு.

1. தன் விருப்புடனான தடையற்ற அங்கத்துவம்
2. ஜனநாயக முறைக் கட்டுப்பாடும், நிர்வாகமும்
3. முதலுக்கு ஏற்ப வட்டி வீதம்
4. இலாபத்தை அங்கத்தவரிடையே சமமாகப் பங்கிடப்படல்
5. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பு

### விவசாயமும், கூட்டுறவும்

இலங்கை ஆங்கிலேயரது காலணித்துவத்தின் கீழாக இருந்தவேளை கிராமிய விவசாயம் புறக்கணிப்பட்டது. பெருந்தோட்டச் செய்கையில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்காக கிராமிய விவசாய நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன.. இயற்கையின் வறட்சி கிராமிய விவசாயிகளைப் பெருமளவு பாதிப்புகளை ஏற்படுத்தியதுடன் அவர்களை வறுமைக்குட்படுத்தியது. ஆனாலும்20ஆம்நூற்றாண்டின்ஆரம்பத்தில்இலங்கைஆளுநர் நாட்டிலிருந்த விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட விவசாய வங்கித் தொழிற் குழுவின் விதப்புரைகள் சார்ந்து அங்கீகரிக்கப்பட்ட தீர்வொன்றாக 1911 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டுறவுக் கடன் சங்கங்களை அமைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

1911 ஆம் ஆண்டில் இலங்கை விவசாயச் சங்கங்களுக்குப் பதிலாக விவசாயத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்திருத்தத்தின்படி ஏனைய வகைச் சங்கங்களும் பதிவு செய்ய வகை செய்யப்பட்டன. இதனால் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் என்பன பதிவு செய்யப்பட்டன. 1939 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகயுத்தத்தினால் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு பங்கீட்டு அடிப்படையில் உணவு விநியோகிக்கும் பொறுப்பு கூட்டுறவுத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நெல் உத்தரவாத விலைத்திட்டம், நெற்களஞ்சியங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

### சங்கங்களின் ஆரம்பம்

1949 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டத்திருத்தத்தின் மூலம் நாணய உதவி வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டது. குடிசைக் கைத்தொழில்களிலும், பாரம்பரிய ஜீவனோபாயத் தொழில்களிலும் ஈடுபட்டவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

உதாரணமாக கூட்டுறவுப் பாற்பண்ணை சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், தெங்கு உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள், நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள். தும்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல், ஓடு உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள், அச்சிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள், பாதரட்சை செய்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், புகையிலை பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். 1957 ஆம் ஆண்டுகளிலிருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1958 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையில் இயங்கிய பல வகைக் கூட்டுறவுச் சங்கங்களினது எண்ணிக்கை12 ஆயிரத்து 852 ஆகக்காணப்பட்டது. இவற்றைத்தவிர இரண்டாம்படிச் சங்கங்களாக கூட்டு றவுச் சங்கங்களும் இயங்கின. தற்போது கூட்டுறவுச் சங்கங்களும், சிக்கனக் கடனுதவிச் சங்கங்களும் பல்வேறு சேவைத் தொழிற்துறையினரிடையேயும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

### கூட்டுறவு அமைப்பு

ஆக, கூட்டுறவோடு அனைவரும் திறம்படச் செயற்பட்டால் பொருளாதாரம், மக்களின் நலன், ஜனநாயகம் என்பன பேணப்படும். அரசியல் தலையீடு இல்லாமல் கூட்டுறவு உறுப்பினர்களுடைய விருப்பத்தினை முதன்மைப்படுத்தி இந்த இயக்கங்கள் செயற்பட வேண்டும். அதன் வழியே செயலாற்ற வேண்டும். கூட்டுறவு இயக்கம் நாட்டின் வளர்ச்சிக்கான ஒரு அமைப்பு மட்டுமல்லாது கிராமப் புறங்களில் இருந்து நகர்ப்புறங்கள் வரை உள்ள பல ஆயிரம் அமைப்புகளின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளும் ஓர் அற்புதமான கட்டமைவு. ஜனநாயகத்திற்கு எப்போதுமே பாலபாடங்களைக் கற்பிக்கவும், அனுபவங்களை கூட்டிணைவின் வழியே தனித்துவமாகப் போதிக்கவும் தளைப்புற்ற போதி மரங்கள். புரிந்து கொள்ளல் வேண்டும். எல்லோரும் கூட்டுறவோடு ஒருங்கிணைதல் வேண்டும். கூட்டுறவே நாட்டுயர்வு.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## கனகம்மா (கமலா) சபாரத்தினம்

பிறப்பு
31.08.1942

இறப்பு
12.07.2016

திதி: வளர்பிறை அட்டமி

காற்றைப் போல ஆண்டு ஒன்று கரைந்து போனாலும்
கல்லைப்போல உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சில் நிலையாய் இருக்கின்றது.
இன்றும் உங்கள் பாசத்துக்காய் ஏங்கி
காத்திருக்கும் உறவுகள்.......

குடும்பத்தினர்.
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்



## இடபம்

கிருத்திகை 2.3,4ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1. 2ஆம் பாதம்

நினைத்ததை முடிப்பவர்களே எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 13ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 3இல் ராகுவும் 9இல் கேதுவும் அமர்ந்து பலன் தர உள்ளார்கள்.

**ராகுவின் பலன்கள்:** இதுவரை 4இல் இருந்த ராகு தைரிய ஸ்தானத்தில் அமர்வதால், தடைகளைத் தகர்த்து முன்னேறுவீர்கள். முடியாமல் தடைப்பட்ட காரியங்கள் நல்லபடியாக முடியும். எதிலும் வெற்றி உண்டாகும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் மனைவி இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும்.

5.4.18 முதல் 10.12.18 வரை ராகு பகவான் உங்களின் யோகாதிபதியான சனி பகவானின் பூசம் நட்சத்திரத்தில் செல்வதால், தந்தையாரின் ஆரோக்கியம் சீராகும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். புதிய பதவி, பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். உங்களின் அஷ்டம லாபாதிபதியான குரு பகவானின் புனர்பூசம் நட்சத்திரம் 4ம் பாதம் கடக ராசியில் 11.12.18 முதல் 13.2.19 முடிய ராகு பகவான் பயணிப்பதால், வீண் அலைச்சல், பணப்பற்றாக்குறை வந்து நீங்கும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். அடிவயிற்றில் வலி, ஒற்றைத் தலை வலி, நெஞ்சு எரிச்சல் போன்ற ஆரோக்கியக் குறை பாடுகள் உண்டாகும். மாணவ மாணவியருக்கு, விரும்பிய பாடப்பிரிவில், விரும்பிய கல்வி நிறுவனத்தில் படிப்பதற்கு இடம் கிடைக்கும்.

சிலருக்கு வெளிநாடு அல்லது வெளிமாநிலத்தில் நல்ல வேலை கிடைக்கும். பதவி உயர்வு தேடி வரும். கலைத் துறையினரே! வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து வாய்ப்புகள் வரும்.

**கேதுவின் பலன்கள்:** உங்கள் ராசிக்கு 9இல் அமரும் கேது தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்வார். வேலைச்சுமை குறையும். தோல்வி மனப்பான்மை விலகும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கும். வேற்றுமொழி பேசுபவர்களால் திடீர்த் திருப்பங்கள் உண்டாகும். பூர்வீகச் சொத்து வகையில் பிரச்சினைகள் தலைதூக்கும். புதிதாக அறிமுகமாகும் நபர்களால் ஆதாயம் உண்டாகும்.

சொத்துகள் சேரும். சகோதரர்களால் உதவி கிடைக்கும். உங்களின் திரிதியாதி பதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது செல்வதால், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். சில நேரங்களில் சளித் தொந்தரவு, கழுத்துவலி வந்து நீங்கும். 7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் பூர்வ புண்ணியாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ஆம் பாதம் மகர ராசியில் கேது செல்வதால், பெற்றோரின் உடல்நிலை பாதிக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1569-போலந்து லித்துவேனியா என்பன உண்மையான ஐக்கியத்தை உறுதிப்படுத்தின. இந்த இணைந்த நாடு போலிஷ் லுத்து வேனியன் பொதுநலவாயமென அழைக்கத்தீர்மானிக்கப்பட்டது.

1770-லெக்ஸல் வால்வெள்ளி புவியைக் கடந்து சென்றது. வரலாற்றில் புவியை மிக அண்மித்துக் கடந்து சென்ற வால்வெள்ளி இதுவே எனப் பதிவு செய்யப்பட்டது.

1819 -ஜொகன் ஜோர்ஜ் ட்றோல்சால் 1819 இன் பெரிய வால்வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டது. மின்காந்த அலைகளைப் பயன்படுத்தி ஆராயப்பட்ட முதல் கோயில் அறகோ என்பவரால் இது ஆராயப்பட்டது.

1837- பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்யும் குடியியல் முறைமை இங்கிலாந்து மற்றும் வேல்சில் அமைக்கப்பட்டது.

1858- லண்டன் லின்னென் கொஸைட்டியில் சாள்ஸ் டார்வின் மற்றும் அல்பிரட் றஸல் வல்லசெஸ் இணைந்து கூர்ப்புத் தொடர்பான ஆய்வைச் சமர்ப்பித்தனர்.

1862-மொஸ்கோ பொது நூதனசாலை எனும் பெயரில் ரஷ்ய நாட்டின் நூலகம் உருவாக்கப்பட்டது.

1863-நெதர்லாந்தினால் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட தினம் சூரினாமில் விடுதலை நாளாக அடையாளப்படுத்தப்பட்டது.

1870-அமெரிக்க நீதித் திணைக்களம் முறைப்படி நடைமுறைக்கு வந்தது.

1874-முதலாவது வர்த்தக ரீதியிலான தட்டச்சு ஷோல்ஸ் அன்ட் கிளைடன் தட்டச்சு விற்பனைக்கு இடப்பட்டது.

1878 -பன்னாட்டுத் தபால் யூனியனுடன் கனடா இணைந்து கொண்டது.

1879-தவோச்டவர் காவற் கோபுரம் சமய சஞ்சிகை முதற்பதிப்பு சாள்ஷ் டாஷ் றசலால் வெளியிடப்பட்டது.

## நாளை

**ஆனி - 18**

ஞாயிற்றுக்கிழமை -02.07.2017

திதி:நவமி பி.இ. 12.02 வரை

நட்சத்திரம்:சித்திரை பி.இ.03.44 வரை

சுபநேரம்:08.56-10.26 வரை

ராகுகாலம்:04.26-05.56 வரை


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே"

திதி : ஆனிமாத பூர்வபக்க அட்டமி

01.07.2017 சனிக்கிழமை

மண்ணுலகில் 16.11.1932

விண்ணுலகில் 12.07.2016



திருமதி

இராசேஸ்வரி இரத்தினம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
**திருமதி இராசேஸ்வரி இரத்தினம்**
**அவர்களின் ஓராண்டு நினைவுநாள்**

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
அன்னையே அருமைத் தெய்வமே!
நிஜத்தில் நீங்கள் எம்முடன் இன்றில்லை - ஆனால்
நினைவில் தினமும் எம்முடன் வாழ்கின்றீர்கள்!
கனிவான புன்னகையுடன் இனிய முகம்
காணத் துடிக்கின்றோம்.

அன்பின் திருவுருவாய்! குடும்பத்தின் குல விளக்காய்!
பாசமிகு அன்னையாய், அன்புள்ள மாமியாய்,
ஆசை அம்மம்மாவாய், அப்பம்மாவாய்,
நீங்கள் வாழ்ந்த காலங்கள் எம் நெஞ்சில்
என்றென்றும் பசுமையாய் நிலைத்திருக்கும்.

" மழைகூட ஒருநாளில் தேனாகலாம்
மணல் கூட ஒருநாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமோ
அம்மா என்றழைக்கின்ற சேயாகுமோ"

அன்புத் தெய்வமே! அம்மா
உங்கள் ஆத்மசாந்திக்காக
பிரார்த்திக்கும் அன்பு உள்ளங்கள்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமகாதகன்**

கஷ்டமே நிறைந்த ஏழைக்கு பக்கத்து வீட்டு
சாவு கூட மனதை பாதிப்பதில்லை
அவனுக்கென்ன நிம்மதியாக சென்றுவிட்டான்
என வேலைக்குப் போகிறார்கள்

2 12 19

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 8 | | | 3 | |
| 1 | 6 | | | | 5 | | 7 | 4 |
| | | | 9 | | | | 6 | |
| | 4 | | | 7 | | 1 | | 2 |
| | | | | | | | | |
| 5 | | 1 | | 6 | | | 4 | |
| | 7 | | | | 8 | | 1 | |
| 4 | 1 | | 7 | | | | 2 | 3 |
| | 3 | | | 1 | | | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# வி.ஐ.பி. 2
## இம்மாத இறுதியில்

சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'வேலையில்லா பட்டதாரி 2' (வி.ஐ.பி. 2) திரைப்படம் எதிர்வரும் 28ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

'ப.பாண்டி' படத்தைத் தொடர்ந்து 'வேலையில்லா பட்டதாரி 2' படத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார் தனுஸ். ஒரே கட்டமாக மொத்த படப்பிடிப்பையும் முடித்து, இறுதிகட்ட பணிகள் தொடங்கப்பட்டன. சமீபத்தில் மும்பையில் இந்தப் படத்தின் ட்ரெய்லர் மற்றும் பாடல்கள் வெளியிடப்பட்டன. ட்ரெய்லருக்கு இணையத்தில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது, இந்தப் படம் எதிர்வரும் 28ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. ட்ரெய்லருக்கு கிடைத்துள்ள வரவேற்பு குறித்து தனுஷ், "எடிட்டர் பிரசன்னா, சவுந்தர்யா ரஜினிகாந்த் மற்றும் மேதை சீன் ரோல்டன் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாது இப்படத்துக்காக கடினமாக உழைத்த குழுவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது ஜூலை 28ஆம் திகதிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேன். எனக்காக எப்போதும் நிற்கும் எனது ரசிகர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேல்ராஜ், அனிருத், ராஜேஸ் என வேலையில்லா பட்டதாரி முதலாவது பாகத்தில் பணியாற்றியவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் "என தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தில் தனுஸுடன் அமலா பால், கஜோல், சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள். ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். தனுஷ் தயாரித்துள்ள இப்படத்தை தாணு வெளியிடவுள்ளார்.




முடி
வெட்டிட்டு
சலூன்
கண்ணாடில
பாத்தா
சுப்பரா
இருக்கு...!
குளிச்சிட்டு
வீட்டு
கண்ணாடில
பாத்தா
கன்றாவியா
இருக்கு!!

**வீட்டுப் பாடம் செய்யல... அம்மா காலையில 9 மணிக்கு எழுந்தா போதும்... லீவு போட்டுடலாம்... சாமி**



**இதைப் பயன்படுத்துபவர்களே முன்னேறுகிறார்கள்... அனைத்துத் துறைகளிலும்...!**



**செய்தி: வங்கிகளில் ரோபோக்களை பணிக்கு அறிமுகப்படுத்தத் திட்டம்**




**அப்போ ஏற்கனவே இருக்கிற ரோபோக்களை என்ன செய்வாங்க?**

**பக்கத்து வீட்டுக்காரங்க பேரு மறந்துடுச்சு...**



**ஆனா பத்தாம் ஆண்டில் கூட படிச்ச பொண்ணோட பேரு முழுசா ஞாபகத்தில் இருக்கு. மனித மூளை விசித்திரமானது...**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில்வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**இடபம்:** நீண்ட நாள் பிரச்சினையில் நல்ல முடிவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பணிகளில் தகுந்த முன்னேற்பாடுடன் செயற்படுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்க வேண்டாம்.

**கடகம்:** பொதுநல சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** நீங்கள் தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**கன்னி:** செயல்களில் தர்ம, நியாயத்தை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** குடும்ப சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் பொருள்கள் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** தர்ம சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மனைவியின் அன்பும், ஆதரவும் கிடைக்கும்.

**தனுசு:** பேச்சு மற்றும் செயலில் சாதுர்யமாக விளங்குவீர்கள். எதிரிகள் இடம் மாறி போகும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.


**மகரம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் உருவாகலாம். உங்கள் நலன் விரும்புபவரின் ஆலோசனை நல்வழி காட்டும் தொழில், வியாபாரத்தில் ஆதாயம் ஓரளவே கிடைக்கும்.

**கும்பம்:** பிறருடன் பேசுவதில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும்.

**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். ஆர்வமுடன் பயன்படுத்தி நன்மை பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## படங்களைப் பார்த்து கதையை முழுமை செய்து எழுதுவோம்

1. ------------------ ஒன்று தாகத்தால் ------------------ தேடி அலைந்தது.
2. ஒரு ------------------ முற்றத்தில் தண்ணீர்க் ------------------ ஒன்று இருப்பதைக் ------------------
3. ------------------ எட்டிப் பார்த்தது.
4. ------------------ குறைவான நீரே ------------------
5. காகம் ------------------ செய்தது.
6. குடத்தின் அருகில் பல குருணிக் ------------------ இருப்பதைக் கண்டது.
7. காகம் அந்தக் ------------------ எடுத்து ------------------ உள்ளே போட்டது.
8. தண்ணீரின் மட்டம் உயர்ந்து ------------------
9. காகம் ------------------ ப் பருகியது.
10. காகம் ------------------ தீர்ந்து பறந்து ------------------
11. இந்தக் கதைக்கு ஒரு பெயர் வைப்போம் ------------------



## வர்ணம் தீட்டுவோம்



## உலக தினங்கள்

*நேற்றுமுன்தினம் வெளியான பகுதியின் தொடர்ச்சி*

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 28 | - | உலகதொழிலாளர் ஞாபகார்த்த தினம் |
| ஏப்ரல் 29 | - | உலக நடன தினம் |
| மே 1 | - | உலக தொழிலாளர் தினம் |
| மே 3 | - | உலக பத்திரிகை சுதந்திர தினம் |
| மே 4 | - | உலக தீயணைப்பாளர் தினம் |
| மே 8 | - | உலக செஞ்சிலுவை தினம் செம்பிறை தினம் |
| மே 12 | - | உலக தாதிகள் தினம் |
| மே 2 ஆம் ஞாயிறு | - | உலகஅன்னையர் தினம் |
| மே 15 | - | உலக குடும்ப நல தினம் |
| மே 17 | - | உலக தகவல் தொடர்பு தினம் |
| மே 18 | - | உலக நூதன சாலை தினம் |
| மே 21 | - | உலக கலாச்சார பண்பாட்டு தினம் |
| மே 31 | - | உலக புகைத்தல் போதை எதிர்ப்பு தினம் |
| ஜூன் 1 | - | உலக குழந்தைகள் தினம் |
| ஜூன் 4 | - | தாக்குதல்களுக்குப் பலியான உலக பச்சிளம் சிறுவர் தினம் |
| ஜூன் 5 | - | உலகசுற்றுச் சூழல் தினம் |
| ஜூன் 7 | - | உலக தொல் பொருளியலாளர் தினம் |
| ஜூன் 8 | - | உலக சமுத்திர தினம் |
| ஜூன் 10 | - | குமிழ் முனைப் பேனா தினம் |
| ஜூன் 12 | - | உலககுழந்தைத்தொழிலாளர்எதிர்ப்புதினம் |
| ஜூன் 14 | - | உலக குருதிக் கொடையாளர் தினம் |
| ஜூன் 20 | - | உலக அகதிகள் தினம். |
| ஜூன்3 ஆம் ஞாயிறு | - | உலக தந்தையர் தினம் |
| ஜூன் 21 | - | உலக இசை தினம் |
| ஜூன் 26 | - | உலக போதைப் பொருள் எதிர்ப்புத் தினம் உலக நல்லொழுக்க தினம் |
| ஜூன் 29 | - | புள்ளியியல் தினம் |

## வஞ்சகக் கொக்கும் புத்திசாலி நண்டும்



பசுமை எங்கும் நிறைந்திருந்த அந்த ஊரில் ஒரு பெரிய குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தில் ஒரு கொக்கு தினசரி மீன் பிடித்து உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது. தினமும் போராடி மீன்களைப் பிடிப்பதால் கொக்கு மிகவும் சலிப்புற்றிருந்தது. ஒரு நாள் கொக்கு வருத்தத்துடன் ஒன்றைக் காலில் நெடு நேரமாக நின்று கொண்டிருந்தது. மீன்கள் அதன் பக்கமாகப் போயும், அது அவற்றைப் பிடிக்கவில்லை. "என்ன கொக்காரே! இன்று உமக்குப் பசியில்லையோ?" என்றது ஒரு மீன். "அப்படியில்லை" என்று கூறி விட்டு மீண்டும் மௌனமானது கொக்கு. மீன்களும் விடுவதாயில்லை. "எங்களுக்கு சொன்னால் தானே உமது கவலை எமக்குத் தெரியவரும்" என வற்புறுத்தின. "சரி நீங்கள் வற்புறுத்திக் கேட்பதால் சொல்லுகிறேன். மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்". "இப்போது இங்கே ஒரு மீனவன் வரப்போகிறான்" என்றது கொக்கு. "வரட்டுமே. அதற்கென்ன? என்றது ஒரு மீன். அவன் ஒரு பெரிய வலை கொண்டு வந்து ஒட்டுமொத்தமாக உங்களையெல்லாம் பிடித்துச் சென்று விடப் போகிறான்" என்றது கொக்கு. இதனைக் கேட்டு மீன்கள் எல்லாம் அதிர்ச்சியடைந்து தங்களைக் காப்பாற்றுமாறு கொக்கிடம் வேண்டிக் கொண்டன. அப்போது கொக்கு "அவனுடன் என்னால் சண்டை செய்ய முடியாது. ஆனால் வேறு குளத்துக்கு உங்களைக் கொண்டு போய் விடுகிறேன்" என்றது. மீன்கள் கொக்கை நம்பின. கொக்குக்கு ஒரே மகிழ்ச்சி. அது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மீனாக பலமுறைகள் மீன்களைத் தூக்கிச் சென்று தின்று விட்டு மீதி யானவற்றை ஒரு பாறையில் பரவலாக உலர வைத்தது.



நண்டு ஒன்று குளத்தில் நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தது. "கொக்காரே என்னையும் மீனவன் வலை வீசிப்பிடிப்பான் தானே! ஆதலால் என்னையும் வேறு குளத்தில் கொண்டு போய் விட்டு விடுங்கள்" என்று கொக்கிடம் மன்றாடியது நண்டு. கொக்கு நண்டை தூக்கிக் கொண்டு பறந்தது. பறக்கும் போது வழியில் மீன்களின் முள்ளுடல்கள் சிதறிக் கிடப்பதையும், பாறையில் பல மீன்கள் குவிந்து கிடப்பதையும் கண்ட நண்டு, மீன்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்தறிந்தது. உடனே நண்டு தனக்கும் இக்கதிதான் ஏற்படும் என எண்ணி "கொக்காரே நீங்கள் என்னைக் கொண்டு வந்து விட்டீர்கள். அங்கே என் உறவினர் பலர் வரப்போகும் ஆபத்தை அறியாமல் இருக்கின்றனர். ஐயோ! அவர்கள் பாவம். என்னை ஒரு தடவை அங்கு கொண்டு சென்றீர்களானால் அவர்களிடம் விடயத்தை தெரியப்படுத்தி அவர்களையும் உங்களுடன் வர தயார்படுத்தி விட்டு வருவேன்" என்றது. நிறைய நண்டுகள் கிடைப்பதில் கொக்குக்கு இரு மடங்கு மகிழ்ச்சி. அப்படியா? இன்னும் அங்கே நண்டுகள் உள்ளனவா?" என கேட்டபடி நண்டை மீண்டும் குளத்தில் இறக்கி விட்டது கொக்கு. நண்டின் செய்தி கேட்டு நண்டுகள் மட்டுமல்ல, எஞ்சிய மீன்களும் பிழைத்துக் கொண்டன.

**துஷ்டரைக் கண்டால் தூர விலகு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கடிதம் பற்றி விசாரணை

வவுனியா, ஜூலை1

வவுனியாவில் சடலமாக மீட்கப்பட்ட சிறுமி இறப்பதற்கு முன்னர் எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கடிதத்தில் தன்னை அடித்துக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று அவர் எழுதியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மன்னார் சாலையில் அன்பகம் என்ற இல்லத்தில் தங்கியிருந்த றொக்சிகா (வயது -11) என்ற சிறுமியே நேற்றுமுன்தினம் அங்கு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

"சிறுமி கல்விகற்றுவந்த பாடசாலையின் ஆசிரியர் தாக்கியதனால்தான் சிறுமி தவறான முடிவு எடுத்து உயிர்துறந்துள்ளார்" என்று அன்பகம் இல்லத்தினர் குற்றஞ் சாட்டுகின்றனர். சிறுமி எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றை விசாரணைக்காகச் சென்ற பொலிஸாரிடம் பாடசாலை அதிபர் பி.கமலேஸ்வரி ஒப்படைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"என்னை அன்பகத்தில் அடித்துகொடுமைசெய்கிறார்கள்" என்று உயிர் துறந்த மாணவி, கடந்த மார்ச் முதலாம் திகதி தனது கைப்பட கடிதம் ஒன்றை எழுதி வகுப்பாசிரியரிடம் ஒப்படைத்தார் என்றும் அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பிள்ளைக்கு ஆலோசனை வழங்கியதாகவும் பாடசாலை அதிபர் தெரிவிக்கிறார்.

"இது குறித்து பாடசாலை அதிபர் எமக்கு அறிவிக்கவில்லை. அது தொடர்பில் எமக்குத் தெரிவித்திருக்கவேண்டுமே தவிர, மாணவியின் உயிருக்கு உலைவைத்துவிட்டு பாடசாலை அதிபர் இவ்வாறு கருத்துக்கூறக்கூடாது.

கடந்த 6 மோதங்களுக்குமுன்னர் அந்த மாணவியிடம் முறைகேட்டுக்குஉட்படுத்தப்பட்டதாகத்தெரிவித்துசிறுவர் நன்நடத்தைப் பிரிவினர் இந்தஇல்லத்தில்பாரப்படுத்தினர். அது பற்றிய வழக்கு வவுனியாநீதிவான்மன்றில் இடம்பெற்று வருகின்றது" என்றுவேப்பங்குளம்சிறுவர் இல்லத்தின் நிர்வாகி கூறுகிறார்.

சிறுமியின் சடலம் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணைதொடர்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4)

## இரண்டாவது...

தலைவர் பதவி வழங்கப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத்திடம் யோசனையொன்றை முன்வைத்துள்ளனர் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரச தலைவருக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அவை நடைமுறைக்கு வரவுள்ளன.

இந்நிலையில், புதிய அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அரச தலைவர் முறைமையை முழுமையாக நீக்குவதற்கும், நாடாளுமன்றத்தின் ஊடாக அரச தலைவரைத் தெரிவு செய்யும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு சில அரசியல் கட்சிகளும் ஆதரவு தெரித்துள்ளன. எனினும், அரச தலைவர் முறைமை கட்டமைப்பை முழுமையாக நீக்குவதற்கு போர்க்கொடி தூக்கியுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர், அவ்வாறு நிறைவேற்ற வேண்டுமானால் தமது தரப்பின் நிபந்தனைகள் ஏற்கப்படவேண்டும் என இடித்துரைத்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் ஊடாக அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவுசெய்யப்பட்டு, அவருக்கு மாகாண சபைகளை கட்டுப்படுத்தல் உட்பட சில சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதே அவர்களின் யோசனையாக இருக்கின்றது.

தேசிய அரசை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சியும், சுதந்திரக் கட்சியும் செய்துகொண்ட உடன்படிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது. அந்த உடன்படிக்கை நீடிப்பில் இந்த விடயமும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இது குறித்து இன்னும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், இது ஒரு யோசனையாக மட்டுமே இருக்கின்றது என்றும், இதுபோன்று மேலும் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது. (கு)

## காணாமற்...

வலியுறுத்தியுள்ள காணாமற்போனோரின் குடும்ப ஒன்றியம், போரில் காணாமற்போன படையினரைக் கண்டறிவதற்கு இதுவே வழி என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியத்தின் தலைவர் கே.ஜே. பிரிட்டோ பெர்னாந்து அரச தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

2015 செப்ரெம்பர் மாதத்தில் ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கை உடன்பட்டவாறு நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர்அம்சமாகக் காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டம் 2016 ஓகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எதிரணியினரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அந்த சட்டத்தை ஏகமனதாக அங்கீகரிப்பதற்கு அரசுக்குத் துணிவும் வலுவும் இருந்தது.

ஆனால் நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கி 9 மாதங்கள் கடந்த நிலையில் தாங்கள் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டத்துக்கு அமைவான அதிகாரங்களை ஓர் அமைச்சருக்கு ஒப்படைக்காமையால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2017 ஜூன் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தால் அந்தக் கூட்டத்தின் மீதான திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன. குறிப் பிட்டதொரு சட்டத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கிய பின்னர் திருத்தம் கொண்டு வரும்வரை சட்ட நடைமுறைப்படுத்தலைப் பிற் போடுவதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

இந்தச் சட்டதை நடைமுறைப்படுத்தத் தாங்கள் மேலும் தாமதிப்பீர்களாயின் ஏதோ ஒரு சக்தியின் அழுத்தம் காரணமாகவே இவ்வாறு தாமதமாகிறது என்று கருதவேண்டியிருக்கும்.

காணாமற்போனோர் அலுவலகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் மேலும் பிற்போடுவது ஜனவரி 08 வாக்குறுதிகளை மீறுவதாகும். நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை சட்ட விரோதமாக மீறுவதாகும். தாங்கள் கைவிடுவதாக உறுதிமொழி அளித்த நிறைவேற்று அதிகாரத்தைச் சட்டவிரோதமாக மீண்டும் பயன்படுத்துவதாகும்.

காணாமற்போனோருக்கான சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தாமதிப்பீர்களாயின் எமது முழுமையான சக்தியைப் பயன்படுத்திச் செயற்படுவோம்-என்றுள்ளது. (கு-ய)

## அரசமைப்பு...

ரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவித்தார் உயர் கலவி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல.

கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் திறன் விருத்திக்கான கட்டடத்தொகுதியும், பொறியியல் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு மாடிக் கட்டடமும் நேற்றுத் திறக்கப்பட்டன. அந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு ஏனைய கட்சிகளுடன் இணைந்து புதிய அரசமைப்பை ஒன்றை உருவாக்குவதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது. 1972 மற்றும் 1978ஆம்ஆண்டுக்குபின்னர்புதிய அரசமைப்பு இந்த நாட்டில் உருவாக்கப்படவில்லை.

பல தடவைகள் அதற்கான வரைபுகள் உருவாக்கப்பட்ட போதும் தமிழ் கட்சிகளின் பங்களிப்பு இருக்கவில்லை. பண்டாரநாயக்க ஒரு வரைபை கொண்டுவந்தபோதும் அதைத் தமிழ் கட்சிகள் நிராகரித்தன.

ஜே.ஆர்.ஜயவர்தன ஒரு வரைபை சமர்ப்பித்தபோதும் அதைத் தமிழ் கட்சிகள் நிராகரித்தன. முதன்முறையாக தமிழ் கட்சிகள் மாத்திரமல்ல அனைத்து கட்சிகளும் இணைந்து புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளன.

கட்சிகளுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை. எங்களுக்குள் பிரச்சினை இல்லை. அதிகாரப் பகிர்வுக்கு அனைவரும் இணங்கியுள்ளனர். இலங்கையில் முதன்முறையாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு உருவாகவுள்ளது. கடந்த காலத்தில் இதனையே எம்மால் செய்ய முடியாது போனது.

சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கையைப் போன்று ஆகவேண்டுமென்றே பல நாடுகள் விரும்பின. அந்தளவு முன்னேற்றமடைந்த நாடாக இலங்கை இருந்தது. ஆயினும் அதன் பின்னர் அதிகாரத்துக்காக கட்சிகள் அரசியல் செய்தன. அதுவே உண்மை.

எவரும் விரும்பாத 30 வருட கொடிய போருக்கு முகம் கொடுத்தோம். ஆயினும் யதார்த்தத்தை அனைத்து கட்சிகளும் புரிந்துகொண்டு தற்போது அரசமைப்பை உருவாக்குவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதமளவில் அரசைமைப்பு திருத்த வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எதிர்ப்பார்த்துள்ளோம். அதனோடு இணைந்ததாக நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையும் இருக்கின்றது - என்றார். (ற)

## வடக்கு...

வடக்கு மாகாண சபையின் கல்வி, விவசாய அமைச்சர்கள் பதவி விலகியதை அடுத்து அந்த இரு அமைச்சுக்களையும் முதலமைச்சர் பொறுப்பேற்றிருந்தார்.

அதன் பின்னர் முதலமைச்சரால் சர்வேஸ்வரன், அனந்தி ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இதன்போது அனந்தியின் அமைச்சில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் அமைச்சர் அனந்தியின் அமைச்சுச் செயலாளராக நியமிக்கப்பட்ட ஆர்.வரதீஸ்வரனின் பொறுப்புக்களும், வடக்கு முதலமைச்சரின் அமைச்சுச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் பொறுப்புக்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி முதலமைச்சரின் அமைச்சுச் செயலரிடமிருந்து சமூக சேவைகள், மகளிர் விவகாரம், மறுவாழ்வு, தொழில்துறை ஆகிய அமைச்சுப் பொறுப்புக்கள் ஆர்.வரதீஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆர். வரதீஸ்வரனிடம் இருந்த விவசாயம்,நீர்ப்பாசனம் ஆகியன முதலமைச்சரின் அமைச்சுச் செயலருக்கும் மாற்றப்பட்டுள்ளன. (த-101)

## இடைக்கால...

றது. வழிநடத்தல் குழுவின் கூட்டம் தொடர் அமர்வுகளாக எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் பி.ப. 2.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்படவுள்ளன.

வழிநடத்தல் குழுவின் அமர்வு கடந்த மாதம் 20ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்களுக்குத் தொடர் அமர்வுகளாக நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திய பின்னர் இந்த அமர்வுகளை நடத்தலாம் என்று முதலாம் நாள் அமர்விலேயே கூறியது. இதனால் வழிநடத்தல் குழுவின் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே கடந்த 23ஆம் திகதி சந்திப்பு நடைபெற்றிருந்தது. சந்திப்புத் தொடர்பில் இரு தரப்பும் திருப்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் எதிர்வரும் தொடர் அமர்வுடன், இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்பட்டு நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## எஞ்சிய...

முன்னதாக மயிலிட்டித்துறையில் ஒன்றுகூடியதும் மயிலிட்டி மீள்குடியேற்றக் குழு மற்றும் வலி.வடக்கு மீள்குடி யேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மயிலிட்டித்துறை மற்றும் அதனோடு இணைந்த நிலப்பரப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை, பாதுகாப்புத் தரப்பினரால் மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

மயிலிட்டி மக்கள், நலன்புரி நிலையங்களிலுள்ள மயிலிட்டி மக்கள் அனைவரையும், காலை 9 மணிக்கு முன்னதாக மயிலிட்டித்துறையில் ஒன்றுகூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மிகுதியான நிலமீட்புக்கு ஆதரவு தெரிவித்து ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், அன்றைய தினம் காலை 7 மணிக்கு, பருத்தித்துறையிலுள்ள மயிலிட்டி கடற்றொழில் சங்கத்திலிருந்து இலவச பேருந்துச் சேவை மயிலிட்டித்துறைக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## கூட்டணிக்கு...

நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கும் இடையில் முதலமைச்சர் இல்லத்தில் நேற்றிரவு திடீர்ச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ள சூழலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'சந்திப்பு நட்புரீதியானது. நீங்கள் நினைப்பது போன்று அரசியல் பூச்சு இதற்குப் பூசவேண்டாம்' என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பத்திரிகையாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்ட தருணத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தலைமை தாங்க வருமாறு, வீ.ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்திருந்தார். கடந்த சில தினங்களுக்கு முன்னர், முதலமைச்சருக்கு ஆதரவான அணியைச் சேர்ந்த மூன்று மாகாண சபை உறுப்பினர்கள், வீ.ஆனந்தசங்கரியை நள்ளிரவில் சென்று சந்தித்திருந்தனர்.

இந்தப் பின்னணியில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கும் இடையே நேற்றிரவு 6.30 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு 7.15 மணிவரை நீடித்தது.

சந்திப்பு முடிவடைந்த பின்னர் வீ.ஆனந்தசங்கரி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "முதலமைச்சரை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். அவரைப் பற்றி விமர்சிப்பதற்கு இங்குள்ள சிலருக்குத் தகுதி இருப்பதாக நான் நினைக்கவில்லை. பத்திரிகைகளில் முதலமைச்சரைப் பற்றி விமர்சிக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன தகுதி இருக்கின்றது. முதலமைச்சரின் மன ஆறுதலுக்காக அவரை நான் சந்திக்க வந்தேன். நாங்கள் அரசியல் பேசவில்லை" என்றார்.

இதன்போது பத்திரிகையாளர்கள், புதிய கட்சி ஆரம்பிப்பது தொடர்பில் தகவல்கள் வெளிவருகின்றனவே என்று கேட்டபோது, "முதலமைச் சரிடம், நீங்கள் தலைமை தாங்க வருவதாக இருந்தால் எனது கட்சித் தலைமையை வழங்கத் தயார் என்று ஏற்கனவே கூறிவிட்டேன். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் தகுதி முதலமைச்சருக்கு மாத்திரம்தான் உண்டு. எனது கட்சி தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற மூத்த பெரிய தலைவர்களால் தொடங்கப்பட்டது. இப்போது அதைப் பற்றிப் பேசவில்லை" என்று த. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

இதற்கு முதலமைச்சர் என்ன பதில் கூறினார் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "அவர் ஓம் என்றும் சொல்லவில்லை. இல்லை என்றும் சொல்லவில்லை. மக்களின் விருப்பம் அது தான் என்பதை அவரிடம் கூறினேன். புதிய கட்சி தொடங்கும் நோக்கம் இல்லை" என்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறுகையில், "ஆனந்தசங்கரி எனது 55 வருட கால நண்பர். என்னைப் பற்றி சிலர், பத்திரிகைகளில் தவறாகக் கூறியதும் அவருக்கு இந்த வயதிலும் வேகம் வந்துவிட்டது. தனது நண்பரைப் பற்றி இப்படிக் கூறிவிட்டார்களே என்று என்னை ஆறுதல்படுத்தத்தான் வந்து சந்தித்தார். பல விடயங்கள் பற்றியும் பழையவைகள் பற்றிப் பேசினோம். நீங்கள் நினைப்பது போன்று அரசியல் பூச்சுப் பூச வேண்டாம்" என்றார்.

(த-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு விழிநீர்க்காணிக்கை

மலர்வு 22.05.1950 — உதிர்வு 16.06.2013



அமரர் **கனகசபை இராசநாயகம்**

(சின்னண்ணை)

"சின்னவன்" என்றுனைச் செல்லமாக அழைக்கையில்
புன்னகை பூத்திடவே பொறுப்புகள் சுமப்பவனே!
என்னபணி ஆனாலும் எங்கும் முன்னிற்பவனே!
இன்று வரை தேடுகின்றோம் இங்கும் நீயில்லையே!
சொன்னபடி நடப்பவனே சோலையில் மலராகி
இன்றுடன் நான்காண்டு எப்படிக் கழிந்ததுவோ!

சசிலாலயம், மனோகரா அல்வாய். — குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை துரைவீரசிங்கம்



யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை துரைவீரசிங்கம் கடந்த (27.06.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நீலாவதியின் அன்புக் கணவரும் சுபாசினி (டென்மார்க்), மதிவதனி(கனடா), மகாலா (கனடா), கஸ்தூரன் (கனடா), நிலக்ஷன்(யாழ்.இந்துக்கல்லூரி A\L2015) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், பாலசிங்கம், சுந்தரலிங்கம், சரஸ்வதி, நல்லம்மா மற்றும் கனகபூரணியம்மா, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுரேந்திரன் (டென்மார்க்), கதீஸ்வரன் (கனடா), ரமேஷ் (கனடா), சிந்து (கனடா) ஆகியோரின் மாமனாரும் நவீன், லக்ஷா, சாருஷன், பானுஜன், ஜானுஜன், சிவானுஜா, ஆகாஷ், அபிநயா, கபிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (02.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 5199

### இளையவி வடிவேல்

(அருந்துறை)



தோற்றம் 21.07.1937 — மறைவு 30.06.2017

அல்வாய் தெற்கு, கொக்கட்டியாவளவு, "பழமுதிர்ச்சோலை" யைச் சேர்ந்த இளையவி வடிவேல் (அருந்துறை) நேற்று (30.06.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி தெய்வானை தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வனிதாமணியின் அன்புக் கணவரும் நித்தியானந்தன், ஜீவானந்தன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), ஆனந்தசெல்வி, பூர்ணானந்தன் (இ.போ.ச.பருத்தித்துறைச் சாலை), ஆனந்தசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாவதி நித்தியானந்தன், நளினி ஜீவானந்தன், சின்னத்தம்பி ராஜா (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு), வாசுகி பூர்ணானந்தன், விஜயநாதன் ஜெகதீசன் (ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை முருகேசு, செல்லம்மா மார்க்கண்டு, இராசம்மா பொன்னுத்துரை, அழகம்மா மார்க்கண்டு, பாக்கியம் அம்பிகைபாகன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2017) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று புகழுடல் தகனக்கிரியைக்காக அல்வாய், பங்குவேம்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பழமுதிர்சோலை"
கொக்கட்டியாவளவு,
அல்வாய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### யாழ்ப்பாண...

பேராசிரியர் விக்னேஸ்வரனின் அழைப்பின் பேரில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, இலங்கைக்கான இந்திய தூதுவர் தரஞ்ஜித் சிங் சந்து ஆகியோர் இந்தக் கட்டடங்களைத் திறந்து வைத்தனர்.

2014ஆம் ஆண்டு இலங்கை இந்திய அரசுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் கீழ் இந்திய அரசின் நிதியுதவியுடன் இந்தக் கட்டடங்கள் சுமார் 550 மில்லியன் ரூபா செலவில் அமக்கப்பட்டன.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் வகையில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. (ற-10)

### கொல்லப்பட்டார்...

உறுதிப்படுத்தியுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரியாவின் ரக்கா நகரில் கடந்த மாதம் 28ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்களின் அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் அந்த அமைப்பைத் தோற்றுவித்தவரான அபுபக்கர் அல் பக்தாதியும் கலந்துகொண்டார். அவர்கள் பதுங்கியிருந்த இடத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அல் பக்தாதி கொல்லப்பட்டார். அவருடன் 30 முக்கிய தலைவர்களும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த 300 ஆயுததாரிகளும் கொல்லப்பட்டனர் என்று ஏற்கனவே ரஷ்யா தெரிவித்திருந்தது. எனினும் அமெரிக்கா அதை மறுத்திருந்த நிலையில் ஈரானின் மூத்த தலைவர் அயத்துல்லா. அல் பக்தாதி கொல்லப்பட்டார் என்று நேற்றுத் தெரிவித்தார். (ம)

### பழைய...

கின்றது. வடக்கு மாகாண சபையின் ஆசனங்களின் ஒழுங்கு, கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வின்போது மாற்றப்பட்டிருந்தது. அமைச்சர்களாகப் பதவி வகித்த த.குரு குல்ராசா மற்றும் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகியமை யால், அவர்கள் இருவருக்கும் அமைச்சர்களைத் தொடர்ந்து ஆசன ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்போது பதவி விலகிய இரு அமைச்சர்களின் வெற்றிடத்துக்கும் புதிய அமைச்சர்கள் பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இதனால்ஆசனஒழுங்கில்மாற்றம்ஏற்படுத்தப்படவுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதலாவது ஆசனத்திலும் அடுத்து சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும், தொடர்ந்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், அமைச்சர் க.சர்வேஸ்ரன், அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனுக்கு ஆசனம் ஒதுக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை த.குருகுலராசா மற்றும் பொ.ஐங்கரநேசன் இருவருக்குமான ஆசன ஒழுங்கு தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை என்று அறியமுடிகின்றது. (த-5)

### 760 சுகாதார...

மானிக்க முடியும். அந்தக் கூட்டம் நடைபெறாததனால் முடிவு எட்டப்படவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

"கொழும்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றதாகவும், வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் சாதகமான பதில் கிடைத்திருக்கும் என்ற எதிர்பார்ப்பில் இங்கு வந்திருந்தோம். ஆனால், நேற்று அவ்வாறானதொரு கலந்துரையாடல் நடைபெறவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கூறினார்" என்று சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் சுகாதார அமைச்சின் வவுனியாவிலுள்ள இணைப்பு அலுவலகத்துக்கு நேற்றுச் சென்றிருந்தனர். அதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார் என்று சுகாதார தொண்டர்கள் மேலும் தெரிவித்தனர்.

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த மே மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் முன்பாகக் கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"தொண்டர்கள் தரம் பத்தில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே நியமனத்துக்குள் உள்வாங்க முடியும். அதற்கான அரசின் குறைந்த கல்வித் தராதரம் இதுவே. வடக்கிலுள்ள 910 சுகாதாரத் தொண்டர்களில் 150 பேர் மாத்திரமே அரச நியமனம் பெறுவதற்குரிய தகுதியைக் கொண்டுள்ளனர். இது தொடர்பில் அரச தலைவர் செயலகத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் சிறப்பு அமைச்சரவையின் அங்கீகாரத்தினூடாக அல்லது அரச தலைவரின் நேரடி கட்டளையினூடாக அனைத்து தொண்டர்களையும் உள்வாங்குவதற்கு உத்தேசித்துள்ள நிலையில், கூட்டம் நடைபெறாமையினால் முடிவுகள் எட்டப்படவில்லை" என்று அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்தார். (4)

### வடக்கு...

மன்ற உறுப்பினர்களுக்கும் கடற்றொழிலாளர் இணையத்துக்கும் இடையிலான சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால், கடந்த ஆண்டு மீன்பிடித் திருத்தச் சட்டவரைவு, எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக, வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும், வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தினர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். மேற்படி சட்டவரைவு நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் எடுத்துரைக்கவுள்ளதாக அறிய முடிகின்றது. (த-5)

**உங்கள் இருப்பிடம் தேடிய விற்பனை**

ஆய்வுகூட உபகரணங்கள், இசைக்கருவிகள், மருத்துவ நூல்கள் மற்றும் ஏனைய புத்தகங்கள் என்பவற்றை குறைந்த விலைக்கழிவுகளுடன் பெற்றுக்கொள்ள உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு - 076 889 3807

ராசி அதிர்ஷ்டம் — திகதி 30.06.2017 — வெற்றி வாரம் 2152 — வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 08 17 56 60 — ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 26,24,936/=

கோடீபதி — சீட்டிழுப்பு வாரம்: 156 — அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 92,242,212/- — சீட்டிழுப்பு திகதி: 30.06.2017
M 53 64 65 66

சீட்டிழுப்பு வாரம் 578 — சீட்டிழுப்பு திகதி: 30.06.2017
வெற்றி இலக்கங்கள் 17 18 27 33 A — ரூ. 29,793,539/-

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நாகலிங்கம்

(ஓய்வு நிலை இ.போ.ச.சாரதி கிளிநொச்சி)

முதலாம் கட்டை, கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (30.06.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் கட்டை,
கல்வயல் சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

**கடைகள் வாடகைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. அலுவலகத்திற்கும் ஏற்றது. தொடர்புகளுக்கு:
077 765 1826

**வீடு,காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் 2 1/2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
077 255 0807

**WORK SHOP**

சகலவிதமான வெல்டிங் வேலைகள் நவீன டிசைனில் செய்து கொடுக்கப்படும். (ஜன்னல், கேற், கிறில், செற்) Company களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு - 077 4910 175
077 4687 923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச சாட்சியாக...

விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் முன்னிலையில் இடம்பெற்று வருகின்றன.

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தின் மூன்றாம் நாள் அமர்வு நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுநர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், ஷகிப் ஸ்மாயில் , லக்சி டீ சில்வா மற்றும் மாலினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர்.

1ஆம், 2ஆம் , 3ஆம் மற்றும் 6ஆம் எதிரிகள் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி சரங்க பாலசிங்க மற்றும் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன ஆகியோரும் 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ஆம், 7ஆம் , மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர். அத்துடன் தீர்ப்பாயத்தால் அரச செலவில் 9 எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலை ஆகியிருந்தார்.

எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் தீர்ப்பாயத்தில் முற்படுத்தப்பட்டனர்.

தீர்ப்பாயத்தால் வழக்கின் 6ஆவது சாட்சி முஹமட் இப்ரான் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். அவரிடம் பிரதி மன்றாடியார் அதிபதி விசாரணையை முன்னெடுத்தார்.

நான் கணணி மென்பொருள் பொறியியல் துறை சார்ந்தவன். 2014ஆம் ஆண்டு காலப் பகுதியில் எனது வங்கி அட்டையைப் பிறிதொருவருக்கு வழங்கி இருந்தேன். அவர் அதனை வைத்து பண மோசடியில் ஈடுபட்டு இருந்தார். அந்த வங்கி அட்டைக்கு உரியவன் நான் என்பதனால் எனக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதிமன்றம் , புத்தளம் நீதிமன்றம் மற்றும் வவுனியா நீதிமன்றில் 11 வழக்குகள் உள்ளன. அவையனைத்தும் நிதி மோசடி வழக்குகள். மொத்தமாக 13 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்தேன் என்பதுதான் **என் மீதான வழக்குகள்.**

**6ஆவது சாட்சியிடம்**
**விசாரணை**

நான் கணணித் துறையில் ஆர்வம் இருந்தததால் அது சார்ந்து கற்று இருந்தேன். மென்பொருள்களை பயன்படுத்தியும் , நேரடியாகவும் பிறிதொருவரின் கணணியை என்னால் ஹக் பண்ண முடியும். அதில் எனக்கு அனுபவம் நிறைய உண்டு.

அதேபோன்று அலைபேசியில் அழிக்கப்பட்ட தரவுகளை என்னால் மீள எடுக்க முடியும். அதற்கான மென்பொருள் ஒன்றையும் நான் தயாரித்து உள்ளேன்.

வவுனியா நீதிமன்றில் நடைபெறும் வழக்கு தவணைக்காக என்னை வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைத்து இருந்தார்கள். அப்போதுதான் இந்த வழக்கின் எதிரிகளைச் சந்திக்க நேர்ந்தது. அதாவது நான்தான் முதலில் சிறையில் இருந்தேன். பின்புதான் இவர்களை வவுனியா சிறைச்சாலைக்குக் கொண்டு வந்தார்கள்.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த காலப் பகுதியில் , ஒரு நாள் மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவர்கள் சிறைச்சாலைக்கு வந்து இருந்தார்கள். மருத்துவ பரிசோதனை நடைபெற்ற இடம் சிறைச்சாலை அத்தியட்சகரின் அறைக்கு அருகாமையில் இருந்த அறையில். அப்போது அத[illegible] முன் பகுதியில் வித்தியா படுகொலை வழக்கின் சந்தேகநபர்களிடம் குற்றப்புலனாய்வுத் துறையினர் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டு இருந்தார்கள்.

சிறைக்கூடத்தில் இருந்து மூன்று மூன்று கைதிகளாத்தான் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து வருவார்கள். அப்போது நான் முதலாவதாக மருத்துவ பரிசோதனையை முடித்துக்கொண்டு வெளியில் வந்து. என்னுடன் வந்த மற்றைய இருவரின் மருத்துவ பரிசோதனை முடியும் வரையில் காத்திருந்தேன்.

அந்தவேளை வித்தியாவின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி நிஷாந்த சில்வாவும் அவரது அலுவலகளும் வாக்குமூலம் பதிவு செய்து கொண்டு இருந்தனர். குற்றப் புலானய்வு அதிகாரி நிஷாந்த சில்வா அந்த இடத்தில் நின்று இருந்தார்.

**சுவிஸ் குமார்**
**அறிமுகமானார்**

அவர்தான் என்னுடைய வழக்குத் தொடர்பிலும் விசாரணை செய்தவர். அதனால் நான் ஒரு கணணி மென்பொருள் பொறியியலாளன் என்பது அவருக்குத் தெரியும். " அலைபேசியில் அளிக்கப்பட்ட தரவுகளை மீள எடுக்க முடியுமா ? " என என்னிடம் அவர் கேட்டார். அதற்கு நான் ஆம் என்றேன். அதனை அங்கே வாக்குமூலம் கொடுக்க இருந்த சுவிஸ் குமார் கேட்டு இருக்க வேண்டும்.

அதன் பின்னர் சுவிஸ் குமார் என்னைச் சந்தித்து கேட்டார். "அலைபேசியில் அழிக்கப்பட்ட தரவுகளை மீள எடுக்க முடியுமா?" எனறு. நான் ஆம் என்றேன். அப்போது திரும்ப கேட்டார் "மென்பொருளை பயன்படுத்தி அழிக்கப்பட்ட தரவுகளையும் எடுக்க முடியுமா ?" என்று. அதற்கு நான் ஆம் என்னால் முடியும் என்றேன்.

**சுவிஸ் குமாரில்**
**சந்தேகம் வந்தது**

சாதரணமாக அலைபேசி பாவிக்கின்றவர்கள், அதில் உள்ள தரவுகளை அழிப்பது என்றால் சாதரணமாகத்தான் அழிப்பார்கள். மென்பொருள் ஊடாக அழிப்பது என்றால் அதில் எதோ பிரச்சனை இருப்பதாகப் புரிந்து கொண்டேன். ஏனெனில் நான் இப்பொழுது தண்டனை அனுபவித்துக்கொண்டிருப்பதே இன்னொருவர் செய்த தவறால்தான். ஆகவே என் கண்ணுக்கு முன்பு இன்னொரு பிழையான விடயம் நடப்பதை விரும்பவில்லை.

அந்த நேரம் சுவிஸ்குமார் ஒரு அலைபேசியைத் தந்து. இதில் அழிந்துள்ளவற்றை எடுக்க முடியுமா? என்று கேட்டார். நான் ஆம் என்றேன். மறுநாள் கொழும்பு கோட்டை நீதிவான் மன்றில் உள்ள வழக்குக்காக என்னை மகசீன் சிறைக்கு மாற்றிவிட்டார்கள். நான் வவுனியா நீதிவான் மன்றால் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தமையால் 14 நாட்களுக்கு ஒரு முறை என்னை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த வேண்டும். ஆனால் அந்தத் தவணை எனக்கு கொழும்பில் வழக்கு இருந்தமையால் வவுனியாவுக்கு அழைத்து வரவில்லை. அடுத்த தவணைக்கே என்னை அழைத்து வந்தார்கள். அப்போ என்னை சந்தித்த சுவிஸ் குமார் "ஏன் போன தவணைக்கு அழைத்து வரவில்லை ?" எனக் கேட்டார். அதற்கு நான் சொன்னேன், "கொழும்பில் பிறிதொரு வழக்கு இருந்தமையால் அழைத்து வரவில்லை" என்று . அப்போது சுவிஸ் குமார் கேட்டார் , "வழக்குக்காகத்தான் வரவில்லையா? அல்லது குற்ற தடுப்பு புலனாய்வு துறையினரை சந்திக்க போனியா ? என்று . அப்போது நான் சொன்னேன் "அவர்களை சந்தித்துவிட்டுத்தான் வந்தேன்" என்று. அவர்கள் உங்கள் அலைபேசி பற்றி என்னுடன் கதைத்தார்கள் என அவரிடம் சும்மா சொன்னேன், "உன்னைத் தனியாகச் சந்திக்க வேண்டும், நான் சந்திப்பது ஏனைய 8 பேருக்கும் தெரியக் கூடாது" என்று கூறிய சுவிஸ் குமார் என்னை தனியாக மறுநாள் சந்தித்தார்.

**பேரம் பேசினார்**
**சுவிஸ் குமார்**

மறுநாள் சுவிஸ் குமாரை நான் தனியாக சந்தித்த போது, அவர் என்னிடம் கேட்டார். "பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவின் பலவீனம் என்ன?" எனறு. அதற்கு நான் அது தெரியாது உங்களுக்கு அவரிடம் என்ன வேண்டும்? என்று கேட்டேன். "வித்தியா வழக்கில் நாங்கள் மூன்று பேர் சகோதரர்கள். நாம் அரச சாட்சியாக மாற வேண்டும். அதற்கு பரிசோதகர் நிஷாந்த சில்வாவுடன் கதைத்து ஏற்பாடு செய்து தரவேண்டும்" என்று சுவிஸ் குமார் கேட்டார்.

அவ்வாறு செய்தால் பரிசோ[illegible]நிஷாந்த சில்வாவுக்கு என்ன கொ[illegible] என்று நான் சுவிஸ் குமாரிடம் [illegible] ரூபா பணம் [illegible] தெரிவித்தார். [illegible] இருந்தவேளை சுவிஸ் [illegible] திக்க சிறைச்சாலைக்கு வந்து இருக்கின்றார்கள் என தெரிவித்து அவர் சென்று விட்டார்.

மீண்டும் என்னை திரும்ப சந்தித்த சுவிஸ் குமார், "மூன்று பேரை அரச சாட்சியாக மாற்ற முடியாது. ஒருவரைத்தான் மாற்ற முடியும் என தெரிவித்து தன்னை மட்டும் பரிசோதகர் நிஷாந்த சில்வாவுடன் கதைத்து அரச சாட்சியாக மாற்றிவிடுங்கள்" என்று என்னிடம் கேட்டார். இந்தத் தகவல் ஏனைய 8 பேருக்கும் தெரிய கூடாது என்றும் அவர் சொன்னார். அதன் பின்னர் மறுநாள் என்னை மகசீன் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்று விட்டனர். பின்னர் சிறிது காலத்தில் நான் மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு வந்த போது, மீண்டும் சுவிஸ் குமாரை சந்தித்தேன். அப்போது அவருக்கு சொன்னேன், "பரிசோதகர் நிஷாந்த சில்வாவுடன் கதைப்பது என்றால் எனக்கு காரணம் தெரிய வேண்டும்" என்று.

**சுவிஸ் மாபியாக் கும்பலுடன்**
**சுவிஸ் குமாருக்குத் தொடர்பு**

அப்போது சுவிஸ் குமார் சொன்னார், "நான் சுவிஸில் இருந்தேன். அங்குள்ள மாபியாக் கும்பல் ஒன்று தெற்காசிய நாட்டு இளம் பெண் ஒருவரை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்வதை வீடியோ எடுத்து தருமாறு என்னுடன் உடன்படிக்கை செய்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து நான் இலங்கையில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டு அது பற்றி கூறினேன். 20 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளை ஒருவர் தேவை என அவரிடம் கேட்டேன். அவர் ஒரு பெண்ணின் புகைப்படத்தை எனக்கு அனுப்பி வைத்தார். அந்த பெண் சரியானவர் என்றேன்" என்று சுவிஸ் குமார் என்னிடம் கூறினார். நான் யாருடன் இலங்கையில் உள்ள நபருடன் தொடர்பு கொண்டீர் என கேட்டதற்கு, இங்கு எதிரி கூண்டில் ஆறாவது நபராக உள்ளவரை (சிவதேவன் துஷாந்த் ) சுவிஸ் குமார் எனக்கு காட்டி இருந்தார்.

"இதில் ஆறாவதாக உள்ள நபருடன் சேர்ந்து இலங்கையில் உள்ள ஏனையவர்கள் ஏற்பாடு செய்தனர். அதற்காக அந்த பெண்ணின் தாயாருடன் பெரிதொரு வழக்கில் தொடர்புடைய ஏனைய மூன்று பேரையும் தம்முடன் கூட்டுச் சேர்ந்தனர்.

வித்தியா கொலை செய்யப்பட்ட போது நான் கொழும்பில் இருந்தேன். அங்குதான் தங்கியிருந்தேன் என்பதற்கு சி.சி.ரி. கமெராவில் பதியப்பட்டிருந்தது. மற்றவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து நான் கேட்டது போன்றே காணொலிப் பதிவை எடுத்தார்கள்" என்று சுவிஸ் குமார் என்னிடம் கூறினார்

பின்னர் மீண்டும் நான் மகசீன் சிறைக்கு கொண்டு செல்லபட்டேன். அங்கே பரிசோதகர் நிஷாந்த சில்வாவிடம் சுவிஸ் குமார் சொன்ன விடயங்களைச் சொன்னேன். அவர் அங்கு வைத்து எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

**சுவிஸ் குமார் மிரட்டினார்**

அது எப்படியோ சுவிஸ் குமாருக்கு தெரிந்து விட்டது. நான் மீண்டும் வவுனியா சிறைக்கு வந்த போது, "குற்றத் தடுப்பு புலனாய்வு துறையினருக்கு சொன்ன விடயத்தை நீதிமன்றில் சொல்ல கூடாது. சொன்னால் ஏனைய வழக்குகளுக்குப் போய் வரும் வேளைகளில் உனக்கு உயிர் ஆபத்து ஏற்படும் என என்னை மிரட்டினர். அத்துடன் உன் மனைவிக்கும் வித்தியாவுக்கு நடந்து போன்றே நடக்கும்" என்று சுவிஸ் குமார் என்னை மிரட்டினார்.

இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பில் மகசீன் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் , புத்தளம் நீதிவான் மன்றிலும் தெரியப்படுத்தினேன். புத்தளம் நீதிவான் எனக்கு பாதுகாப்பு கொடுக்கும் படி கட்டளையிட்டார். எனினும் எனக்கு அவ்வாறு பாதுகாப்புத் தரவில்லை.

**கூகிள் ரைவ் மூலமே**
**காணொலிப் பதிவு**
**அனுப்பப்பட்டதாம்**

சுவிஸ் குமாருக்கு வித்தியாவை வன்புணர்வு செய்வதை எடுத்த காணொலிப் பதிவை அலைபேசி ஊடாக அனுப்பியுள்ளார்கள். அவர் அதனை கூகிள் டிரைவ் மூலம் வெளி நாட்டுக்கு அனுப்பியுள்ளார்.

**அரசியல்வாதியின்**
**தம்பியின் உதவியுடன்**
**கொழும்புக்குத் தப்பினேன்**

"நான் யாழ்ப்பணத்தில் இருந்து அரசியல்வா[illegible] ஒருவரின் உதவியுடன்தான் [illegible] கொழும்புக்கு வந்தேன். அரசியல்வாதியின் தம்பியே வாகன ஒழுங்குகளை செய்திருந்தார். அதன் ஊடகப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரின் துணையுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு தப்பி வந்து வெள்ளவத்தையில் மற்றுமொரு சுவிஸ் நாட்டை சேர்ந்த ஒருவருடன் தங்கி இருந்த போதே என்னை வெள்ளவத்தைப் பொலிஸார் கைது செய்தனர்" என்று சுவிஸ் குமார் என்னிடம் தெரிவித்தார்.

**ஒருவருக்கு வழக்கில்**
**சம்பந்தம் இல்லை**

ஒருநாள் இந்த வழக்கில் உள்ள அண்ணன் தம்பிகள் மூவரும் இந்த வழக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை போல உள்ளதே? என சுவிஸ் குமாரிடம் நான் கேட்டேன். அதற்கு அவர், "ஆம் அதில் இருவரே சம்பந்தப்பட்டவர்கள். மற்றைய ஒருவருக்கு இந்த வழக்கில் சம்பந்தம் இல்லை" என்று சொன்னார். ஆனால் அது யார்? என்று சொல்லவில்லை என தனது சாட்சியத்தை பதிவு செய்தார்.

அதனை தொடர்ந்து எதிரி தரப்பு சட்டத்தரணியான மகிந்த ஜெயவர்த்தன குறுக்கு விசாரணையின் போது ,

சாட்சியத்திடம் இந்த வழக்கின் எதிரி[illegible] சிறைச்சாலையில் , சித்திரவதைக்கு உட்ப[illegible] தியதை நீர் கண்டீரா? எனக் கேட்டார். அ[illegible] தீர்ப்பாயம் எதிரிகள் தம்மை சித்திர[illegible] செய்தனர் என எங்கும் முறைப்பாடு செ[illegible]வில்லை. எனவே அந்தக் கேள்வியை நி[illegible]ரிப்பதாக அறிவித்தது.

அதனை தொடர்ந்து , சாட்சியத்திடம் " உ[illegible] நிதி தேவைப்பட்டு உள்ளது. அதன[illegible] பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா[illegible] தெரியும் என எதிரிகளுக்கு கூறி, அவர்கள[illegible] மிரட்டி, அவர்களிடம் இருந்து பணம் பறிக்க முற்பட்டீர் என கூறுகிறேன்" என எதிரி தரப்பு சட்டத்தரணி கூறினார். அதற்கு சாட்சி அவ்வாறு இல்லை எனப் பதிலளித்தார்.

அதனை தொடர்ந்து எதிரி தரப்பு சட்டத்தரணி சி. கேதீஸ்வரன் , "இந்த எதிரிகளுடன் பணம் கேட்டு முரண்பட்டுள்ளீர். அது தொடர்பில் நீதிமன்றின் கவனத்துக்கு எதிரிகள் கொண்டு வந்துவிடுவார்களோ எனும் பயத்தின் காரணமாக இவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கின்றீர்?" என்று சாட்சியத்திடம் கேள்வியெழுப்பினார். அதற்கு சாட்சி அவ்வாறு இல்லை எனப் பதிலளித்தார். அதையடுத்து 6ஆவது சாட்சியத்தின் சாட்சி பதிவு முடிவுறுத்தப்பட்டது.

**திங்கள் வரை வழக்கு ஒத்திவைப்பு**

அதனை தொடர்ந்து வழக்கு விசாரணைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஒத்திவைத்த தீர்ப்பாயம் அதுவரையில் எதிரிகளை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (வ-12-37)

## தமிழர்...

செயலணியின் பொதுச் செயலாளரும் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளருமான பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசு சமகாலத்தில் முன்னெடுத்துவரும் விடயங்கள் மற்றும் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெடுப்புகள் தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான விடயங்கள் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அரசு அரசமைப்புபணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. என்றாலும், காணாமற்போனோர் மறுசீரமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை சிவில் அமைப்புகள் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்த வண்ணம்தான் உள்ளன. இதே வேளை, புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படும் என்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். அ[illegible] பகிர்வு தொடர்பில் சிவில் அமைப்புகள் உறுதியான நிலை[illegible] உள்ளன. அ[illegible] பொது[illegible] இல்லாத அ[illegible] றதாக அமை[illegible] யா என்ற [illegible] களும், சி[illegible] ரக்கூடிய வ[illegible] பகிர் பெற வேண்டு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

**அன்ரனிஸ் வி.க.**
**கால்பந்தாட்டம்**

இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட அமரர் யோன் கில்லறி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயாறு சக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.கழக**
**கால்பந்தாட்டத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விள்ளயாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கூடைப்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று ஆரம்ப மாகிறது. காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 8மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றிவோக் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்தத் தொடரில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் பட்டபிளை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவன் அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் சிவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதவுள்ளது. (ம-23-108)



# யாழ்ப்பாணம் இந்து கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத்திடலில் பி.ப. 3மணிக்கு இடம்பெற்ற 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 46 புள்ளிகளைப் பெற்றிருந்தமையால் மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டது. முடிவில் 52:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி. (ம-23)

## முத்துத்தம்பி ம.வித்தி வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குமித்தேயில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சாந்தினி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சாந்தினி தங்கப் பதக்கத்தையும், ஜே.யசோதா வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கே.பாணுசா, முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.சாணுகா ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



## சோமஸ்கந்தா அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி மோதியது. இதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## சோமஸ்கந்தா சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி சம்பியனானது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி மோதியது.

முதலாவது செற்றை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது. இரண்டாவது செற்றில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலிரு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தமையால் மூன்றாவது செற்றைக் கைப்பற்றுபவரே வெற்றியாளர் என்ற நிலை இருந்தது. அந்த செற்றை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது சோமஸ்கந்தா. மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## தாச்சித் தொடர் இன்று ஆரம்பம்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தத் திட்டமிட்ட ஆண்களுக்கனா தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இரவு 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி குமாரநகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 17 வயது பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது.

முதலாவது செற்றில் கோப்பாய் மகா வித்தியாலய அணி 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. சரி[illegible] இருந்து மீண்டு இரண்டாவது, மூன்றாவது செற்களில் ஆதிக்கம் செலுத்திய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:17, 26:24 என்ற புள்ளிகள் அடிப்[illegible] வெற்றிபெற்று சம்பியன் [illegible]ணத்தைச்சுவீகரித்த[illegible] [illegible]டத்தை புத்தூர் சோ[illegible] கல்லூரி அணி பெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயிடம் இலங்கை சரண்!





சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் சொந்த மண்ணில் படுதோல்வியடைந்து மண் கௌவியது இலங்கை அணி.

சிம்பாப்வே அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் காலியில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது இலங்கை. ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் குணரத்ன. பத்தே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டிக்வெல்ல. குணதிலக, குசல் மெண்டிஸ் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வழங்கினர். இருவரும் அரைச்சதம் கடக்க இணைப்பாட்டமும் 100 ஓட்டங்களைத் தொட்டது. அணி 133 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குணதிலக. அடித்தாடிக் கொண்டிருந்த குசல் மெண்டிஸை 86 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் கிரீமர். மத்தியூஸ் 30 பந்துகளில் 43 ஓட்டங்களைக் குவித்தார். தரங்க ஆட்டமிழக்காமல் பெற்ற 79 ஓட்டங்களுடன் 5 இலக்குகளை இழந்து 316 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை அணி.

பந்துவீச்சில் சட்டரி 2 இலக்குகளையும், வில்லியம்ஸ், கிரீமர், இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு ஆரம்ப வீரர் மசகட்சா சிறந்த பங்களிப்பை வழங்கவில்லை. சிம்பாப்வேயின் நம்பிக்கையான எர்வினும் ஏமாற்றினார். 46 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்து தவித்தது சிம்பாப்வே. மிரி ஓர் முனையில் நிலைத்து நிற்க மறுமுனையில் வில்லியம்ஸ் சிறந்த பங்களிப்பை வழங்கினார். இணைப்பாட்டம் நிலைபெற்றது. சொந்த மண்ணில் இலங்கைக்கு சாவு மணி அடிப்பதற்கு இருவரும் வலுவாகத் தயாரானார்கள். அணி 200 ஓட்டங்களைக் கடந்த பின்னரும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. சதம் கடந்தார் மிரி. அவரை 112 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் குணரட்ன. வில்லியம்ஸூம் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வில்லியம்ஸ் ஆட்டமிழந்தபோது சிம்பாப்வேயின் வெற்றிக்கு கூடுதலாக 96 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. அரைச்சதம் கடந்தார் ரசா. வோலரும் சிறப்பான ஆட்டம். முடிவில் 14 பந்துகள்

மீதமிருக்க இலங்கையை அதன் சொந்த மண்ணில் வைத்து வேட்டையாடியது சிம்பாப்வே.

### தவறவிடப்பட்ட பிடியெடுப்புக்கள்

இலங்கை அணியின் தோல்விக்கு ஏகப்பட்ட காரணங்களைச் சொல்லிக் கொள்ளலாம். விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி தெரிவித்ததைப் போன்று அளவுக்கதிக உடற்பருமன், உடற்பயிற்சியும் உடல்தகுதியும் இல்லாமை என்பவையும் அவற்றில் உள்ளடங்கினாலும், நேற்றைய ஆட்டத்தில் ஏகப்பட்ட பிடியெடுப்பு வாய்ப்புக்களை இலங்கை அணி தவறவிட்டது. நான்கு பிடியெடுப்பு வாய்ப்புக்கள் இலகுவாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியன. மலிங்க மட்டும் இரு வாய்ப்புக்களைத் தவறவிட்டார். (ம)

# நேற்றைய ஆட்டத்தில் தயாசிறிக்கு எதிராக பதாகைகள்

இலங்கை - சிம்பாப்வே அணிகள் மோதிய நேற்றைய ஆட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிரான வாசகங்கள் எழுதிய பதாகைகளை ரசிகர்கள் சிலர் ஏந்தியிருந்தனர். அவர்கள் மைதானத்தில் இருந்து பொலிஸாரால் அப்புறப்படுத்தப்பட்டனர்.

தயாசிறியை குரங்குக்கு ஒப்பிட்டு கருத்துத் தெரிவித்தமைக்காக மலிங்கவுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மட்டுமல்லாது இலங்கை கிரிக்கெட் வீரர்களின் உடல்தகுதி தொடர்பிலும் தயாசிறி கடுமையாக விமர்சித்துள்ளார். வீரர்கள் தமது உடலில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைப்பதற்கு அவர்களுக்கு மூன்று மாதகால கெடு விதித்துள்ளார். மட்டுமல்லாமல் சுசந்திகா ஜயசிங்கவுக்கும், தயாசிறிக்கும் இடையில் தற்போது கடும் வாக்குவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இவை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து ரசிகர்கள் மத்தியில் தயாசிறிக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தயாசிறிக்கு எதிரான போக்கையுடைய சில ரசிகர்கள் நேற்றைய ஆட்டத்தில், 'தயாசிறிக்கு மண்ணால் எறியவேண்டும்', 'தயாசிறியிடம் உள்ள அமைச்சுப் பதவியை 99ஆம் இலக்க (மலிங்க) வீரரிடம் ஒப்படைக்க வேண்டும்' என்ற வாசகங்கள் எழுதியிருந்த பதாகைகளை ஏந்தியிருந்தனர். அவர்கள் பொலிஸாரால் வெறியேற்றப்பட்டனர். (ம)




## மெக்சிக்கோவை வீழ்த்தி ஜேர்மனி இறுதியாட்டத்தில்

ரஷ்யாவில் நடைபெற்றுவரும் கன்பெடரேசன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மெக்சிக்கோவை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஜேர்மனி.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஜேர்மனியை எதிர்த்து மெக்சிக்கோ மோதியது.

4:1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. கோரெங்கா 2 கோல்களையும், வெர்னர், யுனஸ் தலா ஒவவொரு கோலையும் பதிவு செய்தனர். மெக்சிக்கோ தரப்பில் பாபியன் ஓர் கோலைப் பதிவுசெய்தார். (ம)





## உடுவில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான தொடரில் நேற்று நடைபெற்ற 20 வயது பெண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்து கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் உடுவில் மகளிர் கல்லூரி 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. அந்த அணி தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி முடிவில் 48:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## கிளி. இந்து வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்கள் பிரிவு குமித்தேயில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கே. பாணுசா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கே.பாணுசா தங்கப் பதக்கத்தையும், முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சயந்தா வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த இ. சரணியா, கே.[illegible] ஆகியோர் வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (ம-422)

## வருடாந்த விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஒலிம்பிக் விளையாட்டு கழகமும் பாரதி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா திருநெல்வெலி கலாசாலை வீதி ஒலிம்பிக் விளையாட்டு மைதானத்தில் நாளை 2ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத் தலைவர் செ.சிவாகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அதிகாரி க.விஜிதரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.முத்துதம்பி மகா வித்தியாலய பிரதி அதிபர் [illegible] கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இந்த வருட இறுதியில் இலங்கை பாக். பயணம்

பாகிஸ்தானில் நடக்கும் கிரிக்கெட் தொடரில்பங்கேற்பதற்காகஇலங்கை அணி இந்த ஆண்டு இறுதியில் அங்கு செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் அணி கடைசியாக கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது. அப்போது, இலங்கை வீரர்கள் பயணித்த பஸ் மீது தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது. சில வீரர்கள் காயமடைந்ததுடன், ஆறு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இலங்கை உட்பட அநேக கிரிக்கெட் அணிகள் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்வதைத் தவிர்த்து வந்தன.

இதன் நடுவில் ஆப்கானிஸ்தான் மற்றும் சிம்பாப்வே அணிகள் மட்டும்பாகிஸ்தானுக்குச்சென்றுவிளையாடியுள்ளன. இந்த நிலையில் இந்த ஆண்டு இறுதியில் இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்குச் சென்று தொடரில் பங்கேற்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

# கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 1

இன்று நடைபெறவிருந்த யாழ்ப்பாண மாவட்ட மெய்வன்மைச் சங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும் என்று யாழ்ப்பாண மாவட்ட மெய்வன்மை நடுவர் சங்கத் தலைவர் இளம்பிறையன் அறிவித்தார். (ம-422)

**பணியாளர் தேவை**

எமது தனியார் நிறுவனத்திற்கு அலுவலக பணிக்கு (பியோன்) பணியாளர் தேவை.
தொடர்புகளிற்கு :- 070 305 5001
தொடர்பு கொள்ளும் நேரம் :-
9.00am - 5.00 pm

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் மத்திய சந்தைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
**076 311 0929**

**பிற்போடப்பட்டுள்ளது**

**வேம்பாப்புலம் ஞானவைரவர் ஆலயம்**
**புத்தூர் வடக்கு, புத்தூர்.**
ஆலய கட்டட நிதிக்கான அதிஸ்டலாபசீட்டு 30.06.2017 வெள்ளிக்கிழமை அதிஸ்டம் பார்ப்பதாக இருந்தோம். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் 14.01.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்போடப்பட்டுள்ளது. என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றார்கள்.
**ஆலய பரிபாலன சபை - 077 337 4261**

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

சகல பரீட்சைகளுக்கும் பரீட்சைவரை தொடர்ச்சியான வகுப்புக்கள், குறைந்த கட்டணம், கூடியநேரம், எதிர்பார்க்கை வினாக்கள்

**முகாமைத்துவ உதவியாளர்**
புதிய பிரிவு
சனி (1/7), ஞாயிறு (2/7)
காலை 10.00 → 2.00

**SLAS**
பிரதி ஞாயிறு
9.00 → 4.00

**முன்பள்ளி ஆசிரியர்**
பிரதி ஞாயிறு
11.00 → 3.00

**சுங்க பரிசோதகர்**
சனி 12.30 → 4.00

**வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்**
பிரதிசனி 10.00 → 2.00

தொடர்புகளுக்கு,
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கியருகில்)

**வேலை ஆள்கள் தேவை**

Furniture Show Room இற்கு வேலை ஆள்கள் தேவை.
விற்பனைப் பிரதிநிதிகள்
கனரக வாகனச் சாரதி
கூலி ஆள்கள் (ஏற்றி இறக்குதல்)
தொடர்புகளுக்கு
077 713 9899

**தளபாட பொருத்துநர்கள் தேவை**

பிரபல தனியார் நிறுவனமொன்று விற்பனை செய்யும் மரத் தளபாடங்களை பொருத்துவதற்கு அனுபவமிக்க அனுபவமற்ற பொருத்துநர்கள் தேவை. மேலதிக பயிற்சி, பொருத்துதல் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவு என்பன வழங்கப்படும். தகுதியானவர்கள் நேரில் சமுகம் தரவும்.

காலம் : 04 ஆடி 2017
நேரம் : மு.ப.10.30 மணி முதல்
இடம் : 50, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**தொ.பே.: 077 176 8331**



ரஷ்யாவில் நடைபெறவுள்ள கால்பந்தாட்டத் தொடரில் நாளை நடைபெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் போர்த்துக்கல்லும் மெக்சிக்கோவும் மோதவுள்ளன. இந்த ஆட்டத்தில் ரொனால்டோ இல்லாமல் போர்த்துக்கல் களமிறங்கவுள்ள நிலையில் அந்த அணி நேற்று கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

# மெக்சிக்கோவுக்கு எதிராக ரொனால்டோ களமிறங்கார்



ரஷ்யாவில் நடைபெற்றுவரும் பிபா கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கால்பந்தாட்டத் தொடரில் இடம்பெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இருந்து போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ விடுவிக்கப்பட்டார்.

அமெரிக்காவில் உள்ள வாடகைத் தாயின்மூலம் ரொனால்டோவுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன. அவர்களைப் பார்வையிடுவதற்காகவே ரொனால்டோவுக்கு நாளைய ஆட்டத்தில் இருந்து விடுப்பு வழங்கப்பட்டது.

தனது குழந்தைகளைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கிய, போர்த்துக்கல் கால்பந்தாட்டச் சம்மேளனத்துக்கு நன்றி தெரிவித்த ரொனால்டோ, இந்த விடயத்தில், புரிந்து நடந்து கொண்டமைக்காக, போர்த்துக்கல் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரையும் தேசிய அணியின் பயிற்றுநரையும், எப்போதும் மறக்கப் போவதில்லை என்றும் குறிப்பிடார்.

இந்தத் தொடரில், போர்த்துக்கலின் குழுநிலை ஆட்டங்கள் மூன்றிலும், நாயகன் விருதை வென்ற ரொனால்டோ, அரையிறுதி ஆட்டத்தில் எதிர்பார்த்தளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சிவப்பிரகாச ம.வித்தி. மகுடம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தேயில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.சோபிகன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.சோபிகன் தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.தங்கேஸ்வரன், வெள்ளிப் பதக்கத்தையும் சென். ஜோன்ஸ் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த எஸ்.கபினேஸ், வி.தினுசாந் ஆகியோர் வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.